இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 168 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 30 சனிக்கிழமை 13.05.2017

## முல்லைத்தீவு விபத்தில் நேற்று ஒருவர் சாவு



முல்லைத்தீவு, மே. 13
முல்லைத்தீவு பெரிய சித்திமடுப் பகுதியில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் >> 25



## முள்ளிவாய்க்காலில் இன்னும் இறுதிப்போர் அடையாளங்கள்

யாழ்ப்பாணம், மே 13
இறுதிப்போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிக்காத துப்பாக்கிரவைகள் உக்கிய நிலையில் இப்போதும் காணப்படுகின்றன. >> 23

## ஆறாத வடுக்களாய் ஆழப் பதிந்த துயரங்கள்



படம்: அமரதாஸ்



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றுச் செம்மணியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 13
ஈழத்தில் நடைபெற்ற மிகப் பெரும் மனிதப் படுகொலையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் நடைபெற்றது. சுடரேற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. >> 23

# புதிய அரசமைப்பு தாமதிப்பது பற்றி மோடியிடம் முறையீடு

## நேற்று அவரைச் சந்தித்த கூட்டமைப்பினர் நிலமையை விளக்கினர்

யாழ்ப்பாணம், மே 13
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுவரும் காலதாமதம் குறித்து இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியிடம் முறையிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.
வெசாக் பண்டிகைக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பு வந்திருந்த மோடி நாடு திரும்பும்போது கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துச் சுமார் அரை மணி நேரம் பேசினார்.
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், >> 25

## அலைகடலெனத் திரண்டு மோடிக்கு மலையக மக்கள் உற்சாக வரவேற்பு

### மகிழ்ச்சியடைந்த அவர் தமிழில் பேசி அசத்தல்





கொழும்பு, மே 13
ஹற்றனுக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு அலைகடலெனத் திரண்டு வந்து மலையக மக்கள் இலங்கை, இந்திய தேசியக்கொடிகளை அசைத்தபடி நேற்று அமோக வரவேற்பளித்தனர்.
மக்கள் வெள்ளத்தைக் கண்டு மகிழ்வுற்ற மோடி, "உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி" என்று தமிழில் பேசி அசத்தினார். அத்துடன் தனது உரையின்போதும் இடையிடையே அவர் தமிழில் உரையாற்றினார். >> 25

## வித்தியா கொல்லப்பட்டு 2 வருடங்கள் நிறைவு



யாழ், மே 13
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை >> 25

## காங்கேசன் கடற் பகுதியில் மிதந்த ஹெரோயின் பொதி

### கடற்படையால் நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், மே 13
காங்கேசன்துறைக் கடற்பகுதியில்கரையில் இருந்து 10 கடல் மைல் தொலைவில் அநாதரவாக மிதந்து கொண்டிருந்த பொதிக்குள் இருந்து 9.3 கிலோ கிராம் ஹெரோயின் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.
ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் கடலில் மிதந்த பொதி ஒன்றைக் கண்டெடுத்த >> 25

## மோடிக்கு அன்பு அழைப்பு நேற்று விடுத்த சம்பந்தன்



யாழ்ப்பாணம், மே 13
இலங்கைக்கு அடுத்த தடவை வரும் போது, திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் மோடி வருகை தரவேண்டும் என்று தமிழ்த் >> 25

## உடல் நலன் கவனம் சம்பந்தரிடம் நேற்று மோடி உருக்கம்

யாழ்ப்பாணம், மே 13
"உடல் நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் உருக்கமாகத் தெரிவித்தார் இந்தியத் தலைமை அமைச்சர் >> 25

மாணவி வித்தியா கொலை வழக்கு

## இருப்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டது குற்றப் பத்திரிகை

யாழ்ப்பாணம், மே 13
புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கை 3 நீதிபதிகள் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்பாக விசாரிக்கப் >> 24

## தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க மோடி வலியுறுத்து

### மைத்திரி, ரணிலைச் சந்தித்தபோது நேரில் வெளிப்படுத்தினார்

கொழும்பு, மே 13
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்குமாறு கொழும்பிடம் வலியுறுத்தியிருக்கிறார் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி.
வெசாக் தினக் கொண்டாட்டத்துக்காக நேற்றுமுன்தினம் மாலை கொழும்பை வந்தடைந்தார் மோடி.
அவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் பேசினார்.
நேற்று மாலையில் இந்தியா புறப்பட்ட அவர், >> 25

## கூட்டமைப்புக்கு நான் வேண்டத்தகாதவன்

### அதனாலேயே மோடியின் சந்திப்புக்கு தன்னை அழைக்கவில்லை என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், மே 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான் வேண்டத்தகாதவன் ஆகிவிட்டேன். அதனாலேயே இந்தியத் தலைமை அமைச்சரைச் சந்திக்கும் நிகழ்வுக்குக் கூட்டமைப்பினர் என்னை அழைக்கவில்லை.
இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு >> 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதா குமாரசிங்கவின் எம்.பி. பதவி

## மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, மே 13
கீதா குமாரசிங்க தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகுதி இல்லாதவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு உயர்நீதிமன்றம் தற்காலிகத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
அவர் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளதால் 19 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் அவரால் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது என்று தென் மாகாண வாக்காளர்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் தொடர முடியாது என்று தீர்ப்பளித்திருந்தது.
இதனை அடுத்து அவரது நாடாளுமன்ற உறுப்புரிமைப் பதவி பறிக்கப்படுவதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.
இதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அதனைப் பரிசீலித்த உயர் நீதிமன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து ஒன்று கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு, நாடாளுமன்றச் செயலாளரின் பரிந்துரையின் பிரகாரம், கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பதிலாக புதியவர் ஒருவரை நியமிக்கும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாகப் பிற்போடுவதாக அறிவித்துள்ளது. (த)

## சிவமோகன், டக்ளஸ் கேட்டமையாலேயே பொருத்து வீடுகள்

*வடக்கு முதலமைச்சரிடம் கூறினாராம் சுவாமிநாதன்*

யாழ்ப்பாணம், மே 13
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உடனடியாக வீடுகள் வேண்டும் எனக் கேட்கிறார்கள். அவர்களுக்காகவே பொருத்து வீடுகளுக்கான அனுமதியைத் தான் அமைச்சரவையில் பெற்றதாக அமைச்சர் சுவாமிநாதன் எனக்கு கூறினார் என்று வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்குக்குப் பொருத்து வீட்டுத் திட்டம் வேண்டாம் எனக் கூட்டமைப்பு உறுதியாக வலியுறுத்தி வரும் நிலையிலும், 6 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
வடக்கு முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உடனடியாக வீடுகள் வேண்டும் எனக் கேட்கிறார்கள். அவர்களுக்காகவே பொருத்து வீடுகளுக்கான அனுமதியை அமைச்சரவையில் பெற்றதாக அமைச்சர் சுவாமிநாதன் என்னிடம் கூறினார்.
அத்துடன் அமைச்சர் சுவாமிநாதன் அண்மையில் கொழும்பில் என்னைச் சந்தித்துப் பொருத்து வீடு தொடர்பாகப் பேசினார். அதன்போது, வடக்கில் நீங்கள் மாகாண சபையின் ஒப்புதல் இல்லாமல் நினைத்தபடி செய்வீர்களாயின் வடக்கு மாகாண சபையை புறக்கணிப்பதாகவே நாம் கருதுவோம். எமது பிரதேசத்துக்கு இந்த பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை. வீடமைப்புத் திட்டங்களை எவ்வாறு மிகவும் சிக்கனமான முறையில் அமைக்கலாம் என்பது குறித்து எமக்கு வெளிநாடுகளில் இருந்து நிபுணர்கள் திட்டங்களை அனுப்பியுள்ளார்கள்.
அவ்வாறு அனுப்பப்பட்ட திட்டங்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் ஒரு பொருத்தமான மாற்றுத் திட்டத்தை முன்வைத்தார். இவற்றையே நாங்கள் பரிசீலித்து வருகின்றோம். எனவே உங்களது வீட்டுத் திட்டம் தொடர்பில் சாதகமான பதில் அளிக்க முடியாது. என அவருக்குப் பதிலளித்தேன்.
சிவமோகன், டக்ளஸ் போன்றவர்கள் தான் வடக்கில் உடனடியாக வீடு தேவை எனக் கோரிக்கை விடுகின்றனர். இதனால் தான் நான் உடனடியாக அமைச்சரவையில் பத்திரத்தைத் தாக்கல் செய்து அனுமதியைப் பெற்றேன் என அமைச்சர் சுவாமிநாதன் என்னிடம் கூறினார்- என்றார். (த-101)



# வாரணாசி - கொழும்பு வானூர்திச் சேவைகள் ஓகஸ்ட்டில் ஆரம்பம்

*கொழும்பில் கூறினார் மோடி*

கொழும்பு, மே 13
இந்தியாவின் வாரணாசிக்கும் கொழும்புக்கும் இடையிலான நேரடி விமானப் போக்குவரத்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
பன்னாட்டு வெசாக் தின நிகழ்வு இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது. நாளை 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளை பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதாகப் பௌத்த மதம் அமைந்துள்ளது. பௌத்த மதமானது வன்முறைகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்து, சமாதானத்தையும் அன்பையுமே போதிக்கின்றது.
கலாசாரத்தில் இரு நாடுகளும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளமையால் இலங்கையில் இருந்து வாரணாசிக்கு நேரடி வானூர்திச் சேவையை மேற்கொள்ள இந்திய அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி இந்த நேரடி வானூர்திச் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இதன்மூலம் புத்தகாயா மற்றும் பௌத்த யாத்திரிரை மேற்கொள்ளும் பௌத்தர்கள் இலகுவாகப் பயணிக்க முடியும். அத்துடன், தமிழ் மக்கள் சிவபெருமானையும் தரிசிக்க முடியும் என்றார். (த-4)

## கல் வீடு வேண்டும் என்றே கோரினோம்

*சுவாமிநாதனின் கூற்றுக்கு சிவமோகன் எம்.பி. பதில்*

யாழ்ப்பாணம், மே 13
பொருத்து வீட்டுத்திட்டம் வேண்டும் என நான் அமைச்சர் சுவாமிநாதனிடம் கோரவேயில்லை. எழுத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கல் வீடே வேண்டும் என்றே கோரியிருந்தேன் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், டக்ளஸ் ஆகியோர் உடனடியாக வீடு வேண்டும் என்று கேட்டதாலேயே தான் பொருத்து வீட்டுக்கான அனுமதியை அமைச்சரவையில் பெற்றதாக அமைச்சர் சுவாமிநாதன் தன்னிடம் கூறினார் என்று வடக்கு முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் வாழ்விடத்துக்காகப் பொருத்து வீட்டுத்திட்டம் வேண்டும் என நான் அமைச்சர் சுவாமிநாதனிடம் கோரவில்லை. எழுத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கல் வீடே வேண்டும் என்றே நான் கோரியிருந்தேன். ஆனால் பொருத்து வீடு வேண்டும் என நான் கோரியதாக அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கூறினார் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
வீட்டுத்திட்டம் தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பியிருந்தோம். கல் வீடு மட்டுமே வேண்டும் என அதில் கோரியிருந்தோம். அதேபோன்று நான் உள்ளிட்ட இணைத் தலைவர்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பொருத்துவீடு பொருத்தமற்ற வீடு எனவும், கல் வீடே வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினோம் - என்றார். (த-101)

## மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு

*மோடி முன்னிலையில் மைத்திரி முழக்கம்*

கொழும்பு, மே 13
மலையக மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் வெகுவிரைவிலேயே தீர்வொன்றை முன்வைத்து உலகளாவிய ரீதியாகச் சிறந்த நாடாக இலங்கையை உருவாக்குவோம்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சூளுரைத்தார்.
கண்டி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி திறந்து வைத்த பின்னர் நோர்வூட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வெசாக் நிகழ்வானது இம்முறை இலங்கையில் இடம்பெறுகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்காக இந்தியத் தலைமை அமைச்சர் இங்கு பயணம் செய்ததையிட்டும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.
இவர், இந்திய நிதியுதவி யின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலையொன்றைத் தற்போது திறந்து வைத்துள்ளார்.
2011 ஆம் ஆண்டு நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது, வைத்தியசாலைக்கான அடிக்கல்லை நட்டபோது இதன் திறப்பு விழாவுக்கு இந்தியப் தலைமை அமைச்சர் வருவார் என்றோ, நான் அரச தலைவராக இருப்பேன்என்றோநினைக்கவில்லை. தற்போது இது நடந்துள்ளமையையிட்டு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
வரலாற்று ரீதியாக இலங்கை, இந்தியாவின் உறவு எவ்வாறு இருந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. பௌத்த, இந்து தர்மத்திலும், இராமாயணத்திலும் இது குறித்து விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனை மேலும் நாம் பலப்படுத்த வேண்டும்.
அத்தோடு, மலையக மக்களுக்குப் பல பிரச்சினைகள் இருப்பதையும் நாம் அறிவோம். தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தி இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே எமது முதன்மையான குறிக்கோள். இவற்றோடு, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் நாம் வெகு விரைவிலேயே தீர்வை முன்வைப்போம். இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு உலகில் சிறந்த நாடாக இலங்கையை நாம் மாற்றுவோம் - என்றார். (த-4)

## மலையக மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு உதவி புரிவார் மோடி

*ஹற்றனில் ரணில் நம்பிக்கை*

கொழும்பு, மே 13
இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுக்க நரேந்திர மோடி சிறப்புக் கவனம் செலுத்துவார். இதற்காக நிதியுதவியைப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பார்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நோர்வூட் விளையாட்டு மைதானத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் பங்கேற்புடன் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனைக் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலை புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டமை இந்தப் பகுதியில் உள்ள தோட்டப்புற மக்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.
மலையக மக்களின் வீட்டுத் திட்டத்துக்காக அவர்களுக்கு 7 பேர்ச்சஸ் காணி வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த மக்கள் நாட்டின் பொருளாதாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு மிகச் சிறந்த பங்களிப்பு வழங்கியுள்ளனர்.
இந்த மக்களுக்குப் புதிய வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக நிதியுதவி வழங்க இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி சிறப்புக் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரத் தொண்டர் போராட்டம்;

# கொழும்பு அரசிடமிருந்து பதிலெதுவும் வரவில்லை

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 13
820 சுகாதாரத் தொண்டர்களையும் சிறப்புச் சுற்றறிக்கை ஊடாக நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க்கவேண்டும். அது தொடர்பில் சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளோம். பதில் இன்னும் கிடைக்கவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் சுகாதார தொண்டர்கள் 9 ஆவது நாளாக நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். அங்கு நேற்றுச் சென்ற அமைச்சர் சத்தியலிங்கம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சுகாதாரத் தொண்டர்களுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராக இருந்த காலம் முதல் அவரது கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போதுள்ள நிரந்தர நியமனம் தொடர்பான சுற்றறிக்கையில் சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தி அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே போர்க் காலத்தில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றியவர்களைச் சிறப்புச் சுற்றறிக்கையின் ஊடாக உள்ளீர்ப்பது குறித்துக் கவனம் செலுத்துமாறு கொழும்பு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது-என்றார். (த-4)

# எங்களை எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள்

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமற்போனோரின் உறவுகள் கவலை



யாழ்ப்பாணம், மே 13
"எங்களை அனைவரும் கைவிட்டுள்ளனர். 82 ஆவது நாளாக நாங்கள் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எவரும் கண்டுகொள்ளவில்லை"

இவ்வாறு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் போராட்டத்தில் ஈடுபடும் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுக் கவலை தெரிவித்தனர்.

"இன்று 82 ஆவது நாளாக இரவு பகலாக நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் தொடர்பில் தீர்க்கமான முடிவை எதிர்பார்த்து கவனவீர்ப்பை ஆரம்பித்தோம். ஆனால் எமது போராட்டத்தை எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

ஆனாலும் எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்" என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை,
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் வவுனியாவில் நேற்று 78 நாளாகவும், முல்லைத்தீவில் 66ஆவது நாளாகவும், மருதங்கேணியில் 60ஆவது நாளாகவும், திருகோணமலையில் 70 ஆவது நாளாகவும் நேற்றும் தொடர்ந்துமுன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-4-35)

# மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகள்

## ஹற்றனில் மோடி உறுதி



கொழும்பு, மே 13
இலங்கை, இந்திய அரசுகளிடையே ஒரு இணைப்புப் பாலமாகத் திகழும் மலையக மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக இந்திய அரசு தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று அந்த நாட்டு தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் மலையகத்தில் கட்டப்பட்டுவரும் 4 ஆயிரம் வீடுகளுக்கு மேலதிகமாக மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்துக்கொடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

நோர்வூட் மைதானத்தில் நேற்று மலையக மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகோதர, சகோதரிகளே, வணக்கம்!. இன்று உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். உங்களுடைய உற்சாகமான வரவேற்புக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் மத்தியில் உரையாற்றக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்.

புகழ்பெற்ற இலங்கைத் தேயிலை வளம்மிக்க மலையக மண்ணில்தான் விளைகின்றது. இலங்கைத் தேயிலை பல்லாயிரக்கணக்கான உலக மக்களின் தேர்வாக அமைய உங்களின் வியர்வையும், உழைப்பும் தான் காரணம்.

இன்று நாம் உங்களுடைய முன்னோர்களை நினைவுகூருகின்றோம். அவர்களின் வலுவான மனோ தைரியத்துக்கு தங்கள் வாழ்க்கைப் பயணத்தை இந்தியாவில் இருந்து அன்றைய இலங்கைக்கு மேற்கொண்டார்கள். இந்தப் பயணத்தின்போது பல்வேறு இன்னல்களையும், சவால்களையும் சந்திக்க வேண்டியநிலை அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால், அவர்கள் ஒருபோதும் பயணத்தைக் கைவிடவில்லை.

எனவே, அவர்களின் மனோ திடத்திற்குத் தலைவணங்குகின்றேன்.

உங்கள் தலைமுறையும் தொடர்ச்சியான கஷ்டங்களைச் சந்திக்க நேர்ந்தது. புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டில் உங்கள் சொந்த அடையாளத்தை உருவாக்கும் கடுமையான சவாலை நீங்கள் எதிர்கொண்டீர்கள். உரிமைகளை வென்றெடுப்பதற்காக அமைதியாகப் போராடினீர்கள்; போராடி வருகின்றீர்கள்.

உங்களுடைய (மலையக மக்களின்) உரிமைக்காகவும், மேம்பாட்டுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் உழைத்த சௌமியமூர்த்தி தொண்டமான் போன்ற தலைவர்களை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் அறிஞர் கனியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தெரிவித்திருந்தார். இது எல்லா ஊர்களும் ஒன்றே; எல்லா மக்களும் ஒன்றே என்பதையே பறைசாற்றுகின்றது. அதன் உண்மையான அர்த்தத்தை நீங்கள் பிரதிபலிக்கின்றீர்கள். இலங்கையை உங்கள் வீடாக்கிக் கொண்ட நீங்கள் இந்த அழகிய தேசத்தில் பிரிக்க முடியாத அங்கமாகிவிட்டீர்கள். நீங்கள் அனைவரும் தமிழ்த் தாயின் புதல்வர்களே!

உலகில் உள்ள மொழிகளில் மிகவும் பழைமை வாய்ந்த மொழி தமிழ்மொழி. அந்த மொழியையே நீங்களும் பேசுகிறீர்கள். அத்தோடு சிங்கள மொழியையும் பேசுகின்றீர்கள் என்பது பெருமைக்குரியது. மொழி என்பது மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் ஊடகம் மட்டுமல்ல. அது ஓர் கலாசாரத்தையும் வரையறுக்கின்றது. சமூகங்களைப் பிணைக்கின்றது. பிரிந்தவற்றைச் சேர்க்கவும் ஒரு வலுவான சக்தி அதற்கு உண்டு. சமூக வேறுபாடுகள் கொண்டாட்டங்களுக்கு வழிசமைக்க வேண்டுமே தவிர முரண்பாடுகளுக்கு வித்திடக்கூடாது.

அதேவேளை, இந்தியாவின் புரட்சித் தலைவரான எம். ஜி.ஆர்., முத்தையா முரளிதரன் போன்ற புகழ்பெற்றவர்கள் இலங்கை மண்ணிலேயே பிறந்துள்ளனர்.

மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இலங்கை அரசு 5 வருட காலத் திட்டத்தை முன்வைத்துள்ளது. அதற்கும் நாமும் ஆதரவைத் தெரிவிக்கின்றோம். இலங்கை அரசுடன் இணைந்து மலையக மக்களின் வளர்ச்சிக்காக இந்தியா பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன், இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அவசர அன்புலன்ஸ் சேவை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

மலையக மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்குத் துணையாக இருப்போம். அந்த எதிர்காலம் உங்கள் பிள்ளைகளின் கனவுகளைப் பூர்த்தி செய்வதாகவும், உங்களின் பாரம்பரியத்தைக் காக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை"-என்றார். (த-4)

# பிராந்திய வானூர்தி நிலையமாக பலாலி மாற்றப்படவேண்டும்

## மோடி குழுவிடம் விக்கி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 13
பலாலியை மக்களின் காணிகளைச் சுவீகரிக்காமல் பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றுவதோடு வர்த்தக நடவடிக்கைக்குப் பயன்படுத்தக் கூடியவாறு காங்கேசன்துறைத் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என இந்தியத் தலைமை அமைச்சர் மோடியுடன் வருகை தந்துள்ள டாக்டர் ஜெய்சங்கரிடம் எடுத்துக் கூறியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடியுடன் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இராப்போசனம் தொடர்பில் கேட்ட போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வந்த இந்தியத் தலைமை அமைச்சருக்கு நேற்று முன்தினம் இரவு அரச தலைவரால் விருந்துபசாரமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் நானும் கலந்து கொண்டிருந்தேன். இதன்போது மோடி எனக்குக் கைலாகு கொடுத்து நலன் விசாரித்தார். அவ்வளவும் தான் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் நான் இருந்த இடத்திலிருந்து மோடி சற்றுத் தொலைவிலேயே இருந்தார். அதனால் நான் அவருடன் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவருடன் வருகை தந்திருந்த டாக்டர் ஜெய்சங்கரிடம், சில விடயங்களைத் தெரியப்படுத்தினேன். அதாவது பலாலி வானூர்தி நிலையத்தை மக்களின் காணிகளைச் சுவீகரிக்காமல் பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்ற வேண்டும். அதே போன்று காங்கேசன்துறைத் துறைமுகத்தையும் வர்த்தக நடவடிக்கைக்குப் பயன்படுத்தக் கூடியவாறு அமைக்க வேண்டும். தனுஷ்கோடி தலைமன்னார் இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை வேண்டும் என அவரிடம் எடுத்துரைத்தேன் என்றார். (த-101)

# சம்பூர் ஆடை ஆலைப் பணிகளை பார்வையிட்டார் கிழக்கு முதல்வர்

மட்டக்களப்பு, மே 13
திருகோணமலை சம்பூர், சீதனவெளியில் அமைக்கப்பட்டு வரும் ஆடைத் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் தொடர்பில் கிழக்கு முதலமைச்சர் நேற்றுமுன்தினம் அங்கு நேரில்சென்று ஆராய்ந்தார்.

வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்கள் செல்வதை நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் கிழக்கில் ஆடைத் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கும் திட்டத்தைக் கிழக்கு முதலமைச்சர் முன்னெடுத்து வருகின்றார்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோண மலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் மையப்படுத்தி ஆடைத் தொழிற்சாலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக ஏறாவூரில் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலையில் தற்போது இளைஞர், பெண்கள் பலர் தொழில்புரிகின்றனர்.



சம்மாந்துறை மற்றும் சீதனவெளி பகுதிகளில் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (த-ய-46)

# மோடியின் ஹெலியால் 3 வீடுகளுக்குச் சேதம்

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி பயணித்த இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று ஹற்றன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் தரையிறங்கும்போது மைதானத்துக்கு அருகிலிருந்த 3 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான 3 ஹெலிகொப்டர்கள் நேற்று மதியம் 12.15 மணிக்கு குறித்த மைதானத்தில் தரையிறக்கப்பட்டன. இதன்போதே மூன்று வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த மைதானத்தில் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டபோதும் இவ்வாறே பல வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக் குடியுரிமையை நீக்கமாட்டாராம் கோத்தபாய

கொழும்பு, மே 13

"அரசியலில் ஈடுபட நான் தீர்மானிக்கவில்லை. எனவே எனது அமெரிக்கக் குடியுரிமையை நீக்கம் செய்து கொள்ளும் அவசியம் எனக்கு இல்லை"

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக கோத்தபாய ராஜபக்ச, தனது அமெரிக்க குடியுரிமையை நீக்கம் செய்ய உள்ளதாக இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகின.

இதற்காக கோத்தபாயவுக்கு நெருக்கமான சில வர்த்தகர்கள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் புதல்வியான இவங்கா ட்ரம்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே கோத்தபாய ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எனது மகன், மனைவியின் தாய், சகோதரர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். இதனால், நான் அடிக்கடி அமெரிக்காவுக்கு சென்று வரவேண்டும். அதேபோல் பகிரங்க அரசியலுக்கு வர நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. எனவே, எனது அமெரிக்க குடியுரிமையை நீக்கம் செய்து கொள்ளும் தேவை எனக்கு இல்லை.

அமெரிக்கக் குடியுரிமையை நீக்கம் செய்து கொள்ள நீண்டகாலம் எடுக்கும் என்பது பொய்யானது. குடியுரிமையை நீக்கிக் கொள்ள வேண்டுமாயின் அமெரிக்க தூதரகத்தில் கோரிக்கை மனுவை சமர்ப்பித்தால் 2 வாரங்களில் அதனை விலக்கிக் கொள்ள முடியும்" என்று கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு நடைபெறும் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிட உள்ளதாக மகிந்த அணியின் அரசியல்வாதிகள் கூறி வந்ததுடன் கோத்தபாயவும் அப்படியான உள் அர்த்தங்களை கொண்ட கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

இந்த நிலையில், கோத்தபாய தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

(வ)

# போதைப் பொருள் வியாபாரிகளை விரைவில் முற்றாக ஒழிப்போம்

## பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உறுதி

கொழும்பு.மே 13

பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதன் மூலம் போதைப்பொருள் வியாபாரிகள் வெற்றி பெற முடியாது. அவர்களை முற்றாக ஒழித்தே தீருவோம். இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பிலியந்தலையில் ஆயுததாரிகள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரி வினர்மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியுமால் ரங்கஜீவவைப் பார்ப்பதற்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் அவர் சென்றிருந்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போதைப்பொருள் வியாபாரத்தை முற்றாக ஒழிப்பதற்குப் பொலிஸ்துறையினர் மேற்கொண்டிருக்கும் கடுமையான நடவடிக்கைகளால் வியாபாரிகள் அச்சமடைந்துள்ளனர். சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் குழுக்கள் மீது, துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர். இந்த அச்சுறுத்தலுக்கு நாங்கள் அடிபணியப் போவதில்லை. அவர்களை வேரோடு களையும்வரை எங்களது நடவடிக்கைகள் தொடரும் - என்றார்.



(ஐ)

# மலையகத்துக்கென தனி பல்கலைக்கழகம் தேவை

## 25 ஆயிரம் வீடுகளும் வேண்டும் என்று மோடியிடம் கோரிக்கை

மலையகத்தின் இரு துருவங்களான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காரார் அங்கு இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை தனித் தனியாகச் சந்தித்து வீடுகள் மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றை அமைத்துத் தருமாறு கோரினர்.

நோர்வூட் மைதானத்தின் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த சிறப்பு அறையில் இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் மோடிக்கும் இடையிலான சந்திப்பின்போது, "25 ஆயிரம் வீடுகளை மலையக மக்களுக்காக இந்தியா கட்டிக்கொடுக்கவேண்டும். பல்கலைக்கழக வளாகம் ஒன்றை அமைக்க உதவியளிக்கவேண்டும். கல்வி மற்றும் கலாசார ரீதியில் இந்தியாவிடம் இருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றோம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் தான் சிறப்புக் கவனம் செலுத்துவதாக மோடி உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் மோடிக்கும் இடையிலான சந்திப்பின்போது, மலையக மக்களின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள தனிப் பல்கலைகழம் ஒன்றின் அவசியத்தை இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டத் தேயிலைத்துறை வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனை மீளக் கட்டியெழுப்ப இந்திய அரசு உதவியளிக்க வேண்டும் என்றும், மலையகத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசாரம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் ஆறுமுகன் தொண்டமான் கூறினார்.

இதற்குப் பதிலளித்த மோடி, "மலையகப் பல்கலைக்கழகம் தொடர்பில் நான் சிறப்புக் கவனம் செலுத்துகிறேன்" என்றார். கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தினூடாக இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி உரிய ஆவணங்களைப் பெற்று அனுப்புமாறும் மோடி கூறியுள்ளார்.

(து-4)

# திருமலைக் கடலில் மூழ்கி ஒருவர் சாவு

திருகோணமலை, ம 13

திருகோணமலை நகர சபைக்கருகிலுள்ள கடற்கரையில் நீராடச் சென்று நீரில் மூழ்கிப் பொலிஸ் உயிர் காப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழுந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. நேற்று மாலை 6.00 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தையான திருகோணமலை யைச்சேர்ந்த டி.சிறிராஷா (வயது -52) ஆவார்.

மட்டக்களப்பிலிருந்து நண்பர்களுடன் வந்திருந்த இவர் கடலில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் உடலம் திருகோண மலை பொது வைத்தியசாலை உடல அறையில் வைக்கப்பட்டுள்ளது. துறைமுகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-45)

# உலகளாவிய இணையத்தளத் தாக்குதலால் சில நாடுகளின் அரச சேவைகள் முடங்கின

லண்டன், மே 13

உலகம் முழுவதும் இணையத் தளங்கள் மீது பெரியளவிலான தாக்குதல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரிட்டன், ஸ்பெய்ன், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் முன்னணி அரச நிறுவனங்களின் இணைய சேவைகள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இவையெல்லாம் தனித்தனி தாக்குதல்களா? அல்லது ஒன்றோடொன்று தொடர்புடையவையா? என்பது தெளிவாகவில்லை.

பிரிட்டனின் தேசிய மருத்துவ சேவையின் இணையக் கட்டமைப்பின் மீது மிகப்பெரிய தாக்குதல் நடந்திருக்கிறது. பிரிட்டனின் முன்னணி மருத்துவமனைகளின் இணையகட்டமைப்பின் மீது நடந்துள்ள இந்தத் தாக்குதலில் நோயாளிகளுக்கான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரான்சோம்வயர் தாக்குதல் (ransomware attack) என்று அழைக்கப்படும் பிணைத் தொகை கேட்கும் மென்பொருளை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இணைய சேவைகளை மீண்டும் செயற்பட செய்யவேண்டுமானால் பணம் தரவேண்டும் என்று இந்த மென்பொருள் கேட்கும்.

பிரிட்டனின் சில மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் இணைய கட்டமைப்பு முழுமையாக செயலிழந்துபோனதால் பல இடங்களில் நோயாளிகள் அவசர கால சிகிச்சை பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

ஸ்பெய்ன் நாட்டில் பெருமளவிலான அந்நாட்டு நிறுவனங்களின் இணைய கட்டமைப்பும் இதேபோல் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (வ)



# பச்சிலைப்பள்ளி அணி சம்பியன்

கிளிநொச்சி மே 13

கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட எல்லே போட்டியில் முதன்முறையாக பச்சிலைப்பள்ளி அணி சம்பியனாகத் தெரிவானது.

மாவட்ட ரீதியிலான எல்லே போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. போட்டியில் பூநகரிப் பிரதேச செயலகத்தை வெற்றி கொண்ட பச்சிலைப் பள்ளி அணி, இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. கண்டாவளைப் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு நடப்புச் சம்பியன் இறுதிப்போட்டிக்கு கரைச்சிப் பிரதேச செயலக அணி தெரிவானது.

மழை காரணமாகப் போட்டி மட்டுப்படுத்தப்பட்டு, அணிக்கு 30 பந்துகள் என வழங்கப்பட்டன. முதலில் ஆடிய நடப்புச் சம்பியன் கரைச்சி அணி 30 பந்துகளில் 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. தினேஸ், நிரோசன், தங்கராசா ஆகியோர் ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பச்சிலைப் பள்ளி அணியினர் 4 ஓட்டங்களைப் பெற்று முதல் தடவையாக மாவட்ட எல்லே சம்பியனாகத் தெரிவாகினர்.

சஜீவன் இரண்டு ஓட்டங்களையும், சயந்தன் மற்றும் அபி ஆகியோர் தலா ஒவ்வோர் ஓட் டத்தையும் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

(ஐ-6)

# வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்து சிறுவன் சாவு

கொழும்பு.மே13

நாவுல, அம்பனப் பிரதேசத்தில் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்றின் அருகில் அமைந்திருந்த பழைய வீட்டின் சுவரே இவ்வாறு இடிந்து வீழ்ந்தது. அதில் சிக்குண்டே சிறுவன் உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டது.

அம்பனப் பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

சிறுவனின் உடலம் கொன்கஹவெல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தமிழ்க் கல்வி அமைச்சால் மலையகத்துக்கு நன்மையாம்

நுவரெலியா, மே 13

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மத்திய மாகாணத்துக்குத் தமிழ் கல்வி அமைச்சு மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சு கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருந்தால், இன்னும் பல அபிவிருத்திகளை மத்திய மாகாணத்தில் கண்டிருக்க முடியும்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

"மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு முக்கியமான ஒன்றாகும். மலையகப் பாடசாலைகளைகளுக்கு இந்த அமைச்சின் சேவைகள் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். நானும் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சராக இருந்து பல வேலைத்திட்டங்களைச் செய்திருக்கின்றேன்.

தற்பொழுது மீண்டும் அமைச்சு வழங்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். ஆனால் இந்த அமைச்சை வைத்துக் கொண்டு கொழும்பு கல்வி அமைச்சுடனும் இணைந்து செயற்பட முடியுமாக இருந்தால், அதுவே இந்த அமைச்சின் வெற்றியாக அமையும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 அவசர டெங்கு ஒழிப்பு நினைவேந்தலை குழப்பச் சதி

## கொழும்பு அரசின் திட்டமிட்ட செயல் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் திகதி வடக்கு - கிழக்கில் அவசர டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை முன்னெடுக்குமாறு கொழும்பு

சுகாதார அமைச்சு மாகாண சுகாதார அமைச்சுக்களுக்கு அறிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் குழப்பும் ஒரு சூழ்ச்சித் திட்டமாகவே கொழும்பு அரசு இதனை மேற்கொண்டுள்ளது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மே 18 ஆம், 19ஆம் திகதிகளில் அவசர தேசிய டெங்கு ஒழிப்பு தினம் என்ற போர்வையில் வடக்குகிழக்கில் உள்ள தமிழ் மக்களின் வீடுகளைப் படையினர் மூலம் சோதனையிடும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் படவுள்ளது.

அண்மையில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் நடத்தப்பட்ட நிலையில் மீண்டும் இரண்டு நாள்களைத் தேசிய டெங்கு ஒழிப்பு தினமாக முன்னெடுக்குமாறு மத்திய சுகாதார அமைச்சு மாகாண சுகாதார அமைச்சுக்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் நேற்று மாவட்ட சுகாதாரத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மே 18ஆம் திகதி தமிழர்களால் கடைப்பிடிக்கப் படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் குழப்பும் வகையிலேயே கொழும்பு அரசு நன்கு திட்டமிட்டு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலைக் கேள்விப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், இது வேண்டுமென்றே தமிழ் மக்களைப் பழிவாங்கும் செயல். முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட எம் மக்களை அனைவரும் அஞ்சலிக்கும் நாளில் இவ்வாறு தேசிய நிகழ்வை நடத்தி படையினரின் ஒத்துழைப்புடன் வீடுகளைச் சோதனையிடுவதைத் தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள் என விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இதே நாளில் தேசிய வறுமை ஒழிப்பு தினம் எனக் கூறி முல்லைத்தீவுக்கு அரச தலைவர் மைத்திரிபால வரும் திட்டம் ஒன்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மற்றுமோர் தேசிய வேலைத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது போரில் தமது உறவுகளைக் கொத்துக் கொத்தாகப் பறிகொடுத்த தமிழ் மக்களை மேலும் நோகடிக்கும் செயல் என அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (த-101)

## ஆசனப்பட்டி அணியாததால் ரூ. 1,000 தண்டம்

யாழ்ப்பாணம்,மே 13

வாகனத்தில் பயணிக்கும் போது ஆசனப்பட்டி அணியாமல் சென்றவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் அறிவிடப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவரை ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு மன்று உத்தரவிட்டது. (வ-12)

## இராம பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 13

இணுவில் மருதனார் மட ஸ்ரீசுந்தர ஆஞ்சனேயர் ஆலய சுந்தரகாண்ட மங்கல யக்ஞம் ஸ்ரீ ஆங்சனேய வீரதீரம் கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 7 தினங்கள் நடைபெறும் இந்த விழாவில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீராம பட்டாபிஷேக ஆனந்தக் கோலமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

மட்டக்களப்பு,மே 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் உட்பட நால்வரையும் எதிர்வரும் காலத்தில் நீதிவான் நீதிமன்றுக்கு அழைத்து வரத் தேவையில்லை என்று மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருவதால் மேல் நீதிமன்ற வழக்கின் போதே அவர்களை அழைத்து வரும்படி மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# ஒழுங்கைகளில் கழிவுகள் வீசுவதால் பொதுச் சுகாதாரத்துக்குப் பங்கம்

## அச்சுவேலி மக்கள் கவலை

அச்சுவேலி, மே 13

அச்சுவேலிப் பகுதியில் உள்ளூர் ஒழுங்கைகள் மற்றும் அவற்றின் சந்திகளில் கழிவுகள் இரவோடு இரவாக கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதோடு பொதுச் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

அச்சுவேலி பகுதியில் முறைகேடான வகையில் கழிவுப் பொருள் கொட்டப்படுகின்றமை தொடர்பாக பொதுமக்கள் கூடும் இடங்களில் அவர்களின் பேசுபொருளாக இருந்து வருகின்றது. அத்துடன், அண்மையில் அச்சுவேலிபொலிஸ்நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் இது தொடர்பான கருத்துக்கள் மக்களால் முன் வைக்கப்பட்டன.

அச்சுவேலி பகுதியில் முறைகேடான விதத்தில் கழிவுகள் பொதுமக்கள் நடமாடும் இடங்களில் வீசப்படுவது தொடர்பாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், எந்தவிதமான நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

"குப்பைகள் அகற்றும் நடைமுறையில் அட்டவணைப்படுத்தப்பட்ட முறைமையின் பிரகாரம் குறிப்பிட்ட வீதிகள், ஒழுங்கைகள் உள்ளடக்கப்படுவது தொடர்பாக வலி. கிழக்கு பிரதேச சபை பகிரங்கமாக அறிவித்து அவற்றை அகற்ற முன்வர வேண்டும்" என்று பொதுமக்கள் கோருகின்றனர். (வ-11)

## கதிரமலைச் சிவனின் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், மே 13

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 25ஆம் திகதி மு.ப.10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

# மாமியாரைத் தாக்கிய குற்றச்சாட்டில் குடும்பத்தலைவருக்கு விளக்கமறியல்

ஊர்காவற்றுறை, மே 13

மது போதையில் மனைவி என மாமியார் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச் சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மனைவி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு ஒரு வழக்காகவும் , மாமியார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு பிறிதொரு வழக்காகவும் குடும்பத்தலைவருக்கு எதிராக நேற்று இரு வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ. சபேசன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நான் வீட்டுக்கு வந்த வேளை மனைவி எனக்கு சாப்பாடு போட்டு தரவில்லை அதனால் ஆத்திரமுற்று மனைவியைத் தாக்கினேன் என்று சந்தேகநபர் மன்றில் தெரிவித்தார்.

கணவருடன் ஒற்றுமையாகப் போறேன் என்று சந்தேகநபரின் மனைவி மன்றிடம் தெரிவித்தார்.

மனைவியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் முன்வைக்கப்பட்ட வழக்கில் சந்தேகநபரை 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல மன்று உத்தரவிட்டது.

தொடர்ந்து மாமியார் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் முன்வைக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போது. "நான் வீட்டுக்கு சென்ற வேளை மாமி நித்திரையாக இருந்தார். நான் எனது மனைவிதான் என நினைத்தே அவர் மீது தாக்குதல் நடத்தினேன். பின்னர் தான் அவர் மாமி என எனக்குத் தெரியும்" என்று சந்தேகநபர் மன்றிடம் தெரிவித்தார்.

இந்த வழக்கை எதிர்வரும் 26ஆம் திகதி வரை ஒத்திவைத்த மன்று, அதுவரை சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டது. (வ -37)

# பயன்தரு மரங்கள் அரியாலையில் நடுகை



யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் அரியாலை எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தில் பயன் தரும் மரங்கள் நேற்றுமுன்தினம் நடப்பட்டன. றோட்டறிக் மாவட்டம் 3220 இன் மரங்களை நாட்டுவோம் செயற்றிட்டத்தின் கீழ் இந்த மரங்கள் நேற்று நடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் உள்ள மரங்களுக்கு கடந்த மாதம் 3 மொழிகளிலும் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை மற்றும் பயனுள்ள வாக்கியங்கள் என்பன பொருத்தப்பட்டன.

இந்த செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள றோட்டறிக் மாவட்டம் 3220இன் குழுவினர், யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் றோட்டறிக் கழகங்களை இணைத்து நேற்று இந்த மரம் நடுகை செயற்றிட்டத்தில் ஈடுபட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## குடித்துவிட்டு வாகனம் ஓடியவர் சமூகப் பணியில்

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்த யாழ்ப்பாணம் நீதிவான் மன்று, அவரை 100 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. குறித்த குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்த வழக்கை விசாரித்த பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம், 100 மணித்தியாலயங்கள் சமூக சேவையிலும் ஈடுபடுமாறும் அவருக்கு உத்தரவிட்டார். மேலும் அவருடைய சாரத்திய அனுமதிப்பத்திரத்தை 3 மாதங்கள் நிறுத்திவைக்குமாறும் மன்று கட்டளையிட்டது. (வ-12)

## சாரதி செலுத்தினார் ரூபா 4,000 தண்டம்

யாழ்ப்பாணம் மே.13

பேருந்து தரிப்பிடம் இல்லாத இடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிய சாரதிக்கு 4ஆயிரம் ரூபா தண்டப்பணம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் அறவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் மன்றுக்கு விசாரணைக்கு வந்தது. சாரதி தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட பதில் நீதிவான், இனிவருங் காலங்களில் தரிப்பிடம் இல்லாத இடத்தில் பேருந்தை நிறுத்தக் கூடாது என்று எச்சரித்தார். (வ-12)

## சாரதிப் பத்திரம் தெளிவற்றதால் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், மே 13

தெளிவற்ற சாரதி அனுமதிப் பத்திரம் வைத்துக்கொண்டு வாகனம் செலுத்தியவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் அறவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு விசாரணைக்கு வந்தது. குற்றச்சாட்டை சாரதி ஒப்புக் கொண்டார். அவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம், புதிய சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்துக்கொள்ளுமாறு சாரதிக்கு அறிவுறுத்தினார். (வ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹென்றிஸ் மாணவர்களுக்கு தலைமைத்துவச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே13

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் மாணவ தலைவர்களுக்கான 'பொறுப்பேற்கும் தலைமைத்துவம்' எனும் தலைப்பிலான ஒருநாள் செயலமர்வு கடந்த புதன் கிழமைசாட்டிமாதாயாத்திரைத்தளவளாகத்தில்இடம்பெற்றது. உளமகிழ்வூட்டும் இல்லத்தின் வளவாளர் குழுவினர் கு. மகிழ்ச்சிகரன்,சு.இக்னேசியஸ்ஆகியோர்இந்தச்செயலமர்வை வழிநடத்தியிருந்தனர்.

36 மாணவ தலைவர்கள் பங்குகொண்ட செயலமர்வை கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்கவுள்ள அருட்பணி ஹொட்பிறி யோயல் மற்றும் பிரதி அதிபர் ஆகியோர் ஒழுங்க மைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ய)

## நோயாளியின் உறவினர்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 13

யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு தெல்லிப்பழையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக மாற்றலாகி வந்த நபரின் உறவினர்களைத் தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாண போதனா மருத்துவமனை பதில் பணிப்பாளர் மருத்துவர் வி.சண்முகராசா தெரிவித்தார்.

கடந்த 9ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை இரவு11.45மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து மாற்றலாகி வந்த ஆண் நோயாளியின் பெயர் பாலா. இவருக்கு 55 தொடக்கம் 60 வயது இருக்கும். 5.7 அடி உயரம். இவருக்கு முகத்தில் தாடி வளர்ந்திருந்தது. இவரது முகவரி தெரியாது

இந்த நோயாளிக்குத்தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. எனினும் இவருடைய உடல்நிலை தற்போது கவலைக்கிடமாகவுள்ளதால் உறவினர்களை வந்து தொடர்புகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## வடக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக சி.ஏ.மோகனதாஸ் நியமனம்

யாழ்ப்பாணம், மே13

வடக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக சி.ஏ. மோகனதாஸ் வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டார். அவரின் நியமனம் நேற்றுமுதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றியதிருமதி ரூபினிவரதலிங்கம் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளராக மாற்றம் பெற்றுள்ளார்.

இந்த நிலையிலேயே முல்லைத்தீவு மாவட்டத்தின்மேலதிகசெயலராககடமையாற்றியசி.ஏ.மோகனதாஸ்நேற்றுமுதல் வடக்குமாகாணபொதுச்சேவைஆணைக் குழுவின்செயலாளராகநியமிக்கப்பட்டார். கொழும்புஉள்நாட்டுஅலுவல்கள்அமைச்சால்சி.ஏ.மோகனதாஸ்கடந்த4மாதங்களுக்கு முன்பாக விடுவிக்கப்பட்டார். எனினும் அவருக்கு வடக்கு மாகாண சபையால் எந்தப் பதவிகளும் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்விலும்அவருக்கானநியமனம்தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக்கடமையாற்றியவர் அதே அமைச்சில் உதவிச் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். (வ-101)

## கோப்பாய்வைத்தியசாலையில் ரூ.10லட்சம்செலவில்சீரமைப்பு

அச்சுவேலி, மே13

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் "நவமங்கையர்நிவாசம்" அமைப்பால்10 லட்சம் ரூபா செலவிலான சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநோயாளர்பிரிவு, மலசலகூடங்கள், நீர்விநியோகக்குழாய் இணைப்புமற்றும் மின்சார இணைப்பு ஆகியவற்றின் திருத்தவேலைகள்மேற்கொள்ளப்பட்டன வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியசாலையில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய சீரமைப்பு வேலைகள் தொடர்பாக நவமங்கையர் நிவாசத்தின் கவனத்துக்குதெரியப்படுத்தியதைஅடுத்து அவை நிறைவேற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## வீதிசமிக்ஞையை மீறியவருக்குத்தண்டம்

யாழ்ப்பாணம்,மே 13

வீதிச்சமிக்ஞையில் உள்ளசிவப்புநிறசமிக்ஞையின்போதுவாகனம்செலுத்தியவரிடம்5ஆயிரம்ரூபாதண்டப்பணம்யாழ்ப்பாணம்நீதிவான்மன்றால் அறவிடப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்தனதுகுற்றத்தைஏற்றுக்கொண்டார். அவரை 5ஆயிரம்ரூபாதண்டப்பணம்செலுத்துமாறுபதில்நீதிவான்உத்தரவிட்டார். (வ-12)

## திறந்த பல்கலையால் விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், மே13

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் தொடர்பாடலுக்கான பேச்சு ஆங்கிலம், மனிதவள முகாமைத்துவம் ஆகிய குறுகிய காலக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுமேற்பட்ட அனைவரும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்தார்.

"இந்தக் கற்கை நெறிகள் 3 மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில், அதற்கான அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்." என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-21)

## திருத்தம்

யாழ்ப்பாணம், மே13

உதயன்பத்திரிகையில் நேற்றைய பதிப்பில் 5ஆம் பக்கத்தில் வெளியாகிய மூக்குக் கண்ணாடி வழங்கல் தொடர்பான செய்தியில் கோப்பாய் பிரதேச தேசோதய சபைத் தலைவரின் பெயர் என்.தனேந்திரன் என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனினும்கோப்பாய் பிரதேச தேசோதய சபைத் தலைவர் இ.மயில் வாகனம் என்பதே சரியானது. அத்தோடுமூக்குக்கண்ணாடிவழங்கலுக்கு துசா மூக்குகண்ணாடி நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது. (ஆ-ர்)




### மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 100 |
| கத்தரி | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 200 | 170 | 200 | 200-300 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 120 | 140 | 120 | 120-140 |
| பாகல் | 170 | 140 | 120 | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 200 | 280 | 200 | 240 |
| பூசணி | 60 | 40 | 60 | 60 |
| தக்காளி | 120 | 100 | 120 | 120-140 |
| வாழைக்காய் | 60 | 40 | 30 | 60 |
| கீரை | 30 | 20 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 160 | 170 | 160 | 160 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | | 200 | 160 |
| வெண்டி | 80 | 90 | 80 | 80 |
| போஞ்சி | 180 | 140 | 240 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 50-60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 80 | 50 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 20 |
| கறிமிளகாய் | 140 | | 120 | 160 |
| இராசவள்ளி | 180 | 220 | 250 | 220 |
| [illegible] | 150 | 100 | 120 | 100 |

### நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|
| இறால் | 800 | 1100 | 1000 |
| நண்டு | 400 | 400 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 |
| பாரை | 500 | 800 | 600 |
| சுறா | 600 | 1000 | – |
| சீலா | 400 | 600 | 500 |
| விளை | 500 | 600 | – |
| முரல் | 300 | 600 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 500 |
| கிளாக்கன் | 800 | 800 | – |
| ஒரா | 300 | 400 | – |
| திரளி | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 400 | – |
| சூடை | 100 | 200 | 200 |
| ஒட்டி | 150 | 400 | – |
| திருக்கை | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 300 | – |
| கொய் | 150 | 130 | 100 |
| பாலை | 200 | 450 | 400 |
| வாழை | 150 | 320 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்கல்விக்கு முன்னுரிமை வழங்க தவறியமையாலேயே பட்டதாரிகள் வீதியில்

## வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

சாவகச்சேரி,மே 13
எமது பாடசாலைக் கல்வி நடைமுறையே இன்று பட்டதாரிகளை வேலைவாய்ப்பு கோரிப் போராட்டத்தில் இறங்க வைத்துள்ளது. பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாக வேண்டுமென்ற சிந்தனையே இவ்வாறான போராட்டங்களுக்குக் காரணமாக உள்ளது. தொழிற்கல்விக்கு முன்னுரிமை கொடுக்காமல் கலைத்துறை, வணிகத் துறைகளில் பட்டம் பெறுவதிலேயே குறிக்கோளாகச் செயற்பட்டதால் தான் இந்த நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

நேற்றுத் தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'தென்னருவி' என்னும் வர்த்தகபாட ஆக்கப் பொருள்களின் காட்சிப்படுத்தல் கூடங்களைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையுடன் ஆரம்பமாகும் பரீட்சை முறைகள் பல்கலைக்கழகம் வரை சென்று முடிவடைகின்றன. தொழிற்முறைக் கல்வித் திட்டம் நடைமுறையில் இல்லாததால் ஏற்பட்ட விளைவுகளை எதிர்கொண்டு தற்போது க.பொ.த. உயர்தர வகுப்பில் தொழில்முறைக் கல்வி உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கற்கும் மாணவர்கள் தாமாகவே தொழில் முறைகளை ஆரம்பித்தால் வேலையில்லாப் போராட்டங்கள் நின்றுவிடும்.

பட்டம் பெற்றதும் அரசவேலை கிடைக்கவேண்டுமென்ற எண்ணம் மாணவர் மத்தியில் காணப்படுகின்றது. சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ள எவரும் முன்வராததால் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. முன்னைய காலத்தில் படித்தவர்களாயினும் சரி படிக்காதவர்களாயினும் சரி அரச வேலையை நாடி ஓடவில்லை. மாறாக தாமாக ஒவ்வொரு தொழில்களை ஆரம்பித்து தமது வாழ்க்கைக்குத் தேவையான நிதிவளங்களைப் பெற்றிருந்தனர். அரச வேலைகளுக்குச் செல்ல பலர் முன்வராததால் குறைந்த கல்வித் தகைமைகளுடன் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் உண்டு. அரச தொழிலுக்காக மதம் மாறியவர்களும் உண்டு. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்த கோட்டாக்கள் மூலம் பலர் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இன்றைய காலத்தில் போட்டிப் பரீட்சைகள் நடத்தி வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரச தொழிலுக்குள் செல்ல வேண்டுமென்ற அக்கறையே இதற்குக் காரணமாகும்.

இன்றைய நிகழ்வானது மாணவர்களைச் சுயதொழில் ஏற்பாடுகளை தாமாகவே மேற்கொள்ளம் ஒரு உந்துசக்தியாகப் பார்க்கப்படுகிறது. தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் மூன்றாவது வருடமாக வர்த்தகக் கண்காட்சி நடத்தப்படுவது உண்மையில் அனைவரும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும். இதனால் மாணவர்கள் ஊக்குவிக்கப்படவதுடன் எதிர்காலத்தில் சிறந்த தொழில் முயற்சியா ளர்களாக பலர் மாறுவார்களென்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு ஒவ்வொரு வலயத்திலும் வர்த்தக பாடக் கண்காட்சிகளை நடத்தினால் பல நூறு தொழில் முயற்சியாளர்களை உருவாக்க முடியும். நான் ஒரு பட்டதாரியாக இருந்தபோதிலும் அரச பணியை வேண்டாமென உதறித் தள்ளிச் சொந்த முயற்சியில் ஈடுபட்டதால் தான் இன்றைய மாகாண சபையில் அமைச்சராகி உள்ளேன். இது என்னால் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சிக்குக் கிடைத்த பயன் என்றே கூறுவேன். அரசிடமிருந்து சம்பளம் பெறக்கூடாது என நினைத்த எனக்கு மக்கள் வழங்கிய பதவி அரச சம்பளம் பெற வைத்துள்ளது என்றார். (த-9)



## தென்னருவி ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நேற்று ஆரம்பம்

சாவகச்சேரி, மே 13
தென்மராட்சி கல்வி வலய வணிக பாட அலகினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தென்னருவி' என்னும் ஆக்கப் பொருட்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்றுச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்ட சிறப்புப் பந்தல்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் மாணவர்களின் ஆக்கப் பொருள்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களின் ஆக்கப் பொருள்களும், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக நிதி நிறுவனங்களின் காட்சிக் கூடங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமை விருந்தினராகவும், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் சிறப்பு விருந்தினராகவும், வட மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செல்வன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோ, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் ஆகியோர் இனிய விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களெனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 40 க்கு மேற்பட்ட உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றுள் மாற்றுத் திறனாளிகள், பெண்கள் போன்றோரினால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன இவற்றுடன் இலவச மருத்துவ முகாம் மற்றும் மாணவர்களின் விழிப்புணர்வு நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றன. (த-9)

### வீடமைப்பு அதிகார சபையின்

## வீட்டுத் திட்டத்துக்கு மணல் பெற அனுமதி

யாழ்ப்பாணம் மே 13
தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்குரிய மணலை நேற்றில் இருந்து பெறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்குரிய மணல் கிடைக்காமையால் வீட்டுக்கான அத்திவாரம் மட்டும் வெட்டப்பட்ட நிலையில் கடந்த ஒரு மாத காலமாக வேலைகள் தடைப்பட்டிருந்தன. வழமையாக மணல் பெறும் நாகர்கோவில் பகுதியில் மணல் அகழவேண்டாம் என வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்ததை அடுத்து இந்தத் தடை ஏற்பட்டது.

இது குறித்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் மாவட்டச் செயலரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனை அடுத்து 4 நாள்கள் மணல் பெறுவதற்கு சிறப்பு அனுமதியொன்றை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பெற்றுக் கொடுத்துள்ளார். நாகர்கோவில் பகுதியில் நேற்று மணல் அகழும் பணிகளில் பாரஊர்தி உரிமையாளர்கள் ஈடுபட்டனர். இன்று சனிக்கிழமை மற்றும் எதிர்வரும் செவ்வாய்,புதன்கிழமைகளில் மணல் அள்ளுவதற்கான சிறப்பு அனுமதி பாரஊர்தி உரிமையாளர்ளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அள்ளப்படும் மணல் நாவற்குழி, சங்கானை, மந்துவில், தெல்லிப்பழை, சின்னமடு ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்படவுள்ளது. அத்திவாரம் கட்டும் வேலைகளுக்கு இந்த மணல் போதுமானதாக இருக்கும். மிகுதி வேலைகளுக்குப் பகுதியாக மணல் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்என்றார். (த-ரி)

### ஊர்காவற்றுறை கர்ப்பிணி கொலை;

## தகவல்கள் தெரியும் எனக் கூறிய இருவரின் வாக்குமூலமும் பதிவு

யாழ்ப்பாணம், மே 13
ஊர்காவற்துறை கர்ப்பிணிப் பெண் கொலைச் சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரியும் எனக் கூறிய இருவரிடமும் தாம் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டதாக ஊர்காவற்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் இ. சபேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது இரு சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்த ப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது . குறித்த சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரியும் எனக் கூறிய இரு நபர்களிடமும் வாக்கு மூலத்தைத் தாம் பெற்றுக் கொண்டதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சி நீதிமன்றில் திருட்டுக் குற்றம் தொடர்பிலான வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட குற்றவாளி, ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் கொலை தொடர்பில் தனக்குச் சில தகவல்கள் தெரியும் என நீதிமன்றில் கூறியிருந்தார்.

இதனை அடுத்து கிளிநொச்சி நீதிபதி அந்த நபரை ஊர்காவற்துறை நீதிமன்றில் சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். இதன்படி அவரிடம் ஊர்காவறுறைப் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

அதேவேளை, சிறைச்சாலையில் சந்தேக நபர்களிடம் தனக்கு இந்த சம்பவம் குறித்துச் சில தகவல்கள் தெரியும். அதனை நீதி மன்றில் தெரிவிக்க வேண்டுமாயின் தனக்கு 5 இலட்ச ரூபா தரவேண்டும் எனப் ஒருவர் பேரம் பேசியதாகக் கூறப்பட்டது. குறித்த நபரிடமும் தாம்வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக ஊர்காவற்துறை பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சிறைசாலையில் சந்தேக நபர்களுடன் பேரம் பேசியதாகக் கூறப்படும் நபர் நெடுந்தீவில் சிறுமி ஒருவரைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்த குற்றத்துக்காக யாழ்.மேல் நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-37)

## பன்னாட்டுத் தாதியர் தின வைபவம் வவுனியாவில்



வவுனியா, மே 13
பன்னாட்டு தாதியர் தினம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு முற்பகல் 11 மணியளவில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அகிலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பவானி பசுபதிராஜா, வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன், வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர், தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்கள், தாதிய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந் நிகழ்வில் புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் தாதிய உத்தியோகத்தர்களின் சத்தியாப்பிரமாணமும் இடம்பெற்றது.

தாதியர் கல்லூரி மாணவிகளின் பரத நடன நிகழ்வு, கண்டிய நடனம், பாடல், நகைச்சுவை நாடகம் எனப் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுவின்

# தீர்மானத்தை மீறி மாவட்டச் செயலர் செயற்படக் கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 13

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்தை மீறி மாவட்டச் செயலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அவரே பொறுப்பாளியாகும் நிலைமையே ஏற்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்களை எட்டிய பின்னர் அந்தத் தீர்மானத்தை மீறி மாவட்டச் செயலர் செயல்படுவாராயின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒப்புக்கு இடம்பெறுவதாகவே எண்ணவேண்டியிருக்கும். அத்தோடு தீர்மானங்களை மீறி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மாவட்டச் செயலர் மட்டுமே பொறுப்பாளியாவார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,092 தமிழ் மக்களுக்கும் 917 முஸ்லிம் மக்களுக்கும் காணி இல்லை எனக் கண்டறியப்பட்டது. இதன்போது ஒரு தரப்புக்கு மட்டும் காணி வழங்கினால் ஏற்படும் எதிர் விளைவுகள் சுட்டிக் காட்டப்பட்டு இரு தரப்புக்களுக்கும் ஏக காலத்தில் வழங்குவதாகவே தீர்மானம் எட்டப்பட்டது. இந்த நிலையில் தமிழ் மக்களின் குடி யேற்றத்துக்காக இன்றுவரை எந்த ஒரு இடத் தெரிவும் இடம்பெறவில்லை. மாறாக முஸ்லிம் மக்களுக்காக மட்டுமே இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடமும் ஓர் முக்கியத்துவம் வாய்ந்த இடம். அதாவது தேக்கம் செய்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட குறித்த நிலத்தைக் குடி யேற்றத்துக்காக விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத் துக்கு மாவட்டச் செயலர் பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளார். இருப்பினும் குறித்த திணைக்களம் இதுவரை எழுத்து மூலமான அனுமதியை வழங்காத நிலையில் ஒரு அரசியல்வாதியைத் திருப்திப் படுத்துவதற்காக அந்த இடத்தில் வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இருதரப்புக்களுக்கும் நிலம் வழங்க ஆவன செய்யவேண்டும். அல்லது அதனால் ஏற்படும் பாதக நிலைமைகளுக்குகான முழுப்பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டும் - என்றார். (த - 101)

# தொடருந்து விபத்தையடுத்து மூடப்பட்டது ரயில் கடவை

## கண்டித்து மக்கள் நேற்றுப் போராட்டம்



தென்மராட்சி, மே.13

தொடருந்துடன் படையினரின் வாகனம் மோதியதையடுத்து தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்ட வந்த தொடருந்துக் கடவையைத் தொடருந்துத் திணைக்களத்தினர் நேற்று முதல் மூடியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று அந்த இடத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற கடவையில் வீதியைக் கடக்க முயன்ற படையினரின் வாகனத்தை நேற்று முன் தினம் தொடருந்து மோதியது. இதனால் தொடருந்துப் பாதையும் சேதமடைந்தது. பாதையின் புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டன. இரவு 10.00 மணியளவில் அந்தப் பாதை ஊடாகத் தற்காலிகமாகத் தொடருந்துகள் செல்ல ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் காலை அங்கு வந்த தொடருந்துத் திணைக்களப் பணியாளர்கள் தற்காலிகமாக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அந்தக் கடவையை மூடினர்.

இதனையடுத்து அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் அங்கு குவிந்தனர். தமது போக்குவரத்துக்காகக் கடவையை அமைக்க வேண்டுமென அவர்கள் கோசம் எழுப்பிப் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடருந்துத் திணைக்களப் பணியாளர்களை வேலை செய்ய விடாமல் தடுத்தனர்.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு வந்து கடவையை அப்புறப் படுத்துவதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூறினர். அதனையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வேளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு வருகை தந்து மக்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

முன்னர் தொடருந்துச் சேவைகள் இடம்பெற்ற காலத்தில் ஏ 9 சாலையிலிருந்து சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் சாலை ஊடாகச் சென்ற கடவையைக் கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை, அல்லாரை, மீசாலை கிழக்கு, சாவகச்சேரி தெற்கு, கச்சாய் போன்ற இடங்களைச் சேர்ந்த மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்தி வந்தனர்.

போர் இடர் வேளையில் தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகள் அப்புறப்படுத்தப்பட்டுக் காணப்பட்டதால் 2012 ஆம் ஆண்டு புதிதாக தொடருந்துப் பாதை அமைக்கும் பணிகள் இடம்பெற்றன. அந்த வேளையில் சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் வீதியில் கடவை அமைக்கப்படவில்லை.

சங்கத்தானைக்கும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் இடைப்பட்ட சுமார் 600 மீற்றர் தூரத்தில் நான்கு கடவைகள் உள்ளதால் 500 மீற்றருக்கு ஒரு கடவை என்னும் விதிமுறைக்கமைய சங்கத்தானையிலும் வைத்தியசாலைக்கு முன்பாகவும் மட்டும் கடவைகள் அமைக்கப்படுமெனவும், இடையில் காணப்பட்ட இரு கடவைகளும் அகற்றப்படுமெனவும் தொடருந்துத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் கடவை ஊடாகத் தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயணிப்பதால் தமக்குக் கடவை அமைக்கப்படவேண்டுமெனக் கோரி இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2012 ஆம் ஆண்டு பளை வரை தொடருந்துச் சேவையை ஆரம்பிக்க போக்குவரத்து அமைச்சர் வருகை தந்தபோது அங்கு சென்ற இந்தப் பகுதி மக்கள் கடவை அமைத்து வழங்குமாறு அமைச்சரைக் கேட்டிருந்தனர். குறித்த இடத்தில் கடவை அமைக்குமாறு போக்குவரத்து அமைச்சரும் தொடருந்துத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால் இதுவரை கடவை அமைக்கப்படவில்லை.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தையடுத்து தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டு வந்த பாதையும் தற்போது மக்களுக்கு இல்லாமல் போயுள்ளது எனவும், தொடர்ந்து போராட்டங்கள் நடத்தி கடவையை அமைக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் மக்கள் தெரிவித்தனர். (த-9)

### தந்தையிடமிருந்து மகனைக் காப்பாற்ற உயிரை விட்ட தாய்

வாரியபொல, ரன்தெணிய பிரதேசத்தில் நபரொருவர் அவரது மனைவியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டு சென்று கடைசியில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

கொலையை மேற்கொண்ட நபர் தமது மகனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து அவரைத் தாக்குவதற்காகக் கூரிய ஆயுதமொன்றை எடுத்துக்கொண்டு துரத்திச் சென்றார். அதனைத் தடுப்பதற்காக சென்ற குறித்த பெண்ணை அவரது கணவர் தாக்கிக்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொலையை மேற்கொண்ட நபர் வாரியபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

# கிளி. வயல்களில் குழாய்க் கிணறு அமைத்து சட்டவிரோத விவசாயம்

## உடனடியாகத் தடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், .மே 13

கிளிநொச்சி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட முறையிலான விவசாய நடவடிக்கைகள் இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வயல் பிரதேசங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து மேற்கொள்ளப்படும் இந்தச் சட்டவிரோத விவசாய நடவடிக்கை உடன் தடுக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உருந்திரபுரம், வட்டக்கச்சி போன்ற கிராமங்களில் மட்டுமன்றிப் பரந்தன், முல்லைத்தீவு முதன்மைச் சாலையோரமும் இந்தச் சட்டவிரோத விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

இவ்வாறு தடை செய்யப்பட்ட முறையில் இடம்பெறும் விவசாயத்தைத் தடுப்பதற்கு விவசாய அமைப்புக்கள் மற்றும் திணைக்களங்கள் உடன் நடவடிக்கை எடுத்து நிலத்தடி நீரை பேணுவதற்கு ஒழுங்குக்களை மேற்கொள்ளவேண்டும்.

இது குறித்து மாவட்டச் செயலர் சு. அருமைநாயகத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த விடயம் தற்போதே எமது கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. கமநல சேவைத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், விவசாய அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து உடனடியாக இது தொடர்பான விவரங்களைத் திரட்ட வேண்டும்.

அவ்வாறு வயற்பிரதேசங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்துள்ளவர்கள் உடனடியாக அவற்றை மூடவேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதுடன் அவர்களுக்கான மானிய உரம், நீர்ப்பங்கு என்பவற்றையும் நிறுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது - என்றார். (த - 101)

# சுகாதாரத் தொண்டர்களின் கோரிக்கை நியாயமானதே

## வவுனியாவில் நடக்கும் போராட்டத்துக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஆதரவு

வவுனியா, மே 13

வவுனியாவில் 9 நாள்களாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் சுகாதாரத் தொண்டர்களின் கோரிக்கை நியாயமானது. அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று கோரி வவுனியாவில் சுகாதாரத் தொண்டர்கள் 9 ஆவது நாளாக நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

இவர்களின் கோரிக்கை நியாயமானது. 1994 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித ஊதியமும் இன்றி இந்தப் பணியை மேற்கொண்டுள்ளனர். 2009 ஆம் ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் பல ஆயிரக்கணக் காணோர் வவுனியா வைத்தியசாலையை நாடி வந்திருந்தனர். நெருக்கடியான காலகட்டத்தில் காயப்பட்டவர்கள் உட்பட சிறப்புத் தேவைக்குட்பட்டவர்கள் போன்ற பலருக்கும் சுகாதாரத் தொண்டர்கள் வவுனியா மாவட்டத்தில் சேவை செய்தனர்.

10 வருடங்கள் கடந்தும் சுகாதாரத் தொண்டர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களுடன் வடக்கில் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட 500 இற்கும் மேற்பட்ட சுகாதாரத்தொண்டர்கள் 10 வருட காலத்திற்கு மேற்பட்ட காலப் பகுதியில் இந்தப் பணியை ஆற்றியுள்ளனர்.

இவர்களது கடந்த காலச் சேவைகளுக்காக மனிதாபிமான அடிப்படையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, கொழும்பு சுகாதார அமைச்சு என்பவை நிரந்தர நியமனம் வழங்கவேண்டும். இந்த நியமனத்தை நம்பித்தான் இவர்களில் பலரது குடும்பங்கள் உள்ளன. ஆகவே சுகாதார அமைச்சு இவர்களுடைய கடந்த கால சேவையைக் கருதித்தில் எடுத்து நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துச் சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அரச தலைவர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தளங்களை சமூகத் தேவைகளுக்கு பயன்படுத்துதல் சிறப்பு

## மஸ்தான் எம்.பி அறிவுரை



வவுனியா, மே 13

வவுனியா செட்டிக்குளத்தில் கண்களையிழந்து வறுமையில் வாழும் ஒருவர் தொடர்பில் சமூக ஊடகங்களூடாகவே நான் அறிந்து கொண்டேன். அதன் பின்னர் அவருக்கு நான் உதவினேன். எனவே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் இவ்வாறான தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

"வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆண்டியா புளியங்குளம் கிராமத்தில் இரண்டு கண்களின் பார்வையையும் இழந்து வறுமையில் வாழ்ந்து வந்த ஒருவரது குடும்பத்தை நேரில் சந்தித்து அவர்களுக்கான உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கி வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தக் குடும்பம் கடந்த நான்கு வருடங்களாகத் துயரங்களை அன்பவித்து வந்துள்ளமை வேதனை அளிக்கிறது. தனது பள்ளி செல்லும் குழந்தையின் உதவியுடன் கடைகளில் தர்மம் கேட்டு அவர் தமது காலத்தை கடத்துகின்றமை மிகவும் வேதனையானது.

எனவே சமூக வலைத்தளங்களைச் சமூகத்துக்கும், தேவை உடையவர்களுக்கும் ஏற்தாக அவற்றின் சேவைகள் சரியாகச் சென்றடையும்பொழுது நல்ல பயனடைய முடியும். அதில் உங்கள் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த உதவிகளை என்னுடன் இணைந்து வழங்குவதற்கு முன்வந்த நிறுவனங்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொளவதுடன், நாங்கள் உதவி செய்துவிட்டோம் என்பதற்காக உதவிசெய்வதற்குஎண்ணியுள்ளவர்கள் நிறுத்தி விடாமல் தங்களாலான உதவிகளை வழங்க வேண்டும்" - என்றார். (ஐ-4)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பத் தலைவர் சாவு

மாத்தறை வெலிகம பாதேகம பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். குறித்த நபர் வெசாக் பண்டிகையை முன்னிட்டு அமைக்கப்பட்ட தானசாலையில் உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். அதன்போது ஆயுதம் ஏந்திய குழுவொன்றால் கூரிய ஆயுதத்தால் அவர் தாக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர், பாதகம பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்த கொலை இடம்பெற்றது. (ஐ)

**பணிப்பெண் தேவை**

வயதான பெண்ணைப் பராமரிக்கவும், வீட்டு வேலை செய்வதற்கும், இரவு, பகல் தங்கி நின்று வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை.

**077 392 4742**

**வீடு வாடகைக்குண்டு**

கண்டாவளை, புளியம்பொக்கனை சந்திக்கு அருகில் A35 வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (CS/3697) (22.17)

**077 718 6214, 077 948 5064**



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA நம்பர்-1 புறொயிலர் குஞ்சுகள். 13.05.2017 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
077 609 0926

**FLC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு வகுப்புக்கள்**

2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்

இல.40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 03.06.2017 சனி 8.00 0779 789 456 021 221 7781

No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி 29.05.2017 பி.ப. 4.00 021 320 2973

IELTS Life Skills Al, B1 வகுப்புக்களும்....

(சி.29797) (13) (இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

**காவலாளி தேவை**

எமது கொத்தணியின் தொழிற்சாலைப் பகுதியில் இரவு நேரக் காவலாளியாக ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிவதற்கு 55 வயதிற்குட்பட்ட ஆண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி- 20.05.2017

நேர்முகத் தேர்வு- 22.05.2017 முற்பகல் 10.00 மணி

**தலைவர்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**

**பெயர் மாற்றம்**

தம்பசிட்டி பருத்தித்துறை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **விஸ்வநாதன் சந்திரகுமார்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **விஸ்வநாதன் சந்திர குமார்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில், சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

(ஏ.என்.ஏ.00165)
(13.17)

**விஸ்வநாதன் சந்திர குமார்**



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

**MBA**
MASTER OF BUSINESS ADMINISTRATION
in Jaffna

March, 2017 Intake
(Third Batch in Jaffna)

» Duration: 18 Months

» Entry Qualification

- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Part Time (Sundays only) class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from theTotal Payment.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/ Library Computer Laboratory/ Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

**இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும்**
**இயல் இசை நாடக அரங்கு - 2017**

**நான்காம் நாள் சனிக்கிழமை (13.05.2017)**
**பிற்பகல் 4.30 மணி**

**தலைவர்**
**திரு.இ.சர்வேஸ்வரா**
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்**
**பேராசிரியர்**
**த. ஜெயசிங்கம்**
(துணைவேந்தர் - கிழக்கு பல்கலைக்கழகம்)

❋ **பி.எஸ்.பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்**

*மங்கல இசை*

**நாதஸ்வரம்**
P.S.சுரசாகித்தியன்
M.சாரகேசவன்

**தவில்**
கூலூர் K.ராமகிருஷ்ணா,
திருச்செங்கோடு S.அஜய்

**மங்கல விளக்கேற்றல்**

❋ திருமுறை ஒதுதல் : **செல்வி கஸ்தூரி கணேஷமூர்த்தி** (தற்காலிக விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்)
❋ ஆசியுரை : **சிவஸ்ரீ சபா.வாசுதேவ குருக்கள்** (நிறுவுநர் - வீனாகாண குருபீடம்)
❋ வாழ்த்துரை : **திரு.ந.வித்தியாதரன்** (ஆசிரியர் - காலைக்கதிர் நாளிதழ்)
❋ தலைமையுரை : **தலைவர்**

❋ சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் தயாரித்து வழங்கும் நடனம்
**மல்லாரி காளி கௌத்தும்**
நெறியாள்கை : கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

❋ **இசை அரங்கம் - லயநாத கதம்பம்**
வயலின் : திருமதி பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்)
செல்வி பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு.நாகரட்ணம் மாதவன் (விரிவுரையாளர்)
திரு.திருமலை ப.திவ்யருபசர்மா (விரிவுரையாளர்

❋ நடனம் - கீர்த்தனை
நெறியாள்கை : கலாநிதி உஷாந்தி நேசகாந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

❋ இசைக்கச்சேரி - குரலிசை
திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன(விரிவுரையாளர்)
திருமதி [illegible]வரி பிரஷாந் (விரிவுரையாளர்)

❋ நடனம் - தில்லானா
நெறியாள்கை : திரு.கணேசராஜா துவாரக்கர் (விரிவுரையாளர்)

❋ கலைஞர்கள் கௌரவிப்பு
❋ பிரதம விருந்தினர் உரை
❋ நாடகம் :- "சவால்"
நெறியாள்கை : திரு.த.விவானந்தராஜா (விரிவுரையாளர்)
பாட்டு : திருமதி பிரியதர்ஷினி ஜெகதீஸ்வரன் (விரிவுரையாளர்)
திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன் (விரிவுரையாளர்)
வயலின் : திருமதி பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்)
செல்வி பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு.நாகரட்ணம் மாதவன் (விரிவுரையாளர்)
திரு.திருமலை ப.திவ்யருபசர்மா (விரிவுரையாளர்)

❋ நன்றியுரை

அனுசரணை: சிற்றி ஹாட்வெயர் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும்
ஆசிரியர்
திருமதி ய.தேவசகாயராஜா
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி**
**திரேசம்மா ஜேசுதாசன்**

அவர்கள் 10.05.2017 அன்று
இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றி
ருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்
துக் கொள்கிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.**
**யா/சென் மேரீஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**அப்பாக்குட்டி**
**தெய்வேந்திரராசா**

வலிகளில் வலியது அப்பா!
நீங்கள் இல்லாத வலி
அனாதையாகி நிற்கின்றோம்
அப்பா! உங்கள்
அன்பு இல்லாமல்.
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி, மகன்,
மகள்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சு.சசிகரன்
வல்வெட்டி.

தோற்றம் 29.03.1940
மறைவு 28.04.2013

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலக வாழ்வில்
31 . 10 . 1939



விண்ணுலக வாழ்வில்
13 . 05 . 2016

**அமரர் பொன்னையா சௌந்தரதாசன்**

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது.
சங்கீதம் 116:15

நவாலி தெற்கு மானிப்பாய். மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னன் சிவஞானம்**

தோற்றம் 30.04.1950
மறைவு 25.04.2016
திதி: 13.05.2017

அப்பாவைப் பிரிந்தநாள் இன்றோடு
ஆண்டொன்று ஆகியது!
நினைக்காத நாள் இல்லை
கவலை நீங்கிடவும் முடியவில்லை
இயற்கையின் நியதி தன்னில் நீங்கள்
ஈசனிடம் சென்று விட்டீர்கள்!!
கலங்கிடும் எம்மனதில் காலமெல்லாம்
வாழ்ந்திடுவீர்கள்.

தேவரன்
புலோலி தெற்கு, புலோலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் எனக்கில்லை

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மே 13
அரச சொத்துகளை வெளிநாட்டவர்களுக்குத் தாரை வார்ப்பதையும், தனியார் மயப்படுத்துவதையும் எதிர்த்துப் போராடுகின்றோமே தவிர, சதி செய்து ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் எமக்கு ஒருபோதும் கிடையாது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்றிருந்த மகிந்தவிடம் . வட மத்திய மாகாண சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரின் பதவி பறிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

கண்மூடித்தனமாகச் செய்யப்படும் அவ்வாறான பதவிப் பறிப்புகளால் பதவி பறிக்கப்பட்டவரின் சக நண்பர்கள் பலர் பதவி துறப்பதே நடந்து வருகின்றது எனக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இந்த அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்ட சமயம் ஏனைய கட்சிகள் அனைத்துமே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இன்றைய நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பொம்மையாகிவிட்டது., அந்த இரு கட்சிகளின் கயிறிழுப்புப் போட்டியில் அப்பாவி மக்களும் நாடும் திணறிக்கொண்டிருப்பது நிதர்சனம்.

பொய் வாக்குறுதிகளாலும், போலி நடிப்பாலும் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. அடுத்துவரும் தேர்தல்களில் பொதுமக்கள் தக்க பாடமொன்றைக் கற்பிப்பார்கள். என்றார். (ஐ-4)

# ஏறாவூர் விகாரைக்கு நஷ்டஈடு வழங்கிவைப்பு



ஏறாவூர்.மே 13
வன்செயல் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட, ஏறாவூர் புனிதலாராமய விகாரைக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நஷ்டஈட்டை வழங்கி வைத்தார்.

போரால் சேதமடைந்த மதஸ்தலங்களுக்கு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் சிறப்புத் திட்டமொன்றுக்கு அமைய நஷ்ட ஈடு வழங்கப்படுகின்றது. அதற்கமைய குறித்த விகாரைக்கும் இரண்டரை இலட்சம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் காத்தான்குடி காரியாலயத்தில் வைத்து இதற்கான நிதி, ஏறாவூர் புனிதலாராமய விகாராதிபதி அலுத்தர தம்மரத்ன தேரரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அலுத்தர தம்மரத்ன தேரர், போரால் ஏறாவூர் புனிதலாராமய விகாரை மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டது. இது குறித்து இன்னாள், முன்னாள் அரச தலைவர்களுக்கும், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினோம். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் இந்த விடயம் தொடர்பில் பேசியதை அடுத்து முதற்கட்டமாக இரண்டரை இலட்சம் ரூபா நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுத்துள்ளார்- என்றார். (ஐ)

# போதிய சுத்திகரிப்பாளர்கள் இல்லாததால் துர்நாற்றத்துடன் திருமலை மருத்துவமனை

திருமலை, மே 13
திருகோணமலைப் பொது மருத்துவமனையின் நோயாளர்களின் விடுதிகள் மற்றும் மலசல கூடங்கள் அசுத்தமாகக் காணப்படுவதால் துர்நாற்றம் வீசுகிறது என்று நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

திருகோணமலைப் பொது மருத்துவமனைக்குப் பல பிரதேசங்களிலிருந்தும் சிகிச்சைக்காக நோயாளர்கள் வருகை தருகின்றனர். மருத்துவமனை விடுதிகள்,சுற்றுப் புறச் சூழல்கள் அசுத்தமாகக் காணப்படுகின்றன. அதனால் துர்நாற்றம் வீசுகின்றது. மருத்துவமனையைச் சுத்தப்படுத்துவதற்காக ஒரு நாளைக்கு அறுபதுக்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளிகள் தேவைப்படுகின்றபோதிலும், 35 பேர் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

திருகோணமலைப் பொது மருத்துவமனை கொழும்பு அரசின் கண்காணிப்பில் இயங்கி வருகிறது. தற்போது சுத்திகரிப்புச் சேவையில் அரசியல் வாதியொருவரின் நிறுவனமொன்று ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. நோயாளர்களின் நலன் குறித்து அக்கறை காட்டி சுத்திகரிப்பாளர்களை அதிகரித்து, துர்நாற்றமில்லாத மருத்துவமனையாக மாற்ற வேண்டும். என்றனர். (ஐ)

# பிரதேச கால்நடை அலுவலகங்களில் இனி விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றலாம்

அச்சுவேலி, மே 13
நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் வேலைத்திட்டம் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு மாற்றப்படவுள்ளது. அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் பரீட்சார்த்த அடிப் படையில் கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

நாய்களுக்கு விசர்நோய் தடுப்பு மருந்து ஏற்றும் வேலைகள் இது வரை காலமும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பரீட்சார்த்த அடிப்படையில் கையளிக்கப்பட்டிருக்கும் கால்நடை வைத்திய அதிகாரி பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடுகள் தொடர்பான பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கும் இடத்து, எதிர்காலத்தில் ஏனைய பிரிவுகளிலும் பொறுப்புக்களைக் கையளிப்பது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகக் கூறப்படுகின்றது.

நாய்களுக்கு விசர்நோய் தடை மருந்து ஏற்றுவதில் நாய் வளர்ப்போரும், பொதுமக்களும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைக்கும் யோசனை தவறு

## மக்கள் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மே 13
வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் கணிதம், விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோருவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை விடுத்து இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை கொண்டு வரும் யோசனை, பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்காது. அது உள்ள பிரச்சினையை மேலும் உக்கிரமடைய வைக்கும். இவ்வாறு மக்கள் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா. நெல்சன் மோகன்ராஜ் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில், ஜி.சி.ஈ. உயர்தரம் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகிறது. இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கில் வேலை தேடும் பட்டதாரிகள் தமக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி வழங்குமாறு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கணித, விஞ்ஞான பட்டதாரிகளும் கணிசமாக இருக்க வாய்ப்புள்ளது.

அந்தவகையில், தற்போது தமிழ் மொழிமூல கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரிய வெற்றிடத்துக்குத் தகுதியானவர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பது அறியப்படல் வேண்டும். கல்வி அமைச்சு, அதனையே முதலில் செய்ய வேண்டும்.

எமது நாட்டின் உயர்தர கணித, விஞ்ஞான பாடத்திட்டமானது இந்திய பாடத் திட்டத்திலிருந்து வேறுபட்டதாகவே காணப்படுகிறது. இந்த நிலையில், இந்திய ஆசிரியர்கள், எமது நாட்டின் உயர்தர கணித, விஞ்ஞான பாடத்திட்டத்துக்கமைய கற்பித்தலை மேற்கொள்வதில் பல குழப்ப நிலைமைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகும்.

இலங்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மிக அதிகமானதாகும். இவ்வாறிருக்கையில், இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படுவதாக கூறப்படும் ஆசிரியர்கள், எமது நாட்டில் உள்ள குறைந்த சம்பளத்துக்கு சேவையாற்ற முன்வருவார்களா? அல்லது அவர்களுக்கு எமது நாட்டு ஆசிரியர்களை விட அதிகமான சம்பளம் வழங்கப்படுமா? எமது நாட்டு ஆசிரியர்களை விட அதிகமான சம்பளம் வழங்கப்படுமாயின், அது நம் நாட்டு ஆசிரியர்களுக்கும் இந்திய ஆசிரியர்களுக்குமிடையேயான சம்பள முரண்பாட்டையும், அதனூடாக ஆசிரியர்களிடையே முரண்பாடுகளையும் உருவாக்கக் கூடியதாகும். இதனால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் மொழிமூல கணித, விஞ்ஞான ஆசிரிய வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது குறைவானவர்களே விண்ணப்பித்துள்ளார்கள் என்று கல்வி அமைச்சுக் குறிப்பிடுகிறது. எனினும், அதற்கான ஆதாரங்கள் எதனையும் அது முன்வைக்கவில்லை.

இந்திய அரசு இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் கல்வி உரிமையில் உண்மையில் அக்கறையாக இருப்பார்கள் எனில், அவர்கள் செய்ய வேண்டியது, பட்டப்படிப்பு பெறத் தகுதியுடையவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி, அங்குள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பெற அனுமதிக்க வேண்டும். அதனையே கல்வி அமைச்சும் கோர வேண்டும்.

இவற்றை விடுத்து தீர்வு என்ற போர்வையில் எமது நாட்டில் கல்வி கற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை இந்தியாவில் உள்ளவர்களுக்கு வழங்கும் கல்வி அமைச்சின் நடவடிக்கை நிறுத்தப்படல் வேண்டும். என்றுள்ளது. (ஐ-10)

# பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு; புதிய மோட்டார் சைக்கிள் மீட்பு

கொழும்பு, மே 13
பிலியந்தலையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் அன்றைய தினமே கொள்வனவு செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

சந்தேக நபர்கள் தாக்குதலுக்கென புதிய மோட்டார் சைக்கிள்கள் விற்பனை நிலையமொன்றில் அன்றைய தினமே மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்தனர். வாங்கப்பட்ட மோட்டார் . சைக்கிளில் பதிவு இலக்கத் தகடுகள் எதுவும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்தவர்கள் பாணந்துறை பிரதேசவாசியொருவரின் கடவுச்சீட்டின் நிழற்பிரதியொன்றைச் . சமர்ப்பித்திருந்தனர். அந்தக் கடவுச்சீட்டின் உரிமையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றுக்குத் தனது கடவுச்சீட்டின் நிழற்பிரதியொன்றைக் கொடுத்திருந்ததாகத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் இந்த மோட்டார் சைக்கிள் மகரகம தெகிவளை வீதியிலுள்ள கடையொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. (ஐ)

## விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள கடலில் இலங்கைக் கடற்படையினர் இந்த மீனவர்களை இந்திய அதிகாரிகளிடம் கையளித்தனர் என்று கடற்படை அறிவித்துள்ளது.

கடற்படையைச் சேர்ந்த அதிவேக தாக்குதல் கடற்கலத்தின் மூலம் இந்திய மீனவர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். கடற்படையினர் இதுவரை 38 இந்திய மீனவர்களை இந்திய அதிகாரிகளிடம் மீள ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## குப்பை மேட்டில் ஹெரோயின் மீட்பு

கொழும்பு டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையிலுள்ள கெப்டன் கார்டன்ஸ் பகுதி குப்பை மேட்டிலிருந்து மூன்று கிலோ எடை கொண்ட ஹெரோயின் அடங்கிய பொதியொன்று மருதானைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இரண்டு பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்டிருந்த இந்தப் பொதி, அங்கிருந்து வேறொரு இடத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்தது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட பொதி மாளிகாகந்த நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என்று மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

*பிலியந்தலை துப்பாக்கிச் சூடு*

## உயிரிழந்த சார்ஜண்டின் இறுதிக்கிரியைகள் இன்று

கொழும்பு, மே 13
பிலியந்தலை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜண்ட் மகிந்த அபேவிக்கிரமவின் இறுதிக் கிரியைகள் இன்று மாரவில பொது மயானத்தில் நடைபெறவுள்ளன.

பொலிஸ் சேவையில் 15 வருடங்களைப் பூர்த்தி செய்திருந்த இவர், தனது பணிக்காலத்தில் 112 தடவைகள் பாராட்டுப் பெற்றவர் என பொலிஸ்தலைமையகம் தெரிவித்தது.

37 வயதான இவர் இரு பிள்ளைகளின் தந்தை என்பதோடு, 15 வருடங்களாகப் பொலிஸ் கான்ஸ்டபிளாகப் பணியாற்றியிருந்தவர். கடமையின் போதுஉயிரிழந்ததையடுத்து அவருக்கு பொலிஸ் சார்ஜண்டாக பொலிஸ்மா அதிபரால் பதவியுயர்வு வழங்கப்பட்டது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## குருநாகல் மருத்துவமனையில் இராணுவத்தினர் கடமையில்

கொழும்பு, மே 13
குருநாகல் போதனா மருத்துவமனையில் மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட 80க்கும் மேற்பட்ட ஊழியர்கள் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதனையடுத்து அங்கு இராணுவத்தினர் தற்காலிகமாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"சுமார் 50 இராணுவச் சிப்பாய்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சுகவீனமுற்றுள்ள மருத்துவர்கள் , தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பணிக்குத் திரும்பும்வரை இவர்கள் அங்கு பணிபுரிவார்கள். குருநாகல் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதால், இந்த மருத்துவமனையின் சகலவிடுதிகளிலும் நோயாளர்கள் தங்கியுள்ளனர் " என்று மருத்துமனை நிர்வாகம் தெரிவித்தது.(ஐ-4)

### மரண அறிவித்தல்



**திருமதி கமலாதேவி சிவனேசன்**

தொல்புரம்கிழக்கு, சுழிபுரத்தைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கமலாதேவி சிவனேசன் 11.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவநாதர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவனேசனின் (ஓய்வூதியர்) பாசமிகு மனைவியும், சிவரூபன் (துனியார் கல்வி நிலைய ஆசிரியர்), சிவச்செல்வன் (ஆசிரியர் - சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), சிவநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளினி, வாமினி (முகாமைத்துவ உதவியாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்), மந்தாயினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவானுஜன், சரண்ராஜ், கஜானன், யர்சிகன், சிவாதிகா, கேசிகன், விஹாஸ், நீதிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி, கிருஸ்ணராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சரசானந்தராசா மற்றும் நகுலேஸ்வரன், நாகேஸ்வரி, மகேஸ்வரி, குனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(J/8544)(11)
தகவல்:
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

பிறப்பு
11
.
09
.
1937



இறப்பு
11
.
05
.
2017

**திருமதி தவறஞ்சிதமலர் குமாரதாசன்**

கோப்பாய் மத்தி, நாவலர் வித்தியாலய ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவறஞ்சிதமலர் (றஞ்சி) குமாரதாசன் (ஓய்வுநிலை ஆசிரியர் , எழுதுவினைஞர் , யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி, யா/ கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) 11.05.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், சரசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், குமாரதாசன் (ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், நிறஞ்சனையின் (கனடா) அன்புத் தாயாரும், மகேந்திரனின் (கட்டடப் பொறியியலாளர்) அன்பு மாமியும், கஜனாவின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் (JP) அன்புச் சகோதரியும், புவனசிங்கத்தின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி (RMP), முத்துச்சாமி (முன்னாள் ஆசிரியர்) மற்றும் கிருஷ்ணமூர்த்தி (மின்பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் "றஞ்சி" இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் பாடசாலை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(C/3831)(11,17)
தகவல்:
ந.குமாரதாசன்
(கணவர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சட்டவிரோதமாக மருந்தகம் நடத்தியவரை பொது மன்னிப்புக் கோருமாறு உத்தரவு

## திருமலை நீதிவான் அதிரடி

திருகோணமலை, மே 13
சமூகத்துக்குத் தீங்கு ஏற்படும் வகையில் அனுமதி பெறாமல் மருந்தகம் நடத்தினார் என்ற குற்றத்துக்கு அதன் உரிமையாளரை பொது மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோருமாறு திருகோணமலை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

3 தேசிய பத்திரிகைகளின் முன் பக்கத்தில் பொது மக்களிடம் மன்னிப்புக் கோரும் விளம்பரத்தை வெளியிடுமாறு குற்றவாளிக்கு நீதிவான் உத்தரவிட்டார். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் திருகோணமலை பிராந்திய உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்களால் மருந்தகங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதிகார சபையிடம் உரிமம் பெறாமல் மருந்தகத்தை நடத்தியமை, மருந்தாளர் அல்லாதவரால் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டமை, காலாவதியான மருந்துகள் விற்பனைக்காக வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக திருகோணமலை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் கடந்த 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சமூகத்துக்குப் பாதிப்பு ஏற்படும் இவ்வாறான தவறுகள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்காக பொது மக்களிடம் பகிரங்க மன்னிப்பை குற்றவாளியான மருந்தகத்தின் உரிமையாளர் கோரவேண்டும். அந்த மன்னிப்பை 3 தேசிய பத்திரிகைகளின் முன்பக்கத்தில் அவர் விளம்பரப் படுத்த வேண்டும். அந்தப் பத்திரிகைகளின் பிரதிகளை மருந்தக உரிமையாளர் நீதிமன்றில் முன்வைக்கவேண்டும்" என்று நீதிவான் கட்டளை பிறப்பித்தார். (வ)

# சவுதிக்கு சென்ற பணிப்பெண் அழுகிய உடலமாக இலங்கைக்கு

கொழும்பு, மே 13
வீட்டுப் பணிக்கென சவுதி அரேபியா சென்ற பெண் கொல்லப்பட்டார். அவரது உடலம் அழுகிய நிலையில் பெட்டியொன்றில் அடைக்கப்பட்டு சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு அனுப்பப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்றரை வருடத்துக்கு முன்னர் 32 வயதுடைய குறித்த பெண் வெளிநாடு சென்றார். ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த கணபதிபிள்ளை குமாரி என்ற குறித்த பெண் இரு பிள்ளைகளின் தாயாவார். குறித்த பெண்ணின் கணவர் அவரைக் கைவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டில் தாம் பணிபுரிந்த வீட்டின் வயோதிப் பெண்ணொருவரால் அவர் கடந்த ஒன்றரை வருடமாகத் துன்புறுத்தப்பட்டு வந்தார் என்று குறித்த பெண்ணின் சகோதரரொருவரும் ,சகோதரியொருவரும் இறப்பு விசாரணையின் போது தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியாக அவரின் சகோதரியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ள நிலையில் பின்னர் அவர் தொடர்பில் எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் அவர் உயிரிழந்து விட்டதாக சவுதி அரேபிய தூதரகத்தால் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பெண் பணிபுரிந்த அடுக்குமாடிக்குடியிருப்பில் பரவிய துர்நாற்றத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, அவரது உடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அவரின் உடல் பொதி செய்யப்பட்டு , அந்த வீட்டின் குளியலறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

அந்த பொதி வைக்கப்பட்டிருந்த இடத்தில் குறித்த பெண்ணின் பயணப்பொதிகளும் வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன. பின்னர் அவரது உடலம் பெட்டியொன்றில் அடைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையின்போது தெரியவந்துள்ளது. (ஐ-4)

# யாழ். குடாநாட்டு இளையோருக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு

## நேர்முகத் தேர்வு மே 19இல் என அறிவிப்பு

"யாழ்ப்பாண மாவட்ட இளையோர்களுக்கு தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்".

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மைய நிலையம் நடைமுறைப்படுத்திவரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்த ஆள்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றில் 250 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் ஜி.சி.ஈ.சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் மற்றும் ஜி.சி.ஈ உயர்தரம் கற்ற 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் நேர்முகத்தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் தொடர்பான அறிவுறுத்தல்களை 021 2219359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக அல்லது மாவட்டச் செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மைய நிலையத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்" என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-10)

# கொழும்பு வருகிறார் சீன இணை அமைச்சர்

இலங்கையுடன் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்வது தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக கொழும்புக்கு வருகை தரவுள்ளதாக சீன வர்த்தகத் இணை அமைச்சர் கியான் கெமீங் தெரிவித்தார்.

"சீன சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக 20க்கும் மேற்பட்ட நாடுகளுடன் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளது. பட்டுப்பாதை மற்றும் வர்த்தக மார்க்கங்களின் மத்தியில் காணப்படும் நாடுகளுடனேயே இந்த உடன்படிக்கை குறித்த பேச்சு நடத்தப்படும்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

# வட மத்திய மாகாண சபையின் 17 உறுப்பினர்கள் மகிந்த பக்கம்

கொழும்பு, மே 13
வட மத்திய மாகாண சபையில், மகிந்த ராஜபசவுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இவ்வாறு அண்மையில் மாகாண அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட கே.எச். நந்தசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
33 உறுப்பினர்களைக் கொண்ட வட மத்திய மாகாண சபையில், மொத்தமாக 21 ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 17 பேர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர். இந்த நிலையில் இந்தச் சந்திப்பின் போது மாகாண சபையின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துத் தீர்மானிக்கப்படும். - என்றார்.

''எவ்வாறாயினும் வடமத்திய மாகாண சபையின் கட்டுப்பாடு தொடர்பில் எந்தச் சிக்கலும் இல்லை" என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (ஐ-4)

# சிறுமி, 4 இளைஞர்கள் களுத்துறையில் கைது

களுத்துறையில் வீடொன்றில் இருந்து 16 வயதுச் சிறுமியும் அவரைத் தடுத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் ஒன்று வந்தது. அதற்கு அமைய களுத்துறைப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்று சோதனையிடப்பட்டது. அங்கு 16 வயதுச் சிறுமி ஒருவர் 4 இளை ஞர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. சிறுமியும் 4 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். சிறுமியின் தாயார் வெளிநாடு சென்றுள்ளார். சிறுமியின் தந்தை மற்றும் அவரது 2 சகோதரர்களும் போதைக்கு அடிமையானவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்கள் 5 பேரிடமும் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# உருகுவே சுகாதார மாநாட்டுக்கு மைத்திரி, ராஜிதவுக்கு அழைப்பு

உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் உருகுவே நாட்டில் நடத்தவுள்ள தொற்றா நோய்கள் ஒழிப்பு தொடர்பான பன்னாட்டு மாநாட்டுக்கு இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**தென்னாசிய வலயத்தில் இலங்கை தொற்றா நோய்களின் ஒழிப்புக்குக் கடும் முயற்சிகளை எடுத்துவந்துள்ளது.** அத்துடன், 2020ஆம் ஆண்டில் புகையிலை உற்பத்தியை முற்றாக நிறுத்துதல், சிகரெட்டுகளின் மீதான வரியை அதிகரித்தல், சிகரெட் பெட்டிகளில் படங்களை வெளியிடுதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது.

இந்த முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் முகமாகவே அவர்கள் இருவரும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ம)

# சூரியவெவ பிரதேசத்துக்கு மின்சார வேலி

## நிர்மாணித்து கடற்படை

சூரியவெவப் பிரதேசத்தில் சூரிய சக்தியில் செயற்படும் மின்சார வேலியை இலங்கை கடற்படை நிர்மாணித்துள்ளது. கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பணிப்புரைக்கமைவாக , செயற்றிட்டம் இலங்கை கடற்படையின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிபுணத்துவப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மின்சார வேலி நான்கு கிலோமீற்றர் தூரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினரால் தொடர்ச்சியான சமூக நலத்திட்டங்களின் ஒருபகுதியாக முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம், அப்பகுதியில் நிலவி வரும் காட்டுயானைகள் மற்றும் கிராம வாசிகளிடையே நிலவி வரும் இடர்களைத் தவிர்க்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இதன்மூலம் காட்டு யானைகளின் அட்டகாசங்களில் இருந்து மனித உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# இளைஞன் துர்நடத்தை புரிந்தாரென பெண்ணொருவர் பொய் முறைப்பாடு

கொழும்பு, மே 13
தன்னை துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று இளைஞர் ஒருவர் மீது பொய்யான முறைப்பாட்டை மேற்கொண்ட பெண்ணொருவரைப் பெலிஹத்த பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபரான குறித்த பெண்ணின் காதலரால், முன்னர் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவமொன்றில் இருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக, இவ்வாறு பொய்யான முறைப்பாடு செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொய்யான முறைப்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர் மீதே அந்தப் பெண்ணின் காதலர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் , குறித்த முறைப்பாடு தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் பெலிஹத்த பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயந்த சமரகோனினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு விசாரணையில் குறித்த முறைப்பாடு பொய்யானது என்று தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் சந்தேகநபரான குறித்த பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து வழக்கை ஒத்தி வைத்தது நீதிமன்று

எவ்வாறாயினும், பொய்யான முறைப்பாட்டை மேற்கொண்டு பொலிஸாரைத் தவறாக வழிநடத்தியது மற்றும் நபரொருவரை அவமானப்படுத்தும் வகையில் பொய்யான முறைப்பாட்டை மேற்கொண்டது போன்ற குற்றங்களின் கீழ் சந்தேகநபரான பெண்ணுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிந்த,கோத்தா குழுவையும் திடீரென சந்தித்த மோடி

கொழும்பு, மே 13
இலங்கை வந்துள்ள இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட குழுவினரையும் சந்தித்துப் பேசினார் என்று இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தச் சந்திப்பு இந்தியத் தலைமை அமைச்சரின் இலங்கைப் பயண நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. எனினும் மகிந்த ராஜபக்ச கேட்டுக் கொண்டதற்கிணங்க சந்திப்பு இடம்பெற்றது. நேற்று முந்தினம் மாலை இலங்கைக்கு வருகை தந்த இந்தியத் தலைமை அமைச்சர், இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கங்காராமப் பகுதியில் வெசாக் தினத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த அலங்கார வெசாக் வலயத்தைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற இராப்போசன விருந்தின் பின்னர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினரை இந்தியத் தலைமை அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் கலந்து கொண்டார். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சந்திப்பு மிகவும் நட்பு ரீதியாக அமைந்தது - என்றார் (ஐ -10)

# நாடு கடத்தப்படும் அச்சத்தால் இலங்கைக் குடிமகன் மேன்முறையீடு

கொழும்பு, மே. 13
கனடாவிலுள்ள இலங்கையர் ஒருவர், தன்னை நாடு கடத்துவதற்கு எதிராக கனேடிய உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
2008 ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்று, வாடகைக் கார்ச் சாரதியாகக் கடமையாற்றும் ஒருவரே இவ்வாறு மனுத்தாக்கல் செய்துள்ளார்.
இலங்கையில் நிலவிய போர்ச் சூழ்நிலை காரணமாக, அமெரிக்காவுக்குச் சென்ற அவர், தரை மார்க்கமாகக் கனடாவைச் சென்றடைந்தார், அங்கு கனேடிய அகதி அந்தஸ்துப் பெற்றுக் கொண்டார். கனடாவின் புதிய குடிவரவுக் கொள்கைகள் காரணமாகத் தான் இலங்கைக்கு மீண்டும் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே மனுத் தாக்கல் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
அகதி அந்தஸ்துப் பெற்ற ஒருவர், தனது பழைய கடவுச் சீட்டைப் பயன்படுத்தித் தமது சொந்த நாட்டுக்குச் சென்றால் அவருக்கான குடியுரிமை வழங்கப்படாது என்று 2012ஆம் ஆண்டு, கனேடியப் பழமைவாத அரசால் கொண்டு வரப்பட்ட குடிவரவுக் கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன.
இது தொடர்பில் தனது சேவைப் பெறுநர் அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவரது சட்டத்தரணி, 2015 ஆம் ஆண்டு குடியுரிமை பெறுவதற்கான பரீட்சை எழுதிய போதே அவர் இதனை அறிந்திருந்தார். தன்னுடைய சேவை பெறுநர், இரண்டு தடவைகள் இலங்கைக்குச் சென்றார் என்றும், சட்ட திட்டங்களை மதித்தே அவர் நாடு சென்று திரும்பினார் என்றும் அவருடைய சட்டத்தரணி மனுவில் குறிப்பிட்டுள்ளார்.
தனது தாயாரைப் பார்ப்பதற்காகவும், திருமணத்துக்காகவும் இலங்கைக்கு இரு தடவைகள் பயணித்த அவர், தனது மனைவியையும் கனடாவுக்கு அழைத்துச் சென்றார். அவரின் மனைவிக்குக் கனேடிய குடியுரிமை கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
(ஐ - 10)

# இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா கைகொடுக்கும்

## இந்து சமுத்திர வலயத்தின் கூட்டுச் செயலாளர் உறுதி



கொழும்பு, மே 13
இலங்கையில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் செழிப்பு மற்றும் அபிவிருத்திகளுக்குப் பங்களிப்பு செய்வது போன்றே இலங்கை, இந்தியா இடையே ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு நாம் தயாராக உள்ளோம். இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும். இவ்வாறு இந்து சமுத்திர வலயத்தின் கூட்டுச் செயலாளர் தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருக்கும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்காலத்தில் இலங்கையில் பலமிக்க பொருளாதாரத்தை உருவாக்கி கொடுப்பதற்கு மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கையில் அபிவிருத்திப் பங்காளராவதற்கு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.
புரிந்துணர்வு உடன்படிக்கைகள் போன்றே ஒப்பந்தங்கள் என்றும் பல வகைகள் இருக்கின்றன. எனினும் கையொப்பமிடுவதற்கான எந்தவித ஒப்பந்தங்களும் இன்று எம்மிடமில்லை. இன்று இலங்கையின் தலைமையுடன், இலங்கையின் நாளைய தினத்தை நோக்கி நாம் இருப்போம். இலங்கையின் நாளைய தினத்துக்காக நாம் உதவிகளை வழங்குவோம்.
எதிர்காலத்தில் தொடர்ச்சியான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். நாம் அடுத்து வரும் சில நாள்களுக்குள் இலங்கையில் பலமிக்க அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான பங்காளராகுவோம் - என்றார். (ஐ-10)

## கைக்குண்டுத் தாக்குதலில் முதியவர் சாவு

கொழும்பு,மே 13
மகியங்கனை, தொடம்வத்தைப் பகுதியில் வீடொன்றில் இருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 64 வயதான முதியவர் ஒருவர் உயிரிழுந்தார். சம்பவத்தில் பெண் ஒருவரும் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தாக்குதலுக்குள்ளான நபர் மகியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விபத்தில் நால்வர் சாவு

கொழும்பு,மே 13
மோட்டார் சைக்கிளொன்று பேருந்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளனது. இந்தச் சம்பவத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - ஹபரண பிரதான சாலையில் பெந்திவெவப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.
விபத்துக்குள்ளானவர்கள் பொலன்னறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.
பேருந்தின் சாரதி பொலன்னறுவைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். விபத்தில் உயிரிழந்தவர்களின் விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

இடரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு

## உள்ளாடைக்குள் மறைத்து மாத்திரைகள் விநியோகம்

கொழும்பு, மே 13
கொலன்னாவ மீதொட்ட முல்லவில் குப்பை மேடு சரிந்து வீழ்ந்த இடரால், பல குடும்பங்கள் வீடுகளை இழந்தனர். அவற்றில் சில குடும்பங்களின் உறுப்பினர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு பெண்களுக்கு இலவசமாக உள்ளாடைகள் விநியோகிக்கப்பட்டன. அந்த உள்ளாடைகளுக்குள் ஜெல் பைக்கற்றுகளும், மாத்திரைகளும் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
கொலன்னாவ மீதொட்ட முல்லவில் உள்ள 300 அடி உயரமுள்ள குப்பைமேட்டின் உச்சியில்கடந்தஏப்ரல்மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர். மேலும் 30 இற்கும் அதிகமானோர் காணாமல் போயினர்.
இந்த இடரால் பாதிக்கப்பட்டவர்கள் மீதொட்டமுல்ல நெற்களஞ்சியசாலையில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு தங்கியுள்ள பெண்களுக்கு மட்டுமென உள்ளாடைகள் வழங்கப்பட்டன. அந்த உள்ளாடைகளுக்குள் மாத்திரைகள் மற்றும் ஜெல் அடங்கிய பைக்கற்றுகள் மறைத்து வைத்துச் சுற்றிவரத் தைக்கப்பட்டுள்ளன. இந்த மாத்திரைகள் மற்றும் ஜெல்கள் எதற்காக அவ்விதம் பதுக்கி வைக்கப்பட்டன என்பது போன்ற விவரங்கள் எதுவும் தெரியாதுள்ளதுஎன்று பெண்கள் தெரிவித்தனர். (ஐ -10)

# போதைப்பொருள் கடத்தலின் பிரதான சந்தேகநபர் டுபாயில்

கொழும்பு,மே 13
சிலாபம் பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள்களுக்கான உரிமையாளர் டுபாயில் இருப்பதாகப் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தப் போதைப் பொருள் வியாபாரம் நீண்ட காலமாக கடல் மார்க்கமாகச் செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புத்தளத்திலிருந்து கொழும்புக்குப் போதைப் பொருளை எடுத்துச் செல்லும் போது, சந்தேக நபர் ஒருவர் சிலாபத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
அவரிடம் விசாரணைகள் மேற்கொண்ட போது, "நான் நான்கு பிள்ளைகளின் தகப்பன். இந்தப் போதைப் பொருளைக் கொண்டு சென்று உரியவரிடம் ஒப்படைத்தால், எனக்கு 50 லட்சம் ரூபா பணம் தருவார்கள்" என்று சந்தேக நபர் பொலிஸாரிடம் சாட்சியமளித்தார்.
சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அலைபேசிக்குக் குறித்த போதைப் பொருள்களின் உரிமையாளர் 10 நிமிடங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டிருந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன" - என்றார். (ஐ)

## வெசாக்கை முன்னிட்டு 20 முத்திரைகள் வெளியிடப்படும்

கொழும்பு,மே 13
இலங்கையில் நடைபெறும் பன்னாட்டு வெசாக் பண்டிகையை முன்னிட்டு 20 முத்திரைகளை வெளியிடுவதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
கண்டி லங்காதிலக விகாரை, நேபாளத்தில் லும்பினி விகாரை, இந்தியாவில் சாஞ்சி விகாரை, ஜப்பானில் கொறியூயி விகாரை, பங்களாதேசில் சோமபூர் மகாவிகாரை உள்ளிட்ட உலகிலுள்ள பௌத்த மக்களின் முக்கிய வழிபாட்டுத் தலங்கள் இருபதை உள்ளடக்கியதாக இந்த முத்திரைகள் அமைந்துள்ளன.



இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் வெசாக் தினத்தைமுன்னிட்டு கடந்த காலங்களில் நாட்டில் வெளியிடப்பட்ட அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கிய நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்யாவின் சோச்சி நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஹொக்கி ஆட்டமொன்றில் நைட் லீக் அணி சார்பில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பங்கேற்றார். கோலொன்றைப் பதிவுசெய்ய முற்பட்டபோது அவர் தடுமாறிக் கீழே விழுந்தார். இது தொடர்பிலான படங்கள் சமூக வலைத்தளங்களில் மிகவும் வைரலாகப் பரவி வருகின்றன. (ம)

# ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு ஏவுகணைகளை விற்கவுள்ளது அமெரிக்கா

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு 160 ஏவுகணைகளை, கிட்டத்தட்ட 200 கோடி அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த நாட்டின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தது.

விற்கப்படவுள்ள அத்தனை ஏவுகணைகளும் அதிநவீனத்துவம் வாய்ந்தவை. அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு இடையேயான இந்த ஒப்பந்தம் வெளிநாட்டு உறவு, தேசிய பாதுகாப்பு உள்ளிட்டவற்றை மேம்படுத்த வழிசெய்வதாக அமையும்" என்றும் பென்டகன் மேலும் தெரிவித்தது. (ம)



# வடகொரியாவை கண்காணிக்க சிறப்புப் படை

## அமெ. உருவாக்கியது

வொஷிங்டன், மே 13

வடகொரியாவைக் கண்காணிப்பதற்கு அமெரிக்க உளவுப் படையில் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வடகொரியா 6ஆவது முறையாக அணுஆயுதச் சோதனை நடத்தத் தயாராகி வருவது செயற்கைக்கோள்களின் ஒளிப்படங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளின் நெருக்குதல் காரணமாக அந்த நாடு அணுஆயுத சோதனையை நடத்தவில்லை. எனினும் அவ்வப்போது அதிநவீன ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அண்மையில் வடகொரியா நடத்திய இரண்டு ஏவுகணைச் சோதனைகள் தோல்வி அடைந்தன. இந்தப் பின்னணியில் வடகொரியாவை உன்னிப்பாகக் கண்காணிக்க அமெரிக்காவின் உளவுப் பிரிவில் சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிஐஏ (உளவுத்துறை) இயக்குநர் மைக் பாம்பே, "வடகொரியாவால் அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே அந்த நாட்டை மிகத் தீவிரமாகக் கண்காணிக்க தனிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த அதிகாரி ஒருவரின் தலைமையில் அந்தப் படை செயற்படும்" என்று தெரிவித்தார்.

வடகொரியாவுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் விதத்தில் கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கா போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது. இது தொடர்பிலான முறுகல்கள் உச்சமடைந்து தற்போது அங்கு போர்ப் பதற்றம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ரயிலைத் தள்ளி உயிரைக் காத்த பயணிகள்

சீனாவில் தண்டவாளத்துக்கும் நடைபாதைக்கும் இடையில் மாட்டிக் கொண்ட வயோதிபப் பெண்ணைப் பயணிகள் அனைவரும் சேர்ந்து காப்பாற்றிய சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இது உலக அளவில் வைரலாகப் பரவி வருகிறது.

"வயோதிபப் பெண் தண்டவாளத்துக்கும் நடைபாதைக்கும் இடையில் மாட்டிக் கொண்டதும் சிலர் சேர்ந்து அவரை வெளியே இழுக்க எத்தனித்தனர். ஆனால் அது முடியாமல் போனது. பின்னர் அந்தப் பெட்டியில் அமர்ந்திருந்த பயணிகள் அனைவரும் கீழே இறங்கி ஒன்றுசேர்ந்து பெட்டியைத் தள்ளி வயோதிபப்பெண்ணைக்காப்பாற்றினர்" என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# தப்காவை மீட்டன குர்தீஸ் படைகள்

டமஸ்கஸ், மே 13

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த சிரியாவின் தப்கா நகர், அமெரிக்காவின் ஆதரவு பெற்ற குர்தீஸ் படைகளால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் சிரியாவின் ரக்கா நகருக்கு அருகில் உள்ள தப்கா நகர் இருந்தது. அதை ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராடி வரும் குர்தீஸ் படைகள் நேற்றுமுன்தினம் மீட்டன. தப்கா நகருடன் இருந்த பெரிய அணையையும்குர்தீஸ்படைகள்மீட்டுள்ளன. ரக்கா நகருக்குள் தப்கா நகர் வழியாகவே உள்நுழைய வேண்டும். எனவே தப்காவை மீட்டமை ரக்காவை மீட்பதற்கான முதல்படி என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



தப்காவிலிருந்து ஐ.எஸ். கொடிகளை அப்புறப்படுத்துகிறார் குர்தீஸ் சிப்பாய்

### துருக்கி எதிர்ப்பு

குர்தீஸ் படைகள் துருக்கிக்கு எதிராகச் செயற்படுகின்றன என்று ஓர் குற்றச்சாட்டு உள்ளது. எனவே அந்த ஆயுதக் குழுவை துருக்கி கடும் விரோதியாகப் பார்க்கிறது. இதனால் நகர் மீட்பு விடயத்தில் குர்தீஸ் அமைப்புடன் துருக்கி முரண்டு பிடிக்கிறது என்றும் ஓர் குற்றச்சாட்டு உள்ளது. (ம)

# ஜின் பிங்குடன் உரையாடினார் மூன் ஜய இன்

சியோல், மே 13

தென்கொரியாவின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள மூன் ஜய இன், சீன அதிபர் ஜின் பிங்குடன் அலைபேசியில் நேற்றுமுன்தினம் உரையாடியுள்ளார்.

தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் மூன் - ஜின் பிங் இடையிலான இந்த உரையாடல் முக்கியமானது எனப் பார்க்கப்படுகிறது. (ம)

# லிபியக் கடற்பரப்பில் அகதிகள் மீட்கப்பட்டனர்

திரிபோலி, மே 13

லிபியாவில் இருந்து சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட அகதிகள் படகொன்று லிபியக் கடலோரக் காவல் படையால் நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) மடக்கிப் பிடிக்கப்பட்டது. படகில் இருந்த நூற்றுக் கணக்கான அகதிகள் மீட்கப்பட்டதுடன் ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் சிலர் கைதுசெய்யப்பட்டனர்.

ஈராக், சிரியா, ஈரான், எத்தியோப்பியா, சூடான், சோமாலியா, நைஜீரியா, சிம்பாப்வே உள்ளிட்ட நாடுகளில் நிலவும் போர், வறுமை போன்ற காரணங்களால் அங்குள்ள மக்கள் பலர் லிபியாவுக்கு வந்து லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கிச் சென்று பின்னர் அங்கிருந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு செல்லும்போது விபத்துக்கள் காரணமாகப் பலர் உயிரிழப்பதும் தொடர்கதையாகி வருகிறது. இவ்வாறு கிட்டத்தட்ட 400 பேருடன் லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கி முறையான பாதுகாப்புக்கள் ஏதுமின்றிச் சட்டவிரோதமாகச் செல்ல எத்தனித்த படகே நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பத்திமா அன்னையின் திருக்காட்சியின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழா யாத்திரைஸ்தலம் பண்டத்தரிப்பு - 2017







## இராசமுருக்கில் கன்னி மரியாள் (ஆலய வரலாறு)



பண்டத்தரிப்புப்பங்கு சில்லாலைப் பங்கோடு இணைந்திருந்த காலம் அது. சில்லாலையில் இருந்து பண்டத்தரிப்பு. விளான் ஈறாக 1945 ஆம் ஆண்டு காலப்பகுதி ஒரு பங்குக்குருவின் கீழ் இயங்கியது. அக்கால பங்குத் தந்தையாக இருந்தவர் அருட்திரு. ஹென்றி ஜெலான் (அ.ம.தி) அடிகள். இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். போர்த்துக்கலின் சிற்றூராகிய பாத்திமாவில் 1917 இல் காட்சியளித்த பத்திமா அன்னையில் ஆழ்ந்த பற்றும் பக்தியும் கொண்டு விளங்கியவர். இவர் பண்டத்தரிப்பு அந்தோனியார் ஆலயத்திலோ செபமாலை மாதா ஆலயத்திலோ திருப்பலி நிறைவேற்றிய பின், விளானுக்கு செல்வதானால் இன்றைய பற்றிமா வீதி என அழைக்கப்படும் வீதியூடாகச் செல்வதுண்டு. இவ்வீதி அக்காலத்தில் "டச்சு வீதி" என்ற பெயரில் விளங்கியது. இவ்வீதியின் அருகே ஒரு இராசமுருக்கு மரம் உண்டு.

இலங்கையின் எப்பகுதியிலும் காணப்படாதது என்று கூறப்படும் பழமை வாய்ந்த இம்மரம். போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்தது. போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் இம்மரம் நடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றுகூட அதே இடத்தில் அழியாது காணப்படும் இம்மரத்தைப் பற்றி. கர்ண பரம்பரைக் கதையொன்று உண்டு. அதாவது ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியவேளை இந்தப்பகுதியில் வாழ்ந்தவர்கள் தப்பிஓடும்போது. தங்களிடமிருந்த தங்க நகைகள் மற்றும் பொன். வெள்ளி நாணயங்களை இம்மரத்தடியில் புதைத்துவிட்டு ஓடினார்களாம். ஆட்சிகள் மாறி, காலங்கடந்தாலும் புதையல் பற்றிய கதை மறையவில்லை. அதனால் இரவுநேரங்களில் மந்திரவாதிகள் உடுக்குகள் அடித்து மந்திரம் ஓதி பேய்பூதங்களை வரவழைத்து புதையல் எடுக்க முயற்சித்தார்களாம். இவ்வாறு இந்த மரத்தை அண்டிய பகுதிகளில் பேய்களின் நடமாட்டம் இருக்கும் என்ற பயத்தில் மக்கள் எவரும் இப்பகுதி வழியாக இரவில் வருவதில்லை. காலப்போக்கில் இப்பகுதி கைவிடப்பட்ட சிறுபற்றைக்காடாகவே காட்சியளித்தது.

ஜெலான் அடிகள் இம்மரத்தைத் தாண்டிச் செல்லும்போது அவரது கற்பனை விரியும். மனக்கண்ணில் காட்சிகள் தோன்றும். அதாவது தேவதாய் மூன்று சிறுவர்களுக்கும் புல்வெளி நடுவே தனித்துநின்ற ஒரு கருவாலி மரத்தின் மீது நின்றவாறே காட்சி தந்தார். எனவே சிறு பற்றைகளின் நடுவே நின்ற இராசமுருக்கு மரத்தைப் பார்க்கும் தோறும் ஜெலான் அடிகளாருக்கு பத்திமா மாதாவின் நினைவே வந்தது. அவரின் கற்பனை இந்தப்பகுதியை பத்திமா பதியாக மாற்ற வேண்டும் என்ற திசையிலே சென்றது. அடிகளாரும் ஆயர் கியோமர் ஆண்டகையிடம் தன் எண்ணக்கருவை வெளியிட்டார். ஆயரும் ஆசீரோடு அதற்கு அனுமதியளித்தார். ஜெலான் அடிகள் அவ்விடத்தை ஆசீர்வதித்து. இளைஞர்களிடம் விடயத்தைக் கூற. அவர்களும் அவருடைய விருப்பத்திற்கமைய உற்சாகத்துடன் வந்து. அப்பகுதி முழுவதையும் துப்பரவு செய்தார்கள். சிறுகொட்டில் கோவிலும் அமைக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10ஆம் திகதி லொறற்றோ அன்னையின் திருநாளில், மாசற்ற இருதயநாயகியின் சிறிய சுரூபம் ஒன்று சில்லாலை கதிரை மாதா ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு இராசமுருக்கடியில் ஸ்தாபகம் செய்யப்பட்டது. ஜெலான் சுவாமி அவ்விடத்துக்கு "பத்திமா கிரி" என்னும் புதிய பெயரையும் சூட்டினார். தொடர்ந்து இராசமுருக்கு மரத்தடியில் ஆழக்குழி தோண்டி முப்பத்தைந்து அடி உயரமான ஒரு தூண் கட்டப்பட்டது.

தூணின் உச்சியில் கொங்கிறீற் கலவையால் செய்யப்பட்ட மாதாவின் சுரூபம் அவர் கையால் நிறுவப்பட்டது. இக்கட்டுமானப் பணிகள் முடிந்ததும் இவ்விடத்தில் ஒரு வழிபாடு நடந்தது. அதில் அக்காலத்தில் பிரசங்க பீரங்கி என்று புகழ்பெற்ற அருட்திரு. நல்லையா அடிகள் (அ.ம.தி) தனது மறையுரையின் ஆரம்பத்தில் "இராசமுருக்கு மரத்தடி வானக அரசி வரத்தடியாயிற்று" என்று கூறி. தனது மறையுரையை ஆரம்பித்தார். இந்த மகுட வார்த்தையைத் தொடர்ந்து தேவதாயின் பக்தர்கள் இவ்விடத்திற்கு யாத்திரையாக வரத்தொடங்கினார்கள்.

ஆரம்பத்திலிருந்து சிறப்பிடம் பெற்ற இராசமுருக்கடி திருச்சுரூபம். தொடர்ந்தும் முக்கியம் பெற்றதாக விளங்குகிறது. அதிவணக்கத்துக்குரிய ஜெலான் சுவாமி அவர்கள். அமல மரித்தியாகிகளின் இளவாலை மாவட்ட சிரேஷ்டராக, 1953 ஆவணி மாதம் மாற்றலாகி சென்றதைத் தொடர்ந்து. பண்டத்திரிப்பு பங்கைப் பொறுப்பேற்ற து.கு.சேவியர் இராசமுருக்கடியைப் பற்றி எழுதுகிறார். சேவியர் அடிகளார் பரிசுத்த கன்னிமரியாளின் மாசற்ற இருதய விழாவை. ஆவணி 22 இல் கொண்டாடியதை விபரிக்கிறார். அப்போது அவர் திரிதின ஆராதனைகளோடு ஆரம்பித்து. 22 ஆம் திகதி சிறப்பான பாடல் பூசையை. பத்திமா கோவிலில் வைத்துவிட்டு. இராசமுருக்கடிக்கு சுற்றுப்பிரகாரமாகச் சென்று கொண்டாடினோம் என்று விபரிப்பது குறிப்பிடத்தக்கது. இப்போதும் அந்த நாள் "அரசியான தூய கன்னிமரியாளின் விழாவாக" திருச்சபையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. தற்போதும் சிறப்பான நாட்களில் சுற்றுப்பிரகாரமும். இராசமுருக்கடியில் திருப்பலியும் நடைபெற்று வருகின்றது. வைகாசிப் பெருநாளின்போது பெரிய விருந்து அங்கே வழங்கப்பட்டு வருகிறது.

### யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி



போர்த்துக்கல் நாட்டிலுள்ள பத்திமா எனும் சிற்றூரிலே. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த லூசியா. யசிந்தா. பிரான்சிஸ்கோ ஆகிய மூன்று சிறுவர்களுக்கு. 1917 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி. பரிசுத்த கன்னிமரியாள் காட்சி கொடுத்ததன் நூறு ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுகிறோம். எங்கள் மறைமாவட்டத்தில் மரியன்னையின் பழமை வாய்ந்த யாத்திரைத்தலமாக விளங்கும் பத்திமாகிரியிலே. இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. அப்போதைய யாழ் ஆயர் கியோமர் ஆண்டகையின் ஆசியோடு. சுவாமி ஜெலான் அடிகள் (அ.ம.தி) எழுபது ஆண்டுகளுக்கு முன் தரிசனப்பார்வையோடு இதை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கடும்முயற்சி எடுத்து. காட்சி நடைபெற்ற போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்று. ஆள்அளவு உயரமான. அற்புதமான அன்னையின் திருச்சுரூபம் ஒன்றை தன்னோடு கொண்டுவந்தார். இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு அருள்பெற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற அந்த அன்னையின் திருச்சுரூபத்தை இம்முறை தேரில் ஏற்றி பவனியாகக் கொண்டுவருவது. இந்நூற்றாண்டு விழாவின் சிறப்பம்சமாகும். காட்சி நடைபெற்ற போர்த்துக்கல் 'நாட்டு பத்திமாவிலே, இந்த விழா கொண்டாடப்படும்போது. அந்தக் காட்சியைப் பெற்ற மூன்று சிறுவர்களில் இருவராகிய முத்திப்பேறுபெற்ற பிரான்சிஸ்கோ. முத்திப்பேறுபெற்ற யசிந்தா ஆகியோருக்கு. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இம்மாதம் 13ம் திகதி புனிதர் பட்டம் வழங்கப்பட உள்ளது இந்நூற்றாண்டு விழாவின் மேலுமொரு சிறப்பம்சமாகும். பத்திமா அன்னையின் செப. தப வாழ்வுக்கான அழைப்பை அவர் பிள்ளைகளாகிய நாம் செவிமடுத்து. எம்கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறிச் செல்வோமாக.

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள,
**பேரருட்திரு. கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்.

### குரு முதல்வரின் ஆசிச்செய்தி



நான் சிறு பையனாக இருந்த காலத்தில் எமது அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயம் பண்டத்தரிப்புப் பங்கின்கீழ் இருந்தபடியால். புனித பத்திமா அன்னை ஆலயத்திற்கு எனது பெற்றோர் என்னை அடிக்கடி அழைத்துச் செல்வார்கள். அதேவேளை. அக்காலத்தில் பங்குத்தந்தையர்களாக இருந்த எமது இளைப்பாறும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம். அமரர் அருட்தந்தை அன்ரன் ராஜகாரியர் அடிகள் போன்றோரை சந்திப்பதற்காக தற்போது ஜெலான் இல்லம் என்று அழைக்கப்படும் பங்குமனைக்கும் அடிக்கடி நான் சென்றுவருவதுண்டு. இராச முருக்கடி என்று அழைக்கப்படுகின்ற அன்னையின் திருச்சுரூபம் அமைந்துள்ள இடம் பற்றிய பல சுவாரகஷ்யமான கதைகளை எனது பெற்றோர். குருக்கள் கூற ஆர்வமுடன் கேட்டு சிந்தித்ததுண்டு.

இவ்வாறு போத்துக்கல் நாட்டில் மூன்று சிறார்களுக்குக் காட்சிதந்த புனித பத்திமா அன்னையின் வரலாறு. எனது மனதில் ஆழமாகப் பதிந்த அக்காலத்திலிருந்து இந்த அன்னையின் அற்புதமான பிரசன்னத்தையும். அரவணைப்பையும் நான் இன்றுவரை அனுபவித்து வருகிறேன். அன்னை காட்சிகொடுத்த இந்நூற்றாண்டு நிறைவில் இறைவனுக்கு நன்றிகூறும் கோடிக்கணக்கான பத்திமா அன்னையின் பக்தர்களில் ஒருவனாக இணைவதில் நான் பெருமிதம் அடைகின்றேன். பண்டத்தரிப்பு பத்திமா அன்னை திருத்தலம் எமது யாழ். மறைமாவட்டத்தின் திருத்தலங்களில் சிறப்புமிக்கதொன்றாக திகழுவதையிட்டு மகிழ்கிற அதேவேளையில், இத்திருத்தலத்தை அர்த்தமுள்ள பல ஆன்மீக வளங்களால் நிறைத்து. பக்தர்கள் அன்னையின் வல்லமையுள்ள பரிந்துரையையும் இறைபிரசன்னத்தையும் அனுபவிக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டி. படிப்படியாக அவற்றை நிறைவேற்றி வருகின்ற தற்போதைய பரிபாலகர் அருட்தந்தை கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாருக்கும். அவருக்கு துணையாக இருக்கின்ற அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கின்றேன். புனித பத்திமா அன்னை மீதான பக்தியை ஆழப்படுத்துவதும். அமரர் ஜெலான் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட பழைய ஆலயம். பங்குமனை போன்றவற்றை சிறப்பாகப் பராமரிப்பதும். அருட்தந்தை ஞானரட்ணம் அடிகளாரின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட புதிய ஆலயத்தை மெருகூட்டி வளர்த்துவருவதும் இந்நூற்றாண்டு நிகழ்வுகளில் முன்னெடுக்கப்படுகின்ற அர்த்தமுள்ள செயற்பாடுகளாக இருப்பதையும் வரவேற்கிறோம்.

புனித பத்திமா அன்னையின் உன்னதமான பரிந்துரையும். புனித யசிந்தா. புனித பிரான்சிஸ்கோ ஆகிய புதிய புனிதர்களின் பரிந்துரையும் அனைவருக்கும் கிடைப்பதாக! இறை ஊழியர் லூசியா விரைவில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவாராக!

**அருட்திரு. ப. யோசப்தாஸ் ஜெபரட்ணம்**
குரு முதல்வர் யாழ். மறைமாவட்டம்.



புனித பற்றிமா அன்னை காட்சி கொடுத்து நூற்றாண்டை கொண்டாடுகின்ற இத் தருணத்தில் புனித பற்றிமா அன்னையின் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துகள் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கொண்டாட்டங்கள் ஒரு புறமிருக்க மூன்று சிறார்களுக்கு கொடுத்த காட்சியின் செய்திகளை எமது வாழ்வாக்குவோம். செபம். தபம். பரிகாரம் என்பவற்றை அன்னை மரியாள் கேட்டு நின்றாள். இந்த செய்தியை மனுக்குலத்திற்கு சொல்லுமாறு பணித்தாள். எமது குடும்பங்களில் செபமாலை செபிப்போம். எமது பாவ பழிகளுக்கு பரிகாரமும். தபமும் மேற்கொள்வோம். தன்னுடைய மாசற்ற இதயம் ஜெயம் கொள்ளும் என்று வாக்களித்த அன்னையிடம் நாமும் அவளது மாசற்ற இருதயத்திற்கு எம்மையும் ஒப்புக்கொடுத்து சாத்தானை வெற்றி கொண்டு புனித வாழ்வு வாழ்வோம். புனித பற்றிமா அன்னையின் ஆசீர் எங்களையும் . எங்கள் குடும்பங்களையும் நிரப்புவதாக.

**அருட் பணி. ம. யேசுரட்ணம்**
மறைக்கோட்ட குரு முதல்வர் - இளவாலை

### இளையோர் ஒன்றியத்தின் வாழ்த்துச் செய்தி



"இதோ ஆண்டவரின் அடிமை" புனித பத்திமா அன்னையின் திருக்காட்சிகளின் 100வது ஆண்டை கொண்டாடுவதையிட்டு மகிழ்வடைகிறோம். போர்த்துக்கல் நாட்டின் காட்சித் தலத்தில் சிறப்பாகக் கொண்டாடும் இத்தருணத்தில், யாழ் மறைமாவட்டத்தின் பிரபல்யமான யாத்திரைத்தலமாகிய பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலயமும் சிறப்பாக இவ்விழாவைக் கொண்டாடுகிறது."

"இதோ ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே நிகழட்டும்" என்று எப்போதும் இறைவனின் திருச்சித்தத்திற்கு பணிந்து நடந்த மரியாள். எமது தேவைகளுக்குப் பரிந்துபேசுபவராகவும் இருந்து வருகிறார். அருட்தந்தை ஹென்றி ஜெலான் அவர்களால் கட்டப்பெற்ற. இவ் ஆலயமும் சூழலும் பத்திமா கிரி என அழைக்கப்பட்டு வருகிறது. இன்று 100 ஆவது ஆண்டின் நினைவாக புனித பத்திமா அன்னை. மூன்று சிறுவர்களுக்கு காட்சி கொடுத்ததைச் சித்தரிக்கின்ற காட்சித் தோட்டம். யாழ் ஆயரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது. அந்தவகையில் சிறப்புமிக்க இத்திருநாளை மகிழ்வோடும் இறையன்போடும் கொண்டாடுவோம்.

"இறையாசீர் என்றும் நம் [illegible]"

SLP கபிலன்.
இளையோர் [illegible]

### அருள் மழையில் இணைந்துகொண்டாடுவோம்



இறைவனின் தாயானபற்றிமாஅன்னைபோத்துக்கல் நாட்டில் பாத்திமாஎன்னும் சிற்றூரில் லூசியா.பிரான்சிஸ்.ஜசிந்தாஆகியசிறுமிகளுக்கு 1917ம் ஆண்டுமே 13 முதல் அக்ரோபர் 13 வரைகாட்சிதந்து 100வது நிறைவாண்டைஅகிலஉலகதிருச்சபைஅகமகிழ்வோடுகொண்டாடிமகிழும் வேளையிது. பற்றிமாஅன்னையின் பரிந்துரைவேண்டிபல இலட்சம்பக்தர்கள் தினம் தினம் நாடிசென்றுதரிசனம் பெறுவதும்,பரிந்துரைநிறைவால் மனம்திரும்பியதும்,தொல்லைகள் நீங்கி, பாவங்களுக்காகமனம் வருந்திமுழுமனிதவிடுதலைபெற்று. இறைநம்பிக்கைவாழ்வைசுவைப்பதும். இறைவிசுவாசங்களின் சாட்சியங்களே. யாழ் மண்ணிலும் பண்டத்தரிப்பு பத்திமாபதிஓர் யாத்திரைத் தலமாகஅமைந்து 50வது ஆண்டுநிறைவு காண்பது கண்டுயாழ் மறைமாவட்டம் இறைபற்றுடன் இன்புற்றுமகிழ்வுகொள்கிறது. பண்டத்தரிப்பு பற்றிமாபதியில் பங்குத்தந்தையாகபணியாற்றியஎன் நினைவுகள்,அனுபவங்கள் பல. அன்னையின் பரிந்துரைவேண்டிவரும் பக்தர்கள் பல்லாயிரமாகபெருகுவதைவேண்டுதலால் நிறைவுபெற்றுநன்றி கூற வரும் பக்தர்களின் விசுவாசவழிபாடுகள் எமக்குசாட்சிசொல்லும்.

நம்பிக்கைதலமாகபற்றிமாஅன்னையின் ஆலயம் 50 வதுஆண்டுநிறைவுகாணும் சிறப்புக்குபக்தர்கள், பங்குமக்கள்,பங்குத்தந்தையர் அன்னையின் பரிந்துரையால் ஆசிபெற்றவர்களே. பலநெருக்கீடுகள், இழப்புக்களால் துவண்டமக்களின் மனச்சுமைதீர்க்கும் அன்னையின் பரிந்துரைகளால் அருளாசிபெற்றஅனுபவங்களைநானும் சுவைத்துள்ளேன். அன்னையின் பரிந்துரையால் என் வேண்டுதல் நிறைவுபெறுவதுகண்டுநன்றி கூறுகின்றேன். எமது இறைபற்றுள்ளமக்கள் துயரம் கழைந்துமகிழ்வுறபற்றிமாஅன்னையின் பரிந்துரையால் எமதுவிசுவாசவாழ்வுபலம் பெற்று இறைஆசீர் நிறைவாய் பொழிய.எம் செபங்களால் அருள் மழையில் இணைந்துகொண்டாடுவோம்.

**அருட்பணி.ச.இயூஜின் பிரான்சிஸ்**
கியூடெக் இயக்குநரும்
முன்னாள் பங்குத்தந்தையும்

### பரிபாலகரின் வாழ்த்துச் செய்தி



இம்முறை புனித பத்திமா அன்னையின் விழா மிகச் சிறப்பான பெருவிழாவாக கொண்டாடப்படவேண்டியது. ஏனென்றால் இந்த வைகாசி 13 இல் போர்த்துக்கல் நாட்டின் பத்திமா பதியில், பரிசுத்த கன்னி மரியாள் மூன்று சிறுவர்களுக்கு காட்சி கொடுத்ததன். 100 ஆண்டுகள் நிறைவு நாளை அடைகிறோம். ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த லூசியா (வயது 10). பிரான்ஸ்சிஸ்கோ (வயது 9). யசிந்தா (வயது 7) ஆகியோருக்கு. 1917 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி தோன்றி உரையாடிய இறைவனின் தாய் மரியாள். தொடர்ச்சியாக 6 தடவைகள் அடுத்துவந்த மாதங்களில். மாதத்திற்கு ஒரு முறை தோன்றி செபத்தினதும். தபத்தினதும். பாவவாழ்விலிருந்து மனமாற்றத்தினதும் அவசியத்தை வலியுறுத்தினார். தாமே "திருச்செபமாலை மாதா" என்று வெளிப்படுத்தினார். அந்தக் காட்சியைப் பெற்ற சகோதரர்களான பிரான்சிஸ்கோவையும் யசிந்தாவையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காட்சி நடைபெற்ற இடத்திற்குச் சென்று. இன்றைய நந்நாளில் அவர்களை புனிதர்களாக பிரகடனம் செய்வார். இந்த விழாவை உலகத்திருச்சபையோடு இணைந்து. யாழ் மறைமாவட்டத்தின் யாத்திரைத் தலமாகிய பண்டத்தரிப்பின் பத்திமா கிரியில், நாமும் கொண்டாடக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். போர்த்துக்கல் நாட்டின் பத்திமாவிலே இருந்து கொண்டுவரப்பட்ட. அன்னையின் அற்புதமான திருச்சுரூபத்தின் பிரசன்னத்தில் நடைபெறும் திருப்பலிப்பூசையின் போதும். தொடர்ந்து இடம்பெறும் சரித்திரச் சிறப்புமிக்க பத்திமா அன்னையின் தேர்ப்பவனியின்போதும், மரியன்னையின் பரிந்துரையால் இறைவனின் அருளாசி. பக்தர்கள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க ஆசித்து இறைவனை வேண்டிநிற்கிறேன்.

**அருட்திரு.கலாநிதி மைக்கல் A. P. R. சௌந்தரநாயகம்**
பரிபாலகரும் பங்குத்தந்தையும்.

### இளவாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" பண்டத்தரிப்பு பத்திமா பதியிலிருந்து. எமது கிராமத்தையும் தன்னை நாடிவருகின்ற பக்தர்கள் அனைவரையும் ,என்றும் காத்து. பராமரித்து வருகின்ற கருணாகதியும் பாதுகாவலியுமான எமது அன்னைக்கு இன்று விழா எடுப்பதில் நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

இப்பதியில் 1948 ஆம் ஆண்டிலிருந்து கோவில்கொண்டு எழுந்தருளி இருந்து. இன்று வரையும் எம்மையும் எமது கிராமத்தையும் இப்பதியை நாடிவரும் பக்தர்களையும் அரவணைத்து. எமது துன்ப துயரங்களைப் போக்கி. நோய் நொடிகளைக் குணமாக்கி வேண்டுதல்களை நிறைவு செய்து. அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றார். பத்திமா அன்னை போர்த்துக்கல் நாட்டில் பத்திமா பதியில் மூன்று ஏழைச் சிறுவர்களுக்கு காட்சிகொடுத்ததன் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவை உலகமே கொண்டாடி மகிழ்கின்றவேளை இலங்கை மண்ணில் யாழ்மறைமாவட்டத்தின் யாத்திரைத்தலமாக விளங்கும் பத்திமாகிரியிலும் அன்னையின் விழாவை கொண்டாடி மகிழ்கின்றோம். இவ்வாய்ப்பை அருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி நவில்வதோடு. எமது நாட்டில் நிரந்தர அமைதி கிடைத்திட அன்னையின் ஆசீரை வேண்டிடுவோம்.

**திரு. இ.அன்ரன் விமலதாஸ்,**
இளவாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அரசியல் தீர்வை விரைந்து ஏற்படுத்துவதன் அவசியம்

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வெசாக் கொண்டாட்டத்திற்காக இலங்கைக்கு வந்து சென்றிருக்கிறார். அவருக்கு அரசதரப்பில் மிக உச்சமான வரவேற்பு வழங்கப்பட்டிருக்கிறது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கு நேரில் சென்று மோடியை வரவேற்றதன் ஊடாக கொழும்பு, புதுடில்லிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பறைசாற்றினார். அன்றைய தினம் இரவே அரசதலைவர் மைத்திரிபால அற்புதமான இரவு விருந்தையும் மோடிக்கு வழங்கினார்.

உலக வெசாக் தினக் கொண்டாட்டங்களுக்காகவே மோடி கொழும்புக்கு வந்தார் என்பது வெளிப்படையான செய்தி. ஆனால், இலங்கையில் அதிகரித்துவரும் சீனச் செல்வாக்கின் மீதான புதுடில்லியின் ஆதங்கத்தையே மோடியின் பயணம் வெளிப்படுத்துகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

போர்க்காலத்தில் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்குத் தேவையான அளவு போர்த்தளபாடங்களையும் நிதி உதவிகளையும் சீனா வழங்கியது. அந்த நெருக்கம் போர் முடிந்த பின்னரும் தொடர்ந்தது. போருக்கு வழங்கியதிலும் பார்க்க அதிகளவு நிதியை அபிவிருத்திப் பணிகளுக்கும் கட்டுமானப் பணிகளுக்கும் வாரி இறைத்தது சீனா.

சீனாவின் இத்தகைய நிதிக் குண்டு மழையையும், அதனால் பெய்ஜிங்கோடு இழையும் கொழும்பின் போக்கையும் கண்டு அச்சமுற்ற மேற்கு நாடுகளும் இந்தியாவும், மகிந்தவை அகற்றி தற்போதைய மைத்திரி - ரணில் ஆட்சியை ஏற்படுத்தத் திரைமறையில் எல்லா ஒத்துழைப்புகளையும் வழங்கின. அதன் பயனாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

ஆனால், மகிந்தவின் ஆட்சியில் ஊதிப்பெருத்த கடன்களில் சிக்கித்திணறிய மைத்திரி-ரணில் ஆட்சிக்கு, அந்தச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு அவசர அவசரமாகப் பெருமளவிலான முதலீடுகள் தேவைப்பட்டன. ஆட்சியைக் கொண்டு நடத்தவும் மகிந்தவைச் சமாளிக்கவும் பெருமளவு முதலீடு தேவையாக இருந்தபோதும், மேற்கு நாடுகளில் இருந்தோ இந்தியாவில் இருந்தோ அவை வந்துசேரவில்லை. இதனால் சீனாவின் பக்கமே கொழும்பு மீண்டும் சாயவேண்டிய நிலை ஏற்பட்டது.

வாய்ப்பைச் சரியாகச் சிக்கெனப்பிடித்துக் கொண்ட சீனா, கொழும்புக்கான நிதி உதவிகளை மீண்டும் அள்ளி வழங்கத் தயாராகியது. இது மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் சிக்கலைத் தோற்றுவித்தது.

சீனாவின் நிதி வளத்தை ஈடுசெய்யும் வகையில் இந்தியாவால் ஒருபோதும் செயற்பட முடியாது என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். மேற்கு நாடுகளே அதனைச் செய்ய முடியும். ஆனால் கொழும்பின் கரிசனைகளைவிடவும் அதிகம் கவனிக்கப்படவேண்டிய பல விடயங்கள் மேற்குலகுக்கு இருப்பதால் அவற்றின் செயற்பாடுகளும் இந்த விடயத்தில் மெத்தனமாகவே இருக்கிறது.

இந்தக் காரணங்களால் கொழும்பு-பெய்ஜிங் நெருக்கத்தைத் அதிகரிப்பதைத் தடுக்க மேற்குலகாலும் இந்தியாவாலும் முடியாத நிலையே தொடர்கிறது. கொழும்புக்கும் வேறு வழியில்லை என்பதால், அதுவும் சீனாவின் காலடியிலேயே வீழ்ந்து கிடக்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் மேற்குலகையும் இந்தியாவையும் பகைத்துக்கொள்ளாமல் இருப்பதையே தற்போதைய ஆட்சி விரும்புகிறது.

அதனால்தான் சீனாவுக்கு கட்டுமானங்களும் இந்தியாவுக்கு கலாசாரமும் என்று வழங்கி ஒருவித சமாளிப்பு இராஜதந்திரத்தைக் கையாளக் கொழும்பு முனைகிறது, இதற்கூடாக இந்தியாவுடனும் தமது நெருக்கம் குறைந்துவிட வில்லை என்று அதனைத் திருப்திப்படுத்த அது முயற்சிக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இங்கு கவனிக்கப்படாமல் போன முக்கியமான விடயம், இனப்பிரச்சினைக்கான தீர்வு. அதனைக் கொழும்பு இழுத்தடித்துச் செல்வதும், முதலீடுகள் வராமலிருப்பதற்கான காரணங்களில் ஒன்று. விரைந்து ஒரு தீர்வு எட்டப்பட்டால் அது முதலீடுகளுக்கான கதவை இன்னும் அகலமாகத் திறந்து விடும். புலம்பெயர் தமிழ்ச் சமூகமும்கூட பெருமளவில் முதலிடுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே தீர்வை விரைவுபடுத்த புதுடில்லி அழுத்தம் கொடுப்பதே அதன் நலன்களையும் பாதுகாப்பதாக அமையும்.

# வடக்கின் கூட்டுறவுத்துறை மேம்படுத்தப்படல் அவசியம்

■ சுவாமிநாதர்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை; ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; கூட்டுறவே நாட்டுயர்வு என்ற பண்புகள் பல நூற்றாண்டுகள் காலமாக சமுதாயத்தில் இழையோடி இருந்து வந்துள்ளன.

இந்தக் கூட்டுறவுப் பண்புகளுக்கு அமைய மக்கள் வாழ்ந்து, தமது வாழ்வையும் பிறரது வாழ்வையும் வளம்படுத்திக் கொண்டனர். இப்படிப்பட்ட கூட்டுறவுப் பண்புகள் காலத்துக்குக் காலம் வாழ்ந்த மேதைகளால் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்பத் தொகுத்து புதிய வடிவில் வழங்கப்பட்டன.

அவை எமது சமுதாயத்துக்கும், மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் வழங்கப்பட்டன.

இப்படிப்பட்ட கூட்டுறவுப் பண்புகளை வடக்கின் கூட்டுறவுத் தந்தை எனப்படும் பெரியார் வீரசிங்கம் வடிவமைத்து வெளியிட்டார்.

இவ்வாறு அவர் வெளியிட்ட கூட்டுறவுப் பண்புகள் யாவும் கூட்டுறவாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படாததுடன், தெளிவுபடுத்தப்படுவதும் இல்லை.

கடந்த காலங்களில் முன்னோர்களாலும் கூட்டுறவாளர்களாலும் அமைக்கப்பட்ட கூட்டுறவுக் கட்டடங்கள் மற்றும் சின்னங்கள் யாவற்றையும் தற்போதைய கூட்டுறவுச் சமுதாயம் மறந்து விட்டது. இப்படிப்பட்ட முன்னோர்களால் அமைக்கப்பட்ட கூட்டுறவு இயக்கச் சின்னங்கள், வளங்கள் யாவற்றையும் தற்போதைய கூட்டுறவாளர்கள் பேணிப்பாதுகாக்கவும் தவறிவிட்டுள்ளனர். இதற்கெல்லாம் அரசியல் பின்புலங்களும் உள்ளன.

உண்மையில் வடக்கு மாகாண கூட்டுறவுத்துறையில் அரசியல் புகுந்ததால் தான் அது தற்போது நலிவடைந்து செல்வதாக வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற கூட்டுறவாளர்களின் மேதின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முதலமைச்சர் மேற்கொண்ட கருத்தை வெளியிட்டார்.

அவரது உரை கூட்டுறவில் அரசியல் கலந்திருப்பதை தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கும் வகையில் அமைந்திருந்தது.

அதேவேளை கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும், நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்குமான திட்டங்கள் எதுவும் குறித்த மேதின நிகழ்வில் முன்வைக்கப்படவில்லை.

> அனேகமாக கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஊழியர் தொழிற்சங்கங்கள்கூட சிறப்பாகச் செயற்பட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தினர், சங்கம்விடும் பிழைகளைத் தட்டிக் கேட்டால், மறைமுகமாக சங்க நிர்வாகங்களால் நசுக்கப்படுகின்றனர்.
> உழைக்கும் கூட்டுறவாளர்களுக்கான உரிமைகள் யாவும் மதிக்கப்பட வேண்டும். பின்புலத்தில் ஒரு வழியில் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள், பழிவாங்கல்கள் யாவும் நிறுத்தப்பட வேண்டும்.

இருந்தபோதிலும் கூட்டுறவுப் பணியார்களுக்கு வழங்கப்பட்டுவரும் விசேடபடி 15 வீதம், சேவைக்காலவெகுமதிக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி போன்ற கொடுப்பனவுகளுக்கான கட்டுப்பாடுகள் தகர்த்தப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி மேதினத்தில் இருந்து இந்த க் கொடுப்பனவுகளைச் சங்கங்கள் சுற்றறிக்கைக்கு அமைவாக வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

### நலிவுநிலை கண்டுள்ள வடக்கின் கூட்டுறவுத் துறை

குறிப்பாக வடக்கின் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் போதிய நுகர்ச்சி, வியாபாரம், வருமானம் இன்றித் திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் வடமாகாண கூட்டுறவு அமைச்சு, பணியாளர்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டது.

இருப்பினும் இந்த உழைப்பாளர் தினத்தில், மறுவளத்தில் கூட்டுறவாளர்களும் ஒருவிதத்தில் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

அனேகமாக கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஊழியர் தொழிற்சங்கங்கள்கூட சிறப்பாகச் செயற்பட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தினர் சங்கம்விடும் பிழைகளைத் தட்டிக் கேட்டால், மறைமுகமாக சங்க நிர்வாகங்களால் நசுக்கப்படுகின்றனர்.

உழைக்கும் கூட்டுறவாளர்களுக்கான உரிமைகள் யாவும் மதிக்கப்பட வேண்டும். பின்புலத்தில் ஒரு வழியில் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள், பழிவாங்கல்கள் யாவும் நிறுத்தப்பட வேண்டும். இதுதான் மே தினத்தில் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு நிறைவேற்றி வைக்கப்பட வேண்டிய புனித பணியாகும்.

வடக்கு மாகாணசபை அரசு, நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட சமயத்தில் கூட்டுறவுத்துறை மற்றும் சில துறைகள் முதலமைச்சர் வசம் இருந்தன.

பணி நெருக்கடி காரணமாக தன் வசம் இருந்த துறைகளை முதலமைச்சர் தனக்குக் கீழ் உள்ள அமைச்சர்களிடம் பகிர்ந்து வழங்கினார்.

இதில் கூட்டுறவுத்துறை, அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடம் வழங்கப்பட்டது.

வடக்கில் கூட்டுறவுத்துறை பின்னடைவு கண்டு, நலிவடைந்து செல்வதற்கு அதில் அரசியல்தலையீடுகள் கலந்திருப்பதே காரணமென முதலமைச்சர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

இந்த அரசியல் தலையீடுகள் கடந்த 1970 ஆம் ஆண்டுகளில் இருந்து புகுந்தமையே தற்போது இந்தக் கூட்டுறவுத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்டத்தில் செயற்படுவதற்கும் முக்கிய காரணம் என்றும் அவர் எடுத்துக் கூறினார். ஆயினும், கடந்த 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கீழ் வைத்திருந்த காலப்பகுதியில் கூட்டு றவுத்துறை அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்திருந்தது.

**வினைத்திறன் மிக்க இயக்குநர் சபை மிக முக்கியம்**

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கும் இயக்குநர் சபைகள் யாவும் வினைத்திறன்மிக்க இயக்குநர் சபைகளாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் நெறியாளர் குழு, இயக்குநர் சபை போன்றவை சங்கங்களை நெறிப்படுத்துவதில் பங்கேற்பதால் சங்கங்கள் ஏன் நட்டத்தில் இயங்க வேண்டும் என்ற முதலமைச்சரது கேள்வி நியாயமானதே.

சகல கூட்டுறவு அமைப்புக்களின் இயக்குநர் சபைகளும் வினைத்திறன் மிக்க சபைகளாக செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். சங்கங்களில் இயக்குநர் சபை உறுப்பினர்கள் மாறி மாறி இயக்குநர் சபைத் தலைவர்களாக வருவதினாலும், போதிய வர்த்தகச் செயற்பாடுகள் இன்மையும்தான், சங்கங்கள் நட்டத்தில் செயற்படக் காரணமாகின்றன. இந்த இயக்குநர் சபைகள் வினைத்திறன் மிக்கவையாகவும், உரிய தீர்மானங்கள், முடிவுகளை எடுத்து உடனுக்குடன் செயற்படுத்தக்கூடிய திறமை கொண்ட சபைகளாக வும் இருக்க வேண்டும்.

தனது இறுதி மூச்சுவரை சமூகநலனுக்காகவும் கூட்டுறவுத்துறை விருத்திக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர் பெரியார் வீரசிங்கம்.

இந்தக் கூட்டுறவுப் பெரியார் போதித்த கூட்டுறவுக் கொள்கைகளை தற்போதைய கூட்டுறவுச் சமூகம் மறந்து விட்டது. கூட்டுறவுச் சங்கங்களது நிர்வாகிகள் கடமையுணர்வோடும், சேவை மனப்பான்மையுடனும் பணியாளர்களை மதித்துப் பணியாற்ற வேண்டும். வடக்கு மாகாணத்தில்கூட்டுறவுத்துறை தற்போது வீழ்ச்சியடைந்து செல்வதற்கான காரணமென்ன?

கடந்த பல ஆண்டுகள் காலமாக, குறிப்பாகப் போர்க்காலச் சூழ்நிலைக்கு மத்தியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட்டு வந்த கூட்டுறவுப் பணியாளர்களுக்குத் தற்போது வழங்க வேண்டிய கொடுப்பனவுகள் அதாவது ஊக்குவிப்புக் கொடுப்பனவு, மேலதிக நேர கொடுப்பனவு, என்பவை மறுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பணியாளர்களுக்கு அவர்களது சேவையில் நெருக்கடிகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தி கூட்டுறவுச் சேவையில் இருந்து தாமாக விலகிக் கொள்ள விரும்பும் மனநிலைக்கு உட்படுத்தி, மன உளச்சலை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

உண்மையில் கடந்த காலங்களில் கூட்டுறவுத் துறையில் பெரிய மோசடிகள், ஊழல்கள் மேற்கொண்டவர்களுக்கு எதிராக இதுவரை எந்தவித சட்டபூர்வ நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை. ஊழல், மோசடிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான உரிய ஆதாரங்கள் இருந்தும், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது. அரசியல் கட்சிகளது முக்கியஸ்தர்களது பின்புல ஆதரவு அவர்களுக்குக் கிடைப்பதாக நம்பப்படுகிறது. இத்தகைய பெரிய அளவிலான மோசடிகள் குறித்து சங்க இயக்குநர் சபையினர்வாய்திறப்பதில்லை. ஆனால் பணியாளர்கள் சம்பந்தப்படும் சிறு சிறு பிரச்சினைகளில் அவற்றைப் பெரிதாக்கி அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதான் தற்போது வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுத் துறைக்கு ஏற்பட்டுள்ள இழுக்கு. இவ்வாறான நிலையில் கூட்டுறவுத்துறை எவ்வாறு மேம்பாடு அடையப் போகிறது?

**வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்குக் கைகொடுக்கும் கூட்டுறவுத் துறை**

உண்மையில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள பாமர மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்காக உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுத்துறைக்கு அரசு உரிய மானியங்கள் வழங்கி குறித்த துறை மீண்டும் புத்துயிர் பெற்றுயர உதவ வேண்டும்.


குறிப்பாக நாட்டின் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கூடுதலாக சதொச விற்பனை நிலையங்கள் (கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள்) திறக்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசு, இந்த சதொச விற்பனை நிலையங்களை அதிகளவில் திறந்து அதன் ஊடாக அத்தியாவசிய பொருள்களை மக்களுக்கு நியாய விலையில் வழங்கி வருகின்றது.

கடந்த புத்தாண்டுக் கால வியாபார நடவடிக்கைகளின்போது பல லட்சம் ரூபா வருமானத்தை இந்த சதொச நிறுவனங்கள் பெற்றுள்ளன. இத்தகைய நிலையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் கடந்த பல ஆண்டுகள் காலமாக மக்களுக்குச் சேவையாற்றி வரும்கூட்டுறவுச்சங்கங்களுக்கு மானிய அடிப்படையில்நிதியுதவிமற்றும்ஏனைய உதவிகளை வழங்கி அவற்றுக்குப் புத்துயிர் வழங்குவதற்கு இந்த நல்லாட்சி அரசு முன்வர வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரி வருகின்றனர்.

கூட்டுறவுத்துறையில் அரசியலைப் புகுத்துவதைத் தவிர்த்து நடுவு நிலை நின்று கூட்டுறவுத்துறையை வளர்த்தெடுப்பதே இன்றைய தேவையாகும். இது இன்றைய காலத்தின் கட்டாய தேவையுமாகும்.

> சகல கூட்டுறவு அமைப்புக்களின் இயக்குநர் சபைகளும் வினைத்திறன் மிக்க சபைகளாகச் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.
> சங்கங்களில் இயக்குநர் சபை உறுப்பினர்கள் மாறி மாறி இயக்குநர் சபைத் தலைவர்களாக வருவதினாலும், போதிய வர்த்தகச் செயற்பாடுகள் இன்மையும் தான்சங்கங்கள் நட்டத்தில்செயற்படக்காரணமாகின்றன. இந்த இயக்குநர் சபைகள் வினைத்திறன் மிக்கவையாகவும், உரிய தீர்மானங்கள், முடிவுகளை எடுத்து உடனுக்குடன் செயற்படுத்தக்கூடிய திறமை கொண்ட சபைகளாகவும் இருக்கவேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### சிரமங்களைப் போக்கி உதவிடுக

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகில், முன்னர் மின்சார சபை இயங்கிய கட்டடத்தில் தற்போது இயங்கிவரும் உடல் வலுவூட்டல் நிலையத்தால் (Gym) தாம் முன்னிரவு வேளையில் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தக் கட்டடத்தின் அருகில் வசிக்கும் பொதுமக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

இந்த உடல் வலுவூட்டல் நிலையத்தில் இரவு 11மணிவரை தங்கி நிற்போர் பெரும் சத்தமாகப் பாட்டுப் போடுதல், அரட்டை அடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால், அயலில் வசிக்கும் பொதுமக்கள் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

நகரில் இயங்கும் ஏனைய உடல் வலுவூட்டல் நிலையங்கள் எல்லாம் இரவு 8முதல் 9மணிக்குள் மூடப்படும் அதேவேளை, குறித்த இந்த நிலையம் மட்டும் இரவு 11மணிவரை இயங்குகின்றது. எனவே யாழ்.மாநகர சபை உட்பட பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இது குறித்து அக்கறை செலுத்தி குறித்த நிலையத்துக்கு அயலில் வசிக்கும் பொதுமக்களின் நிம்மதியான தூக்கத்துக்கு வழி ஏற்படுத்த வேண்டும்.

கே.சசிதரன்

### கல்வித்துறை உயர்பதவிக்கு நேர்மையும், தகுதியும் அவசியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் புதிய துணைவேந்தரை நியமித்ததில் தவறுகள் ஏற்பட்டு விட்டதாகப் பரவலாக விமர்சனங்கள் எழுந்துள்ளமை வேதனைக்குரியது. தமிழர்களின் அதியுயர் கல்விக்கூடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளங்குகின்றது. பேராசியர் அ.துரைராஜா துணைவேந்தராக இருந்த பெருமையும் கொண்டது யாழ்.பல்கலைக்கழகம். ஆனால் சமீப காலமாக யாழ்.பல்கலைகழக நிர்வாகச் செயற்பாடுகளிலும் அரசியல் புகுந்து குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாகத் துணை வேந்தரைத் தெரிவு செய்வதில் அரசியல்வாதிகளின் தலையீடு ஆரோக்கியமானதல்ல பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் அரசியல் சாராதவர்களாக இருந்து தமது கடமையை நேர்மையு டன் நிறைவேற்ற வேண்டும். ஆனால் யாழ்.பல்க லைக்கழகத்தில் இத்தகைய தொரு நிலை காணப்படவில்லை. இதனால் புதிய துணை வேந்தரைத் தெரிவு செய்வதில் குழப்பங்கள் நிகழ்கின்றன. நேர்மையும், தகுதியும் மிக்க துணைவேந்தரின் தெரிவே யாழ்.பல்கலைக்கழகத்துக்குப் பெருமை தரும்.

பா.ஜெகநாதன், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது

## அயலுறவுத்துறைப் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளும் கிடைத்துள்ளதான தகவலை அயலுறவுத் துறைப் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான இலங்கையின் விண்ணப்பத்திற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற அயலுறவுத் துறை மற்றும் வர்த்தக அமைச்சர்கள் குழு அனுமதியை வழங்கியுள்ளது.

தவிர, இந்த அனுமதியானது இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொடுக்கும் எனவும் இதற்கான இறுதி அறிக்கைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி அல்லது 22 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் அயலுறவுத் துறை பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நடவடிக்கையாகக் கருத முடியுமென அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கைக்கு மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட யோசனைகள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அண்மையில் தோற்கடிக்கப் பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

12/5/2017 | www.cse.lk

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 164.50 | 1,059,649 | 172,960,401 |
| சம்பத் வங்கி | SAMP.N | 280.10 | 396,360 | 110,981,661 |
| லயன் யுறுவரி | LION.N | 465.00 | 143,344 | 64,558,552 |
| தேசிய அபவிருத்தி வங்கி | NDB.N | 150.00 | 373,073 | 55,948,513 |
| ஹேலீஸ் பாபிறிக் | MGT.N | 17.10 | 1,750,877 | 30,062,919 |
| காகில்ஸ் சிலோன் | CARG.N | 216.00 | 138,173 | 29,315,109 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 149.00 | 169,625 | 25,100,533 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 41.40 | 596,611 | 24,883,525 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 240.00 | 100,203 | 24,047,708 |
| டேக்கியோ சிமேன் | TKYO.N | 78.00 | 272,654 | 20,847,770 |

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 5.15 | 6,671.98 | 6,666.83 |
| S&P SL20 | 13.72 | 3,850.22 | 3,836.50 |
| வியாபாரப்புரள்வு | | 651645668 | 720,922,620 |
| உள்நாடு:- கொள்வனவு | | 437909220 | 473,400,640 |
| விற்பனை | | 476420962 | 503,461,568 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 213736448 | 247,522,016 |
| விற்பனை | | 175224706 | 217,461,072 |




அறிவித்தல்கள்

பங்குலாபம்
சிலோன் டேபாப்கோ ரூபா. 15.00 இடை.. பங்குலாபம்
சிலோன் கோல்ஸ்ரோஸ் ரூபா. 8.00 இறுதி. பங்குலாம்
டோகியோ சிமென் - ஒதுக்கங்களின் முதலாக்கம்
கலாமகு சிஸ்ரம் - உரித்து வழங்கல் திகதி

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 218 |
| விலை உழைப்பு | 12.66 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.62 |

# மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
# குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம் / பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D04/DMT/ A.V.K/169-1 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட ஆனைவேட்டைக் குளம் புனரமைத்தல் | 1.43 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-14,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |
| 2 | KN/DPS/D04/DMT/ K.R.K/169-2 | பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட கிராஞ்சிக்குளம் புனரமைத்தல் | 3.25 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-32,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 3 | KN/DPS/D04/DMT/ M.M.K/169-3 | இராமநாதபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மம்மிக்குளம் புனரமைத்தல் | 2.46 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-25,000.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 4 | KN/DPS/D04/DMT/ M.N.K/169-4 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மணியம் குளம் புனரமைத்தல் | 4.13 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-41,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 5 | KN/DPS/D04/DMT/ P.G.K/169-5 | பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட பூவரசங்கேணி குளம் புனரமைத்தல் | 1.62 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-16,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |
| 6 | KN/DPS/D04/DMT/ P.N.K/169-6 | புளியம்பொக்கணை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட புன்னை நீராவிக்குளம் புனரமைத்தல் | 1.37 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-14,000.00 . வங்கி பிணை 23/08/2017வரை |
| 7 | KN/DPS/D04/DMT/ V.L.K/169-7 | புளியம்பொக்கணை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட வேலன் குளம் புனரமைத்தல் | 2.32மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-23,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 8 | KN/DPS/D16/ONU/ PS/A.K.M/467-1 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட நெற்களஞ்சியசாலை நிர்மாணம் | 4.24 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா-42,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
   - I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   - II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
   - III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகர மற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்க கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை **15.05.2017** ஆம் திகதியிலிருந்து **05.06.2017** ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு **07.06.2017** ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர் களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

# தேசிய வெற்றியாளராக கொமர்ஷல் கிரெடிட்

ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்புத்துவ விருதுகள் நிகழ்வில் சந்தைப்படுத்தல் கம்பனி விருதினை கொமர்ஷல் கிரெடிட் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி கொரியாவின் சியோல் நகரில் அண்மையில் இடம்பெற்ற 2 ஆவது ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்பு விருதுகள் நிகழ்வில் சந்தைப்படுத்தல் துறையில் ஆசியாவின், மிக முக்கியமான நிர்வாக ஆளுகை அமைப்பாகத் திகழும் ஆசிய சந்தைப்படுத்தல் சம்மேளனத்தினால் சந்தைப்படுத்தல் கம்பனி விருதுப் பிரிவின் தேசிய வெற்றியாளராக கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தினதும் ஊழியர்களினதும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையிலே பல்வேறு சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்திக் காண்பித்தமைக்காகவே இந்த விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் தொடர்பில் கருத்துரைத்துள்ள கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி ரஜீவ் காசி சிட்டி,

"கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வருகின்ற புத்தாக்கமான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் பெறுமானங்களை இவ்விருது அங்கீகரித்துப் பாராட்டுகின்றது. அத்தோடு விற்பனை வளர்ச்சி, சந்தைப்பங்கு மற்றும் தேறிய வருமானம் ஆகியவற்றில் இவ்வாறான மூலோபாயங்கள் பெற்றுத் தந்துள்ள பெறுபேறுகளை மேலும் வெளிக்காட்டுவதாகவும் அமைகின்றது. இந்த விடயமானது எமது நிறுவனத்தின் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைற்கல்லாகக் காணப்படுகின்றது" - என்று தெரிவித்துள்ளனர்.

சந்தைப்படுத்தல் துறையிலான மதிப்பீட்டின் போது முன்னிலையிலுள்ள கம்பனிகளுக்கே இந்தச் சிறப்பு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

எ.எம்.எவ் அங்கத்துவ நாடுகளினுள் பங்களாதேஷ், கம்போடியா, சீனா, ஹொங் கொங், இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங் கப்பூர், இலங்கை, தாய்வான் மற்றும் தாய் லாந்து ஆகியவை உள்ளடங்குகின்றமை நோக்கத்தக்கது.

COMMERCIAL CREDIT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளரும் தொழிற் சூழலும்

க.நா.சபாரத்தினம்

உலகில் ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலாளரே. நாட்டின் அரச தலைவர் தொடக்கம் வீட்டுப் பணி செய்பவர் வரை ஒவ்வொருவரும் தாம் செய்யும் பணியைத் தொழில் எனக் கருதியே செயற்படுகின்றனர். அனைவருமே பிறப்பில் இருந்து இறப்பு வரை பல வாழ்வியல் சூழல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இதில் தங்கள் வருவாய் கருதி ஈடுபடும் தொழில் தொடர்பாக சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்கள், அவை சார்ந்த தொடர்புகள் மற்றும் சூழல் என அனைத்தை யும் ஆராய்வதென்பது சாத்தியம் அற்றது. இருப்பினும் அன்றாட வாழ்வில் உள்ள சில தொழில்கள் பற்றியும், அவற்றில் ஏற்படும் சூழ்நிலைகள் குறித்தும் ஆராயும் போது சில விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.



**தொழில் அனுபவங்கள்**

ஊதியம் பெறும் ஒருவர் தொழிலில் பலவிதமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தொழிலில் சக பணியாளர், நிர்வாகி, மேற்பார்வை செய்வோர், பயனாளிகள், தொழிற்பாடு தொடர்பான இயந்திரம், போக்குவரத்து, பாதுகாப்பு, பாதுகாப்பற்ற தொழிலில் தன்மைகள், கடமையில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், தொழில் அமைப்பு எதிர்நோக்கும் பிரச்சினைகள் என அவை பல வகைப்படும்.

தொழிலாளர் ஒருவர் இந்த விடயச் சூழல்களுக்கு முகம்கொடுத்து தனது வருமானத்தை ஈட்டிக்கொள்கிறார். தவிர, தொழில்ரீதியாக பயனாளி என்ற வகையினனாகத் தான் பயன் பெறுவதுடன், வேலை கொள்வோர் திருப்தியடைதல், ஏற்படக் கூடிய பாதிப்புகளில் இருந்து விடுபடுதல், தான் அந்தத் தொழிலில் நிலைத்து நின்று செயற்பட முடிதல், நிறுவனம் உறுதித் தன்மையோடு இருக்கும்; எனக்கு ஒரு தொழில் உண்டு, என்ற நம்பிக்கை கொள்ளுதல் என்ற வகையிலும், இதன்போது ஏற்படக்கூடியதான சட்டப் பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு, உடல்நலப் பாதுகாப்பு, அபாயச் சூழல்கள் என்பவற்றின் தாக்கங்களில் இருந்து விடுபடுதல், அமைதியாகச் செயற்படக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்ற தன்மை களின் ஊடே மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஒரு சில தொழில்களில் இருப்பவை அல்ல; சகல தொழில்களிலும் ஒவ்வொரு மாதிரிகள் அமைகின்றன. உற்பத்தி, விற்பனை நிலையங்களில் ஒரு மாதிரியும், தொழில் நுட்பம் சம்பந்தமான நிறுவனங்கள் ஒரு விதமாகவும், நிர்வாகத் தொழிற்பாடு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, கைத்தொழில், கடற்றொழில், விவசாயம், கால்நடை வளர்ப்புஇப்படிஒவ்வொருதொழில்முறையிலும் எதிர்கொள்ளவேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. இவற்றுக்கு முகம் கொடுத்து தொழில் புரிவதுடன் நிறுவனத்தில் குறிப்பட்ட இலக்கை அடைய வழி அமைக்கவேண்டும். இலக்கை அடையாதுவிடின், தொழிலானது குறைபாடுகளுக்குக் காரணமாக அமைந்து விடும். இதன்போது தொழிலாளரின் வினைத்திறன் (தகுதி) கணிப்பிடப்படும். தொழிலாளர்கள் எல்லோரும்ஒரே தரத்தில் உள்ளவர்கள் அல்லர். இவர்களைக் குறைந்தது 3 வகையினராகக் கருதலாம்.

01. தனக்கு ஒப்படைத்த கடமைகளை முழுமை செய்யக்கூடியவர்.
02. தனக்கு ஒப்படைத்த கடமைகளை முழுமையாகச் செய்யமுடியாதவர்.
03. தனது கடமைகளை (ஒப்படைத்த) செய்வதுடன் மேலும் பயன் அளிக்கக் கூடிய வகையில் தமது கடமைகளைச் செய்து பயனாளிகள், நிறுவனங்கள், நிர்வாகங்களுக்கு மேலதிக பயன்பாட்டை வழங்கக் கூடியவர்கள்.

முதலாவதாகக் குறிப்பிடப்படுவோர் தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர்கள். இவர்களைத்தொழிலுக்குரித்தான வேலையாளர்கள் எனக் கருதலாம். இரண்டாவதாகக் குறிப்பிடப்படுவோர் தமது வேலையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள். அவர்களின்தொழிற்றகைமை, கல்வித்தகைமை, ஆற்றல் என்பவற்றின் குறைபாடுகள் இந்த நிலைமைகளுக்கும் காரணமாக இருக்கலாம். இதிலிருந்து விடுபட அவர்கள் முயற்சி எடுத்தல் வேண்டும். உரிய தகைமை உள்ளவராக மாற்று வேலை கொள்வோரும் முயற்சிக்க வேண்டும். அல்லாதவிடத்து குறிப்பிட்ட இலக்குகளை அடைய

> ஒவ்வொரு ஆசிரியரும் எதிர்காலச் சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்பும் சிற்பிகளாகக் கருதப்படுவர். இவர் தனி ஒரு வேலையாளாக மட்டும் கடமையாற்றாது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவ சமூகத்தை எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பைத் தம்முள் கொண்டுள்ளனர். இதனைத் தனி வேலை நேரக் கடமை மூலம் பூர்த்தி செய்ய முடியாது. அதேபோன்று தனது ஆளுமை மூலம் மாணவர் மனதில் கல்வியைப் பதித்து, அவனது குணவியல்பு, குறைபாடுகளை அறிந்து, அவற்றிலிருந்து கல்வியில் மனநாட்டம் உடையவனாக அந்த மாணவனை மாற்றியமைப்பதென்பது வெறுமனே சம்பளத்துக்கு வேலைகளைச் செய்யும் தொழிலாகக் கருதமுடியாது.

முடியாது.

மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவோர் வேலையைச் செய்வதுடன் மேலதிக ஆற்றல்களை உடையவர்கள். அவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வேலையின் பயன் உறுதியை அதிகரித்து, தொழில் கொள்ளும் பகுதிகளுக்குக் கூடுதல்நன்மை அளிக்கக்கூடிய பெறுபேறுகளை வழங்கக் கூடியவர்களாக இருப்பர். இவர்களது செயற்பாடு தமது வருவாய் கருதாது செய்யப்படும் போது, அதற்குரிய பதம் சேவை எனக் கருதப்படுகிறது. சேவை என்ற சொற்பதம் பல தொழிற்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் சிலவற்றைக் குறிப்பிடும்போது வைத்திய சேவையில் இருத்தல், ஆசிரிய சேவையில் இருத்தல், போக்குவரத்துச் சேவையில் இருத்தல் எனக் குறிப்பிடுவது வழக்கமாகும். இப்படிக் குறிப்பிடுதல் தவறு அல்ல. ஆனால் அவர்கள் மேற்குறிப்பிட்ட 3 ஆவது வகையினராக அந்தச் சொற்பதத்துக்கு உரியவராக இருத்தல் வேண்டும்.

உதாரணமாக-ஆசிரியர்எனக்குறிப்பிடப்படும் போது ஒவ்வொரு ஆசிரியரும் எதிர்காலச் சமூகம் ஒன்றைக் கட்டிஎழுப்பும் சிற்பிகளாகக் கருதப்படுவர். இவர் தனி ஒரு வேலையாளாக மட்டும் கடமையாற்றாது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவ சமூகத்தை எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பைத் தமக்குள் கொண்டுள்ளார். இதனைத் தனி வேலை நேரக்கடமைமூலம்பூர்த்திசெய்யமுடியாது. அதேபோன்று தனது ஆளுமை மூலம் மாணவர் மனதில் கல்வியைப் பதித்து, அவர்களது குணவியல்பு, குறைபாடுகளை அறிந்து, அவற்றிலிருந்து கல்வியில் மனநாட்டம் உடையவர்களாக மாற்றியமைப்பதென்பது வெறுமனே சம்பளத்துக்கு வேலைகளைச் செய்யும் தொழிலாகக் கருத முடியாதது. சமூகப் பொறுப்பு உள்ள தொழில் அது. அதற்கேற்பவே அவரது கடமையும் அமையவேண்டும். அதன்படியே ஆசிரிய சேவையில் உள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது. சேவை என்ற சொற்பதம் அவர்களது தொழிலில் இணைக்கப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணரவேண்டும். கௌரவம் கருதாது பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குச்சென்று கடமையாற்ற வேண்டும். அந்தச் சூழலில் இருந்து சிறந்த மாண வர் சமுதாயத்தை உருவாக்குவது என்பது ஆத்ம திருப்தியைத் தரும் விடயம். ஒரு தனி நபர், தான் ஓர் தகுதியான நிலையை அடையும் வரையாக தான் பிற்பற்றி வந்த பாதைகளைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த வகையிலே சேவை என்ற சொற்பதம் கருதிப் பணி செய்தல் ஒவ்வொரு ஆசிரியரதும் கடமையாகும்.

வைத்திய சேவையை நோக்குவோமாகில், அங்கும் சேவை என்ற பதம் முன்னிலை பெறுகிறது. ஏனெனில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளி இடங்களில் வசதியாக வாழ்வதற்கும் சொத்துக்கள் சேர்ப்பதற்குமாகத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமது தாய்நாட்டில் தமது மக்களுக்காகவே சேவை செய்யவேண்டும் என்ற மனிதாபிமான, ஆன்மீக சிந்தனையுடன் செயற்பட்ட, செயற்படும் வைத்தியர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுடன் இணைந்து செயலாற்றிய இணை உத்தியோகத்தர்களையும் சிந்திக்கத் தெரிந்த மனித சமூகம் தெய்வங்களாகவே கருதவேண்டும்.

அந்த வகையிலே, கடந்த கால அனர்த்தங்களின் போது தங்கள் உயிர்களை மதிக்காது கடமையில் ஈடுபட்டமை, நேரம்பாராது கடமையில் ஈடுபட்டமை, அவசர சிகிச்சைகளுக்காக ஓய்வுநேரம்பாராது கடமை புரிந்தமை, பிரயாணக் கஷ்டங்களின் மத்தியில் வசதிக் குறைவுகளை அனுசரித்து கடமையாற்றியமை என்ற வகைப்பாடுகள் சேவை என்ற சொல்லுக்கு வலுச் சேர்ப்பவையாக அமைகின்றன.

(தொடரும்)


## 41ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு





மண்ணுலகில் 20.02.1997

விண்ணுலகில் 03.04.2017

**அமரர் செல்வன் ஈஸ்வரன் கோகுலன்**

கண்ணீரில் நாற்பத்தொருநாள் கரைந்து மறைந்ததடா
கண் மணியே நீயில்லை எம்மோடு உறவாட
எண்ணாத நாளில்லை இரங்காத போதில்லை
உன்னுடைய நினைவுகளே எமை இங்கு ஆளுதடா
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பாய் என்றிருக்க
இடைநடுவில் தவிக்கவிட்டு எங்கு மறைந்தாயோ?
உன் நினைவுகளில் வேகின்ற நெஞ்சங்கள் இங்கிருக்க
கனவாகி போனதுமேன் கண்மணியே கூறாயோ?

இன்று (13.05.2017) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (14.05.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் முகப்பு,
சுன்னாகம்.

பாசமுள்ள அம்மா சந்திரிக்கா
மாமாமார் : ஜெயக்குமார், சசிதரன், மேகவர்ணன்.
மாமிமார்: திரிலோஜினி, நந்தகுமாரி, கிருஸ்ணபவானி.
அம்மம்மா : புவனேஸ்வரி.

(CS/3886)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 2017 வைகாசி மாத பலன்



## கடகம்

ஆர்பாட்டமில்லாமல் அமைதியாகச் சாதித்துக் காட்டுபவர்களே! உங்களின் யோகாதிபதியான செவ்வாய் இலாபஸ்தானத்தில் வலுவாக அமர்ந்திருப்பதால் புதிய திட்டங்கள் எல்லாம் சாதாரணமாக நிறைவேறும். பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிந்து களைவீர்கள். புது வேலை கிடைக்கும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். சகோதரி உங்கள் வேலைதளைப் பகிர்ந்துக் கொள்வார்.
சொத்தை வாங்குவதும், விற்பதும் இலாபகரமாக முடியும். வழக்கால் இருந்த நெருக்கடிகள் நீங்கும். சுக்ரன் 9ஆம் வீட்டில் நிற்பதால் பணவரவு அதிகரிக்கும். மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீட்டுக் கடன் கிடைக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக அமையும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். புதன் சாதகமாக இருப்பதால் பழைய நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.
உறவினர்களால் அனுகூலம் உண்டு. ராகு, கேது, சனி மற்றும் குரு உங்களுக்கு சாதகமாக இல்லாததால் மற்றவர்களை நம்பிப் பெரிய முயற்சிகளில் ஈடுபடாதீர்கள். எவருக்காகவும் சாட்சிக் கையொப்பமிட வேண்டாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.
கன்னிப் பெண்களே! பெற்றோர் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.
வியாபாரத்தில் பழைய வருமதிகள் வசூலாகும். புதிய வாடிக்கையாளர்கள் வருகை தருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையேயென ஆதங்கப்படுவீர்கள்.
கலைத்துறையினரே! புது வாய்ப்புகள் தேடி வரும். சாதித்துக் காட்டும் வாரமிது.
அதிர்ஷ்ட திகதிகள்: 2, 4, 6
அதிர்ஷ்ட எண்கள்: 3, 8
அதிர்ஷ்ட நிறங்கள்: ஒரேஞ்சு, கறுப்பு
அதிர்ஷ்ட திசை: வடகிழக்கு



# வரலாற்றில் இன்றைய தினம்

1830-கொலம்பியாவிடமிருந்து ஈக்குவடோர் சுதந்திரம் பெற்றது.
1846-மெக்ஸிகோ மீது ஐக்கிய அமெரிக்காவால் போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது.
1861-பிரிட்டன் ஆட்சியில் இந்தியாவின் அங்கமாக இருந்த பாகிஸ்தானில் கராச்சியிலிருந்து கோத்ரி வரை முதலாவது தொடருந்துப் பாதை திறந்து வைக்கப்பட்டது.
1888-பிரேசிலில் கோல்டன் சட்டத்தின் மூலம் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது.
1912-றோயல் விமானப்படைக்கு முன்னோடியாக றோயல் பறக்கும் படைப்பிரிவு ஐக்கிய இராச்சியத்தில் நிறுவப்பட்டது.
1939-அமெரிக்காவில் முதலாவது எப்.எம். வர்த்தக வானொலி சேவை புளூம் பீல்டில் தொடங்கப்பட்டது.
1943-ஜேர்மனிய ஆபிரிக்க படைப்பிரிவும் இத்தாலியத் துருப்புக்களும் கூட்டுப்படைகளிடம் சரணடைந்தன.
1952-இந்தியாவின் நாடாளுமன்ற மேல் சபை முதன்முதலாகக் கூடியது.
1967-டாக்டர் ஷாகிர் ஹுசைன் இந்தியாவின் மூன்றாவது அரசதலைவரானவர் இவரே இந்தியாவின் முதலாவது முஸ்லிம் அரச தலைவராவார்.
1981-ரோம் சென்பீற்றர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல்மீது படுகொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக அவர் அகஸ்ரினோ கெமிலி பல்கலைக்கழக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதையடுத்து உயிர்பிழைத்தார்.
1989-தினமன் சதுக்கத்தில் பெருந்திரளான மாணவர் கூடி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்.
1998-இந்தோனேசியாவில் இனக்கலவரம் ஏற்பட்டது. சீனவம்சாவளி இந்தோனேசியர்களின் கடைகள் சூறையாடப்பட்டதுடன் பெண்களும் வன்புணர்வுக்குள்ளாகினர்.
2003-வடக்கு கிழக்கில் மீளக் கட்டியெழுப்ப அதிகாரத்துடன் கூடியதான கட்டமைப்பு -அரசுக்குப் புலிகள் யோசனை.
2003-வவுனியாவில் ரெலோ உறுப்பினர் ஒருவர் வீட்டுக்கருகே வைத்துச் சுட்டுக்கொலை.
2006-இலங்கை நிலமை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை.
2006-தமிழக முதல்வராக கருணாநிதி 31 அமைச்சர்களுடன் சத்தியப்பிரமாணம்.
2006 -தி.மு.க வை விட அதிமுகவுக்கு 19 லட்சம் வாக்குகள் அதிகம்.
2006 -எண்ணைய்க் குழாய் வெடித்து நைஜீரியாவில் 200 பேர் சாவு.
2011 -பாகிஸ்தானில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புக்களில் 98 பேர் உயிரிழந்ததுடன் 140 பேர் காயமடைந்தனர்.

## நாளை

**சித்திரை-31**
ஞாயிற்றுக்கிழமை -14.05.2017
திதி: திருதியை மு.ப.09.04
நட்சத்திரம்: மூலம் பி.இ.12.43
சுபநேரம்:08.53-10.23 வரை
ராகுகாலம்:04.23-05.53 வரை
சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரயல் அட்பார் விசாரணை யாழ்ப்பாணத்தில் சாதகமே

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவுபெறுகின்றன.
வித்தியா படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி விசாரணைகளை யாழ்ப்பாணத்திலேயே முன்னெடுங்கள் என்று கோரி புங்குடுதீவு மக்கள் நேற்றுமுன்தினம்கவனவீர்ப்பு பேரணியை முன்னெடுத்திருந்தனர். சுதந்திரமாகப் பாடசாலை சென்று கற்றலை முன்னெடுக்க வேண்டிய மாணவி, இதேநாளில் மழைக்கு மத்தியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது கடத்தப்பட்டு காமுகர்களால் கூட்டாக வேட்டையாடப்பட்டாள். மறுநாள் அலங்கோலமான நிலையில் சடலமாக அவள் மீட்கப்பட்டாள்.
வித்தியா கொலையின் எதிரொலி யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கொந்தளிக்க வைத்து நாடு முழுவதும் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது. பாடசாலை மாணவர்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. வழக்குடன் தொடர்புடையவர்களாக முதன்மையான 9 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.
இந்தக் கொலையின் சுருக்க விசாரணை நீதிவான் மன்றில் நிறைவடைந்து கொலைக் குற்ற விசாரணைக்காக யாழ்ப்பாண மேல் நீதிவான் மன்றில் 12 ஆம் திகதி (நேற்று) வழக்கு பாரப்படுத்தப்படும் என்று சட்டமா அதிபரே தனது சட்டத்தரணி ஊடாகக் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.
இந்த நிலையில் குறித்த வழக்கு ட்ரயல் அட் பார் முறையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ட்ரயல் அட் பார் முறையில் விசாரணை செய்வதனை ஏற்றுக்கொள்ள முடிகிறது. பலரது எதிர்பார்ப்பும் அதுவாகவே இருந்தது. ஆனால் அந்த விசாரணையை கொழும்பில் நடத்த முற்படுவதுதான் பெரும் பிரச்சினையாகியுள்ளது. அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுவரையான ட்ரயல் அட்பார் முறையிலான வழக்குகள் அனைத்தும் கொழும்பில் இடம்பெற்றிருக்கிறபோதும், இந்த வழக்கு முற்றுமுழுதாக வேறுபட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பில் உள்ளமையும் அதற்குக் காரணமாக இருக்கலாம். அதற்காக கொழும்பில்தான் ட்ரயல் அட்பார் முறையிலானவிசாரணையை நடத்தவேண்டும் என்பதில்லை. தவிர இந்த வழக்கை யாழ்ப்பாணத்தில்தான் நடத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுக்கின்றனர். அதனை ஏற்றுச் செய்வதில் சிக்கல் ஏற்படப்போவதில்லை. உரிய ஆயத்தங்கள், திட்டமிடலோடு சட்டமா அதிபர் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் விசாரணையை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுவிடப்போதில்லை. தடங்கலும் வரப்போவதில்லை.
குற்றம் நடந்த இடம், குற்றத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினர், குற்றத்துடன் தொடர்புடையவர்கள் என்று அடையாளப்படுத்தபடுபவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது உறவுகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்டதரப்பு மற்றும் எதிரி தரப்பினரின் உறவுகள் கொழும்புக்குச் செல்வதிலிருந்து அங்கு தங்கி நிற்பது உள்ளிட்ட செலவுகளையும் ஏற்கவேண்டிய நிலை வரும். அரச தரப்பு யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கி நின்று விசாரணை செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசே பொறுப்பேற்கும். அந்த விடயத்தில் கூடச் சிக்கல் ஏற்படப்போவதில்லை.




அப்படியிருக்க ட்ரயல் அட்பாருக்கான இடத்தைத் தீர்மானிப்பதில் எதற்காக இழுபறிவேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன? இரண்டு வருடங்கள் கடந்தும் பாதிக்கப்பட்ட தரப்புக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அதனை மேலும் இழுத்தடிப்புச் செய்யக் கூடாது. பாதிக்கப்பட்டவர்களது நிலையைத் தலைமை நீதியரசர் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொள்வதில் தலைமை நீதியரசருக்குச் சிக்கல் இருக்கப் போவதில்லை. அதனைக் கடிதம் மூலமாக புங்குடுதீவு மக்கள் கோரியுள்ளனர். அது குறித்துச் சாதகமாகக் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனக்குழப்பம் உருவாகலாம். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரச வகையில் நன்மை எதிர்பார்க்கலாம்.

**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். தொழில், வியாபாரத்தில் குறைபாடுகளை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மிதுனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உருவாகும். லாபம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்குச் சகோதர வழியில் உதவி கிடைக்கும். உடல்நிலை சீராகும்.

**சிங்கம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பிள்ளைகளின் செயற் பாடு பெருமை அளிக்கும்.

**கன்னி:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.

**துலாம்:** தடைகளைத் தகர்த்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் பன்மடங்கு உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பெண்கள், கணவரின் அன்புக்குரியவர்களாக ஆவர்.

**விருச்சிகம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயற்சிப்பீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் லாபம் குறையாது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிக்கு வழி வகுக்கும்.


**தனுசு:** குடும்பத்தில் எவருடனும் வாக்குவாதம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** உங்கள் கருத்தை மற்றவர்கள் தவறாக உணர்ந்து கொள்வர். குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேசவேண்டாம். விடாமுயற்சியால் தொழில், வியாபாரத்தில் லாபம் வரும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**கும்பம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி தக்கநேரத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மீனம்:** அன்பு மிக்கவராக அனைவரையும் ஆதரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறப்பான வளர்ச்சி இருக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் உண்டாகும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

# உயர்கல்வி படிப்பதில் ஏற்படும் சிக்கல்களைக் கூறும் 'எய்தவன்'




கலையரசன் - சாதனா நடிப்பில் உருவாகியிருக்கும் படம் 'எய்தவன்'. சக்திராஜன் இயக்கியுள்ள இந்தப்படத்தை `பிரண்ட்ஸ்பெஸ்ட்டிவெல் பிலிம்ஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது.

ஆடுகளம் நரேன், வேலாராமசாமி, கிருஷ்ணா, ராஜ்குமார், வளவன், விநோத், சௌமியா, ராதா உட்படப் பலரும் நடித்திருக்கும் இப்படத்தில், தற்போதைய முக்கிய பிரச்சினையான மருத்துவத் துறை படிக்கச் சென்று, அதனால் பாதிக்கப்படும் 16 பேரை மையமாக வைத்துக் கதை நகர்கிறது. அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்படும் அனைவரும், அதிலிருந்து தப்பவே முயற்சி செய்கிறார்கள். அதில் ஒருவர் நாயகனின் தங்கை. தங்கையின் உயர் படிப்புக் கனவை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிக்கல்களும், அதனால் உருவாகும் பிரச்சினைகள், சந்திக்கும் அரசியல் சூழ்ச்சிகளும், அவற்றை எதிர்கொள்ள அவர் எடுக்கும் முடிவுகளுமே 'எய்தவன்' படத்தின் கதை.

காதல், நகைச்சுவை, அதிரடி கலந்த படமாக உருவாகியுள்ள 'எய்தவன்' இந்த வாரம் வெளிவரவுள்ளது.

உனக்கு என்று ஒருத்தி பிறந்திருப்பாள்னு சொன்னாங்க. 30 வயசுக்கு மேல ஆயிடுச்சு, இன்னும் காணோம். தற்கொலை பண்ணிகிட்டாளா என்று எனக்கு சந்தேகமாவே இருக்கு



**ஜாலி மேன்**



பிடியளவு சோறு தான் பானையில் இருந்தாலும், பிள்ளை வயிறு பசி பொறுக்காது என்பவளே உன் வயிறுக்குப் பசிக்காதா அம்மா…!




**வீடென்று ஒன்று இருந்தால் அதன் அருகில் மரமொன்று வேண்டும் என்பது**



**குழந்தைகளுக்கு மட்டுமே தெரிகிறது!**

**பத்து ஏக்கர் நிலத்தை விற்று படித்துச் சம்பாதித்து…**



**பத்து சென்ட் பிளாட் வாங்குவதற்குப் பெயர்தான் தொழிற் கல்வி**

**சூரியன் சூரியன் சுருக்குப் பையில் நா அள்ளி வர அள்ளி வர ஆசைப்பட்டன்**





**அடிக்கிற வெயில்ல லவ் பன்னா இப்படித்தான் பைத்தியம் பிடிக்கும், வெயில தல காட்ட முடியல, சுருக்குப் பையில அள்ள போறாலாம்.**

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 5 | 3 | | | 7 | 6 | 9 |
| | | 3 | | 7 | | | 8 | |
| 6 | 7 | | | 8 | | | 1 | |
| 7 | | | | 3 | | | | |
| | 1 | | | | 4 | | 7 | 6 |
| | | | | | | 2 | | |
| | | 1 | 5 | | | | | |
| 5 | | 9 | | | | 1 | | |
| | | 7 | 2 | 1 | 3 | | 9 | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபக்தி

மகாபாரதக் கதையில் ஏகலைவன் என்பவன் ஒரு வேடுவ இளைஞன். அரசகுமாரர்களுக்கு வில்வித்தை பயிற்றுவிப்பவர் துரோணர் என்ற வில் ஆசிரியர். அவரிடம் வில் பயிற்சி பெற வேண்டும் என்று விரும்புகிறான் ஏகலைவன். ஒரு நாள் அவன், அவர் தனித்திருக்கையில் அவரிடம் சென்று தனது விருப்பத்தைத் தெரிவிக்கிறான். துரோணர் அரச குமாரர்களுக்கு மட்டும்தான் அந்த வித்தையைத் தாம் கற்றுக் கொடுப்பதாகவும், வேறு எவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை என்றும் கூறி வில்வித்தை பயிற்றுவிக்க மறுத்து விடுகிறார். அவரது மறுப்பால் ஏகலைவன் மனம் ஏமாற்றமடைந்தாலும் சோர்ந்து போய் விடவில்லை.

காட்டினுள் சென்று துரோணரைப் போன்ற ஒரு அழகிய சிலை ஒன்றைச் செய்தான். அந்த உருவச் சிலையையே தனது மானசீகக் குருவாகக் கொண்டு வித்தைகள் பயின்றான். அவனுடைய குரு பக்தியும், தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் வீண் போகவில்லை. நேரிலே துரோணஆசிரியரிடம் பயிற்சி பெற்றிருந்தால் எப்படிச் சிறந்து விளங்குவானோ, அந்த அளவுக்கு வில் வித்தையில் திறமைசாலியானான். அவனது திறமையைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள். பாராட்டினார்கள். வில் வித்தையில் ஏகலைவன் சிறந்து விளங்குகிறான் என்ற செய்தி துரோணர் செவிக்கும் எட்டியது. அவரும் ஆச்சரியப்பட்டு அவனைக் காண வருகிறார். துரோணரைக் கண்டு ஏகலைவன் மிகவும் மகிழ்ந்து அவரைப் பணிந்து வணங்கி உபசரிக்கிறான். அவரின் வேண்டுகோளின்படி வில்வித்தையில் ஒரு சில வித்தைகளை அவருக்குச் செய்தும் காண்பிக்கிறான். அவனது வித்தைகளைக் கண்டு மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார் துரோணர். அவன் எவரிடம் வித்தை கற்றான் என்பதை வினவினார். " தங்களைவிட வேறு ஒரு குரு எனக்கில்லை. தங்களையே என்னுடைய மானசீகக் குருவாக எண்ணி, தங்கள் உருவத்தைச் சிலைசெய்து அதன் முன்னிலையில் நின்று பயிற்சி பெற்றேன்" என்றான் ஏகலைவன். துரோணர் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார்;. சிந்தித்தார். "அரச வம்சத்தினர் போர் செய்வதற்கு கற்கும் இந்த விற்பயிற்சியை வேறொரு சாதாரண வேடன் பயின்றிருப்பதால் அசம்பாவிதம் ஏதேனும் நடந்துவிடக்கூடாதேயென நினைத்ததுரோணர் "நான் உனது மானசீக குருவாயின் எனக்கு நீ குருதட்சணை தர வேண்டுமே! நான் கேட்பதைத் தருவாயா?" என்று கேட்டார். ஏகலைவன் மகிழ்வோடு சம்மதிக்க " சரி உன் கட்டை விரலை வெட்டிக்கொடு" என்று கேட்டார்.

வில் வித்தைக்கே முக்கியமானது கட்டை விரல்தான். அதைக் கேட்கிறாரே என்று அவன் சிறிதேனும் தயங்காமல், உடனேயே கத்தியை எடுத்தான்; கட்டை விரலை வெட்டினான். குருவுக்குக் காணிக்கையாகச் செலுத்தினான். துரோணர் அவனது குருபக்தியைக் கண்டு வியந்து நின்றார்.

துரோணர் வில்வித்தையைக் கற்றுக் கொடுக்க மறுத்தும், அவர் மீது அவன் கோபம் கொள்ளவில்லை. அவர் உருவத்தை வழிபட்டுப் பயிற்சி பெற்றான். தன்னைக் காணவந்தவரை மதிப்புடன் வரவேற்று உபசரித்தான். அவருக்குக் குருதட்சணையாக தனது கட்டை விரலையே கொடுத்து பின் நாள்களில் குருபக்திக்கே இலக்கணமானான்.



**இன்றைய மாணவ சமூகம் குருதட்சணை கொடுக்காவிடினும், குருவை மதித்து நடந்தாலே போதுமானது.**



# பூகம்பம் வருவதை விலங்குகள் அறியுமா?

பூகம்பம் வந்து உலுக்கிய பின்னர் அது எவ்வளவு தீவிரமானது என்பதை ரிக்டர் அளவில் அளந்து அறியலாம். மனித முயற்சி இதை மட்டுமே சாத்தியமாக்கி இருக்கிறது. இந்த நேரத்தில் இந்த இடத்தில் இப்படி ஒரு பூகம்பம் வரலாம் என கணித்துச் சொல்லும் தொழில் நுட்பம் இன்னமும் கை கூடவில்லை. ஆனால் பூகம்பம் வருவதை விலங்குகளும் பறவைகளும் முன் கூட்டியே உணர்ந்து கொள்கின்றன. என்று உலகம் முழுவதிலும் நம்பிக்கை இருக்கிறது. உண்மையில் விலங்குகள் பூகம்பத்தை உணர்ந்து கொள்ளுமா என்றால் அதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் சீனா, ஜப்பான், இந்தோனேசியா போன்ற நில நடுக்கம் அதிகம் நிகழக் கூடிய நாடுகள், விலங்குகளுக்கும் இந்த ஆற்றல் உண்டு என்று வாதிடுகின்றன. இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழ்ந்திருந்தால், மனிதனும் பூகம்பம் வருவதை முன் கூட்டியே அறிய முடிந்திருக்கும் என்கிறார்கள். விலங்குகள் உண்பது, உறங்குவது எல்லாமே பொதுவாக தரையில்தான். தரை மீது தான் அவைகள் பெரும்பாலான நேரங்களில் காதை வைத்துத் தூங்கும். தரைக்கும் விலங்குகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அதனாலேதான் தரையில் ஏற்படும் மெல்லிய அதிர்வுகளைக்கூட அவற்றால் உணர்ந்து கொள்ள முடிகிறது. புகையிரதப் பாதையில் (தண்ட வாளத்தில்) காதை வைத்தால் தூரத்தில் வரும் புகையிரதத்தின் சத்தம் கேட்பதைப் போல், தரையின் மீது மிருகங்கள் எப்போதும் காதை வைத்துக் கொண்டு தூங்குவதால் அவற்றால் நில நடுக்கத்தின் சத்தத்தைக் கேட்க முடிகிறது என்கிறார்கள். விலங்குகள் போலவே ஆதி மனிதனும் பூகம்பம் வருவதை முன் கூட்டியே உணர்ந்து அதற்கேற்பத் தனது இடங்களை மாற்றிக் கொண்டான். நவீன கால மனிதன் வாகனங்களுக்குப் பழங்கப்பட்டதால், அதிர்வுகளைத் தாங்கி உடல் பழக்கப்பட்டு விட்டதால் பூகம்பத்தின் மெல்லிய அதிர்வுகளை அவனால் உணர முடிவதில்லை என்கின்றனர் ஜப்பானியர்கள். நில நடுக்கத்துக்கு முன்னர் நிலத்தின் மீது கந்தக வாசனை வீசும் என்றும், இதனை விலங்குகள் முன் கூட்டியே உணரும் எனவும் நம்பிக்கை நிலவுகிறது. பறவைகள்கூட இதை உணர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று விடுகின்றன எனவும் கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் விஞ்ஞானம் இன்னமும் உறுதிப்படுத்தாமையால் உண்மை எது என நம்ப முடியாத நிலை உள்ளது.

## படத்தில் காட்டப்பட்டுள்ள ஏப்ரல் மாத நாள்காட்டியைப் பார்த்து விடை எழுதுவோம்



1. ஏப்ரல் 1ஆம் திகதி என்ன நாள்?

-----------------------------------

2. ஏப்ரல் 12ஆம் திகதி என்ன நாள்?

-----------------------------------

3. ஏப்ரல் மாதத்தின் முதலாவது சனிக்கிழமை என்ன திகதி?

-----------------------------------

4. ஏப்ரல் மாத்தில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

-----------------------------------



## வானவில்

- வானவில் அழகான ஏழு நிறங்களைக் கொண்டு வானில் காட்சியளிக்கும்.
- வானவில்லின் நிறங்களாவன ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு ஆகியனவாம்.
- மழை பெய்யும் பொழுது சூரிய ஒளிக்கதிர்கள் மழை நீரை ஊடறுப்பதால் வானவில் உண்டாகும்.
- இது சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்த் திசையிலேயே தோன்றும்.
- இது சற்று நேரம் வரையே வானில் தொரியும். சடுதியாகத் தோன்றி மறையும்.
- இதனால் மனித வாழ்க்கையையும் வான வில்லுக்கு ஒடுப்பிடுவார்கள்.
- பூமியின் கோள வடிவுக்கேற்ப வானவில் விரியும்.
- ஒரு வகைக் கள்ளிச் செடியின் இலையை மடித்தால் அது உடையும் பகுதிப் பாலில் வானவில் தெரியும்.
- தண்ணீரின் மேல் பெற்றோலியக் கசிவு விழுந்தாலும் வானவில்லின் நிறங்களைக் காணலாம்.
- சவர்க்கார நீரில் சிறுவர்கள் சிறிய குழல்களை நனைத்து ஊதும் போது ஏற்படும் வட்டவ வட்ட குமிழிகளில் வானவில்லின் வர்ணஜாலங்களை சிறுவர்களும் பெரியோர்களும் கண்டுகளிப்பர்.



# வழுக்கு மர வாழ்வு

பண்டிகை நாள்களில் ஒரு விளையாட்டாக "வழுக்கு மரம்" ஏறும் போட்டி நடைபெறுவதுண்டு. வழுக்குக் கம்பம் ஒன்றில் வழிய வழிய எண்ணெய் தடவி இருப்பர். அதில் ஒருவர் ஏறி கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் பண முடிப்பை எடுக்க வேண்டும். ஒருவரால் தனியாக ஏற முடியாவிட்டால் மூன்று நான்கு பேர் சேர்ந்த குழுவாக இந்த முயற்சியில் ஈடுபடலாம். மூன்றுபேர் அந்த வழுக்கு கம்பத்தைக் கட்டிப் பிடித்து நின்று கொள்வர். ஒருவன் அவர்கள் மேல் ஏறி, அவர்கள் தோள் மீது காலை வைத்து வழுக்கு கம்பத்தில் ஏறுவான். கீழே நிற்போர் வழுக்கு கம்ப த்தின் மீது தண்ணீரை உற்றுவர். எண்ணெயும் தண்ணீரும் சேர்ந்தால் கம்பம் மேலும் வழுக்கும். ஏறுபவன் அதையும் மீறி உச்சியை அடைய வேண்டும். முடியாவிட்டால் அடுத்த குழுவினர் வருவர். எப்படியோ ஒரு குழுவைச் சேர்ந்தவன் ஏறிப் பண முடிப்பை எடுத்து விடுவான்.

வாழ்க்கையும் ஒரு வழுக்கு மரத்தைப் போன்றதுதான். அன்றாடப் பொழுது . சிரமமில்லாமல் போனால் போதும் என்று நினைப்போரைப் பற்றிப் பேச எதுவும் இல்லை. ஆனால் சாதிக்கத் துடிப்போர் சந்திக்கும் பிரச்சினைகள் வழுக்கு மரம் போன்றவை தான். வழுக்கு மரம் என்னும் வாழ்வில், முயற்சிக்கும்போது அவனை வெற்றி அடையவிடாமல் தடுப்பதற்கும், அவனுக்கு இடையூறுகள் செய்வதற்கும், தண்ணீரை வாரி அடிக்கவும் சிலர் இருப்பர். அதனையும் மீறி அவன் கம்பத்தின் உச்சியை அடைய வேண்டும். ஆனால் அதை விடுத்துத்தனது முயற்சிக்கு இடையூறாகத் தண்ணீர் பீய்ச்சி அடிப்பவர்கள் மேல் கோபம் கொண்டு, கம்பத்தில் ஏறுவதைக் கைவிட்டு இறங்கி வந்து அவர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பான் அல்லது தண்ணீர் பீய்ச்சியடித்தவர்களைக் கண்டு "சே! என்ன பொறாமைக்கார உலகம்" என்று சமூகத்தை நிந்தித்து தனிமை வாழ்வை நாடத் தொடங்குவான். தடைகளைத் தாண்டுபவனே வாழ்வில் வெற்றியடைவான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முள்ளி...*
முள்ளியவாய்க்கால் கிழக்குப் பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி ரவைகள் பல வெடிக்காத நிலையில் உக்கிக் காணப்படுகின்றன என்று கூறப்பட்டது. போர் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்த நிலையிலும் போரின் அடையாளங்களையும், வடுக்களையும் அங்கு ஒரு சில இடங்களில் பரவலாகக் காணமுடிவதாக அங்கு சென்றவர்கள் தெரிவித்தனர். அந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் துப்பாக்கி ரவைகள் அகற்றப்படாத நிலையில் இப்போதும் காணப்படுகின்றன என்று கூறப்பட்டது. (த-4)

*முள்ளி...*
இந்த நினைவேந்தலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், ஆ.பரஞ்சோதி, க.விந்தன் மற்றும் வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
நேற்று ஆரம்பித்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் தொடர்ச்சியாக வடக்குகிழக்கு மாகாணங்களின் பல்வேறு இடங்களிலும் நடைபெறவுள்ளன. (த-ரி)

**விருந்தினர் விடுதிக்கு வேலையாள் தேவை**
* வரவேற்பாளர் * சுத்திகரிப்பாளர்
**மேலதிக தொடர்புகளுக்கு 0767990089**

## மரண அறிவித்தல்



# நாகமணி நடேசன்

*(முன்னாள் கல்விசாரா ஊழியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம்.)*

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி நடேசன் 11.05.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி சூசானம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னையா, நல்லதம்பி மற்றும் வேலாயுதம் , சின்னத்துரை. காந்தி, நாகம்மா, நாகேஸ்வரி. சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மரஜனி, சபேசன் (லண்டன்), விமலதாசன் (அமெரிக்கா), அருணன் (ஆசிரியர்), தமிழினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அருள்தாஸ், ஜோன்றஜீப், பிரசாந்தி, நிந்துஜா, தாரணி ஆகியோரின் அன்பு மாமனும் கியூரிகா, தீபிகா, பியன்பெனோ, பிரக்ஷா, ஜபிஷா, ரம்மியா, சஜீப் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி கிழக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 952 2161**

# கண்ணீர் அஞ்சலி



## கதிர்காமர் சுப்பிரமணியம் (கனடா)

*(முன்னாள் மேலதிகப் பணிப்பாளர் கட்டடத் திணைக்களம், இலங்கை)*

கதிர்காமர் சுப்பிரமணியம் இறைபதம் எய்திய செய்தி 06.05.2017 கல்லூரிக்கு கிடைத்தது. இவரது மறைவு கல்லூரிச் சமூகத்திற்கு பெரும் துயரை கொடுத்துள்ளது. அன்னார் எமது கல்லூரியின் அதி மூத்த பழைய மாணவியும் முன்னாள் பிரதி அதிபரும் ஆகிய அமரர் சுகிர்தலக்ஸ்மி (சுகிர்தா ரீச்சர்) அவர்களின் அன்புக் கணவரும் கொக்குவில் இந்துக்கல்லூரியின்வளர்ச்சிக்கு அதீத பற்றுக்கொண்டு உதவிவருகின்ற அன்னாரின் குடும்ப உறுப்பினர்களான எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் சுகன்ஜா (கனடா) சந்திரிக்கா (USA), சுதாகர் (கனடா), சுகேசினி (ஆஸ்திரேலியா), சசிதரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகு (கனடா), ஆனந்தா (USA), நகுலேஸ்வரி (கனடா), சிவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நம்பிக்கை நிதியம் ஊடாக பல மில்லியன் ரூபா நிதிகளை வழங்கி எமது கல்லூரி மாணவர்களின் கல்வி மேம்பாடு, விளையாட்டுத்துறை ஊக்குவிப்பு, பௌதீகவள அபிவிருத்தி போன்ற துறைசார் அபிவிருத்திகளுக்கு உதவி வருவதை நினைவு கூர்வதுடன் அமரர் கதிர்காமர் சுப்பிரமணியம் அவர்களை பிரிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு கல்லூரி சமூகம் சார்பாகவும் நம்பிக்கை நிதியம் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரி குலதெய்வமான கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கிற்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்**
**(யாழ்ப்பாணம்)**

# மரண அறிவித்தல்

திருமதி **நாகேஸ்வரி** (அக்கம்மா)
## தம்பிராசா

பொற்றொழிலாளர் வீதி, இத்தியடி சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தம்பிராசா நேற்று (12.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.



உதிப்பு 25.10.1940 — உதிர்வு 12.05.2017

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ப.தம்பிராசாவின் அன்பு மனைவியும் சிறிதரன் (ஜேர்மனி), பரமானந்தம் (முன்னாள் ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி - பிரான்ஸ்), தர்மலிங்கம் (யாழ்ப்பாணம்), நகுலேஸ்வரன் (டென்மார்க்), பரமேஸ்வரன் (முன்னாள் ஆசிரியர், கொழும்பு வெஸ்லி கல்லூரி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற குமாரசாமி (சங்கானை) மற்றும் நாகரத்தினம் (மணி ஜுவல்லர்ஸ் - சாவகச்சேரி), திலகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**பரமானந்தம் - 0033 650 175 191**
**0094 755 633 903**
**தர்மலிங்கம் - 077 350 0161**
**பரமேஸ்வரன் - 0033 665 017669**
**நகுலேஸ்வரன் - 0045 71301522**

**இத்தியடி,**
**பொற்றொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

# மரண அறிவித்தல்

## கதிர்காமர் சுப்பிரமணியம்



தோற்றம் 14.08.1925 — மறைவு 06.05.2017

யாழ். அராலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், ஸ்காபரோ (கனடா) ஆகியவற்றை வதிவிடங்களாகக் கொண்ட கதிர்காமர் சுப்பிரமணியம் (முன்னாள் மேலதிக பணிப்பாளர் கட்டடத்திணைக்களம் இலங்கை) (06.05.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - அன்னம்மா தம்பதியரின் அருமைமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுகிர்தலக்ஷ்மி (சுகிர்தரீச்சர் முன்னாள் உப அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக்கணவரும் சுகன்யா (Canada), சந்திரிகா (U.S.A), சுதாகர் (Canada), சுகேசினி (Australia), சசிதரன்(Canada) ஆகியோரின் அன்புத்தந்தையும் ரகு (Canada), ஆனந்தா (U.S.A), நகுலேஸ்வரி (Canada), சிவானந்தன் (Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரொஷான், நிலா, ரோஜா காலஞ்சென்ற ரூபிணி மற்றும் கேஷன் ஆகியோரின் அன்புப்பாட்டனும் ஆவார்.

பார்வைக்கு ஞாயிற்றுக்கிழமை (14.05.2017) 4.30 pm - 8.30pm
கிரியை திங்கட்கிழமை (15.05.2017) 9.00 am - 11.30 am

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Address : Elgin Mills Cemetery, Cremation and FuneralCentres 1591 Elgin Mills Road, East, Richmond Hill, ON, L4S 1M9**

**தொடர்புகளுக்கு : சுகன்யா - 905 883 0524, சந்திரிகா - 650 832 1236, சுதாகர் - 780 431 9845, சுகேசினி - 174 749 0165, சசிதரன் - 867 446 6156, ஞானாரீச்சர் ( கே.கே.எஸ் வீதி, கொக்குவில்- 021 205 2672)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் தெற்கு றக்கா வீதி ஸ்ரீ பத்திநாச்சி அம்பாள் ஆலய வருடாந்த மணவாளக்கோல சங்காபிஷேக விழாவும்

## திருவூஞ்சல் பாமாலை வெளியீடும் 2017

*காலம் - 14.05.2017 காலை 7.00 மணி*

*மாலை உற்சவ நிகழ்வுகள்*

மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் திருவூஞ்சலும் நடைபெறும்.

திருவூஞ்சல் பாடல் ஆக்கம் - **பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மெல்பேன் அவுஸ்திரேலியா

திருவூஞ்சல் பாடுபவர் - கலாநிதி N. **சண்முகலிங்கன்**
(முன்னாள் துணைவேந்தர்,
முன்னாள் சமூக வியல் துறைத் தலைவர்,
சிரேஷ்ட பேராசிரியர்) யாழ். பல்கலைக்கழகம்

***தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவரும் காட்சி நடைபெறும்.***

**ஆலய ஸ்தானிக குரு பிரம்ம ஸ்ரீ சோமகேதீஸ்வர சர்மா**

## கட்டடம் வாடகைக்கு வழங்குதவற்கான கூறுவிலை கோரல்

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இல.127, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள சங்க தலைமை அலுவலகத்தின் கீழ்த்தளத்திலுள்ள கடைக்கட்டடம் (முன்பக்கம் கண்ணாடியிலான கதவினைக் கொண்ட வாயில் பகுதி. இணைந்த குளியலறை, கழிவறை வசதிகள் கொண்டது) வாடகைக்கு வழங்கப்படும். எனவே இக்கடைக்கட்டடத்தினை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தொலைபேசியின் ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

**1350 சதுர அடி.**

கட்டடத்தினை நேரில் பார்வையிட விரும்பின்
**கடமை நேரத்தில் (திங்கள் - வெள்ளி : மு.ப. 8.30 - பி.ப. 5.00, சனி மு.ப. 8.30 - பி.ப. 1.30 வரை )** வருகை தந்து பார்வையிட முடியும்.

தொலைபேசி இல. **021 222 2587** உடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),**
**இல.127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும் மன்றத்தின் சேமிப்புத்திட்ட உறுப்பினருமான
**தர்மலிங்கம் கைலாயபிள்ளை**
*(உரிமையாளர் - கைலாயபிள்ளை களஞ்சியம், சாவகச்சேரி)*
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சிவக்கொழுந்து தர்மலிங்கம்**

அவர்கள் 11.05.2017 அன்று காலமானார்.
அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர்*
***கந்தசாமி உலகநாதன்***
**(துங்கோடை, காரைநகர்)**

**தோற்றம்** 16.01.1950 **மறைவு** 24.04.2016

**ஆண்டு ஒன்றாகியது - எங்கள்**
**அகல் விளக்கு அணைந்து**
**அரணாய் நின்றெம்மை ஆதரித்த குலவிளக்கு**
**சித்திரை நிலவாய் நின்று சிந்திய புன்னகையும்**
**இத்தரை நாம் வாழும் வரை**
**அகலாது உங்கள் நினைவுகள்.**

இல. 12 அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## ஸ்ரீ மதி கோமதியம்மா இராமச்சந்திரசர்மா

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம்)**



தோற்றம் 10.08.1942 மறைவு 12.05.2017

சாவகச்சேரி சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீ மதி கோமதியம்மா இராமச்சந்திர சர்மா நேற்று (12.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவஸ்ரீ ஈஸ்வரசாஸ்திரிகள் மீனாட்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சிவஸ்ரீகல்யாண சுந்தரக்குருக்கள் அம்மாளு அம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும் இலட்சுமி அம்மா (அராலி).சீதைஅம்மா காலஞ்சென்ற பார்வதி அம்மா ஆகியோரின் சகோதரியும் இராமச்சந்திரசர்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சுந்த ரேஸ்வரசர்மா (சரசாலை).ஸ்ரீவத்ஸசர்மா (நு\ இரகலை தமிழ் மகாவித்தியாலயம் .ஆசிரியர்).உமா (ஆசிரியை .நு\இராகலை தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுஜாதா.சாந்தினி (ஆசிரியை.மீசாலைவீரசிங்கம்மத்தியகல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஐஸ்வர்யா.ராகவன்.சௌமினியன் .சைந்தவி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 10 மணியளவில் மீசாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெறும்.

**தகவல்:**
**சு.இராமச்சந்திரசர்மா (கணவர்)**
**தொ.இல. 077 620 6681**

**மீசாலை மேற்கு. மீசாலை.**



**இந்தியப் பிரதமர் அவர்களின்**
**இலங்கைக்கான விஜயத்தை**
**இலங்கை வாழ் தமிழ் மக்கள் வரவேற்கின்றோம்**

அவரது வழிகாட்டலில் எம் மக்களில் அக்கறையாய் இருக்கும்
இந்திய உயர்ஸ்தானிகர்,
வடமாகாண துணைத்தூதுவர்,
கண்டி துணைத்தூதுவர்,
மற்றும்
அம்பாந்தோட்டை துணைத்தூதுவர்களுக்கும்
எமது நன்றிகள்.

இவ் இந்திய பிரதமரின் இலங்கை விஜயமானது
எமக்கான ஓர் உறவுப் பாலமாக அமைந்திட
எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாராளுமன்ற உறுப்பினர்**
**அங்கஜன் இராமநாதன்**

(C29672)(10)

## மரண அறிவித்தல்

## திருமதி சசிகலா செல்வராஜா



தையிட்டி கலைமகள் வீதியை பிறப்பிடமாகவும், குளப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகலா செல்வராஜா (12.05.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கண்மணி தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்ற வர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வராஜா (அற்புதா றேடேர்ஸ் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் அபிநயா (சித்த மருத்துவத்துறை 26 ஆம் அணி)வின் அன்புத்தாயும் ரவீந்திரன் (ஹொலண்ட்), மோகன் (பிரான்ஸ்), விஜிகலா (அஞ்சல் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் சிவகுமார் (துர்க்கா றேடேர்ஸ் கொக்குவில்) ஆகியோரின் மைத்துனியும் சித்தார்த்தனன், றம்மிலா ஆகியோரின் அன்பு மாமியும் ராகவி, நதுமிதன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிசந்தி.**

## மரண அறிவித்தல்

## கந்தப்பு துரைராசா



வட்டுக்கோட்டை மூளாய்வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு துரைராசா நேற்று (12.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செங்கமலத்தின் அன்புக் கணவரும் நளாயினி, சிவாயினி, றயினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சண்முகானந்தனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.05.2017) வெள்ளிக்கிழமை மாலை 3 .00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**மூளாய் வீதி, வட்டுக்கோட்டை**


## இரும்புப்...

ரிந்துரைத்து வழக்கின் 9 சந்தேகநபர்களுக்கும் எதிராக சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப் பத்திரிகை நேற்று யாழ். மேல்நீதிமன்றில் இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டது. 3 நீதிபதிகள் தீர்ப்பாயம் என்பது இறுதி செய்யப்பட்டாலும் வழக்கைக் கொழும்பில் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால் ஆவணங்களை பெட்டகத்தில் வைத்துப் பாதுகாக்குமாறு நீதிபதி ம.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு படுகொலை செய்யப்பட்டார். சந்தேகத்தின் கீழ் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 10ஆம் மற்றும் 12ஆம் சந்தேகநபர்கள் வழக்கிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

கொலைக்குற்றச்சாட்டு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நிறைவடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மேலதிக நடவடிக்கைக்காகப் பாரப்படுத்தப்பட்டது. சந்தேகநபர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 11ஆவது சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டவர் அரச சாட்சியாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் உறுதியுரை செய்தார்.

சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்புக்காக இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்களுக்கு எதிரான.குற்றப்பகர்வுப் பத்திரம் ஒரு வாரத்துக்குள் முன்வைக்கப் படும் என்று சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதியால் நீதிமன்றில் அன்று அறிவிக்கப்பட்டது. அதற்கமைவாக சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு நேற்றுக் கிடைத்தன. வழக்கு ஆவணங்களை இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பாதுகாக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, பதிவாளருக்கு உத்தரவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-12)


## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் செப்பட் நாய்க்குட்டி
விற்பனைக்கு
தொடர்புகளுக்கு .
**077 9851864**

## கடைகள் வாடகைக்கு

யாழ்நகரின் மத்தியில் கடைகள்
வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும் ஏற்றது.
**T.P.077 162 0626**

## தேவை

1. விற்பனை உதவியாளர் (ஆண்)
சாரதி அனுமதிப்பத்திரத்துடன்.
2. எழுதுவினைஞர் (ஆண்) கணினி அறிவு,
ஆங்கில அறிவு அவசியம்
ஆகிய தகைமைகள் எதிர்பார்க்கப்படும். கிராம சேவையாளர் நற்சான்றிதழுடன் சமுகம் தரவும்.
0212052200, 0779789223

## வேலையாள்கள் தேவை

01. அலுமினிய பிற்றிங் தெரிந்தவர்கள்.
02. வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்.
03. வயரிங் வேலை தெரிந்தவர்கள்.

**தொடர்பு .077 813 9761**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன், ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். மோடியின் அருகே சம்பந்தர் அமர்ந்து கொண்டார். ஆங்கிலத்தில் தனது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்.

பல்வேறு விடயங்கள் பற்றியும் கூட்டமைப்புத் தலைவர் விரிவாக விளக்கினார். அதில் முக்கியமாக புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்த விடயம் பேசப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் பற்றி வலியுறுத்தப்பட்டது. இந்தியாவில் உள்ளதைப் போன்று காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கிய பொருள் பொதிந்த அதிகாரப் பகிர்வைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதும் எடுத்துக் கூறப்பட்டது.

அரசமைப்பு முயற்சிகளில் ஏற்பட்டுள்ள கால தாமதம், அதற்கான காரணங்கள் குறித்தும் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. புதிய அரசமைப்பு முயற்சி எதிர்பார்க்கப்பட்டதைவிடத் தாமதமடைவது குறித்த தனது கவலையைக் கூட்டமைப்பு விரிவாக விளக்கியது.

"அரசமைப்பு விவகாரம் கடந்த ஆண்டே முடிவடைந்திருக்கவேண்டும். கடந்த பல விடயங்களும் பேசி ஓர் இணக்கப்பாட்டு நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் நீண்ட தடங்கல் ஏற்பட்டு வருகின்றது. இந்தியா இந்த விடயத்தில் தனது ஈடுபாட்டைக் காட்டவேண்டும்" என்று சம்பந்தர் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் அரசின் வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பது குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டது. தமிழ் மக்களுக்கு இதனால் இந்த அரசு மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளமையும் தெளிவுபடுத்தப்பட்டது.

"வடக்கு - கிழக்கில் இளையோர் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்குவதற்காக, வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் இந்தியா பெரிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்" என்றும் சம்பந்தர் கோரிக்கை விடுத்தார். (உ-5)

## மோடிக்கு...

தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் அன்பானவேண்டுகையை முன்வைத்தார்நேற்று. தான் இந்தியா திரும்புவதற்குச் சற்று முன்னதாக கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் கூட்டமைப்பினரைச் சந்தித்தார் மோடி. சந்திப்பு மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து மோடியுடன் என்ன பேசுவது என்பது தொடர்பில் ஆராய்ந்தனர்.

சந்திப்பின் ஆரம்பத்தில், இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, கூட்டமைப்பினருக்கு கைலாகு கொடுத்தார். கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தனே சுமார் 12 நிமிடங்கள் வரையில் பேசினார். அப்போதே காளி கோயிலுக்கும் கட்டாயம் மோடி வரவேண்டும் என்கிற அழைப்பை அன்பாக விடுத்தார்.

"இறைவன் சித்தம் இருந்தால் அது நடக்கும்" என்று மோடி அதற்குப் பதிலளித்தார். (உ-5)

## உடல்...

நரேந்திர மோடி. இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, கூட்டமைப்பு இடையிலான சந்திப்பு நேற்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் நடந்தது. அப்போதே மோடி இதனைக் கூறினார்.

"நீங்கள் (சம்பந்தன்) இன்று தமிழ் மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கியுள்ளீர்கள். உங்களது பொறுமையான இந்த அணுகுமுறையை நாங்கள் வெகுவாக மெச்சுகின்றோம்; வரவேற்கின்றோம். உங்களுடைய உடல் நலத்தை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" - என்றார். (உ-5)

## தமிழர்களின்...

அதற்குச் சற்று முன்பாக கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில், மாலை 6 மணிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்துப் பேசினார்.

கொழும்பு அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகளில் காலதாமதமின்றித் தீர்வை காணுமாறு மோடி மைத்திரி, ரணில் ஆகியோரிடம் வலியுறுத்தினார். இது குறித்து அவரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் எடுத்துக் கூறினார்.

"நாம் எப்போதும் உங்களுடனேயே இருப்போம். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அண்மையில் புதுடில்லிக்கு வந்த இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எமது இந்த நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தோம். தற்போது நான் இங்கு வந்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்குமாறும், காலதாமதமின்றி தீர்வைக் காணுமாறும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளேன்" என்று மோடி எம்மிடம் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். மோடியுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு கடந்த வருடமே எட்டப்படும் என்று தாம் நினைத்திருந்த போதும் அது நடைபெறவில்லை என்பதை இலங்கை அரசின் கவனத்துக்குத் தாம் கொண்டுவந்தார் என்பதையும் மோடி வெளிப்படுத்தினார் எனச் சுமந்திரன் தெரிவித்தார். (உ-5)

## கூட்டமைப்புக்கு...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடியை அரச தலைவர் வழங்கிய விருந்துபசாரத்தில் சந்தித்த நீங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் பங்குகொள்ளவில்லையா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான் வேண்டாத ஆள் என்பதால் எனக்கு இந்தியத் தலைமை அமைச்சரைக் கூட்டமைப்பினர் சந்திக்கும் நிகழ்வுக்கு என்னை அழைக்கவில்லை. இந்தச் சந்திப்புத் தொடர்பான தகவல்களை அதில் பங்கு கொள்பவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நான் அவர்களுக்கு வேண்டாத ஆள்தானே - என்றார். (த-101)

## அலைகடலெனத்...

இலங்கையில் நடைபெற்ற பன்னாட்டு வெசாக் தின நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையைத் திறந்து வைப்பதற்காகவும், மலையக மக்கள் மத்தியில் உரையாற்றுவதற்காகவும் நேற்று முற்பகல் ஹற்றன் சென்றார்.

இதனை முன்னிட்டு ஹற்றனைச் சூழ பகுதியில் வரலாறு காணாத வகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரும், சிறப்பு அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். கறுப்புப்பூனை பாதுகாப்புப் படையணியின் கொமாண்டோக்களும் களமிறங்கித் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டார்.

அத்துடன், ஹற்றனில் இருந்து நோர்வூட் வரையான பகுதிகளில் மோடியை வரவேற்கும் பதாகைகளை தமிழ் முற்போக்குக் கூட்டணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் காட்சிப்படுத்தியிருந்தன. கட்சிக் கொடிகளைப் பிரதிபலிக்கும் வகையில் தோரணங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. பலத்த பாதுகாப்புக் கெடுபிடி, வாகன நெரிசல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் மோடியை எப்படியாவது பார்த்துவிடவேண்டும் என்று ஆவலுடன் இருந்தனர்.

கொழும்பிலிருந்து சிறப்பு வானூர்தி மூலமாக கிளங்கன் வைத்தியசாலைக்குச் சென்ற மோடி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினரை மத்திய மாகாண சபை முதல்வர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் இணைந்து சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர். வைத்தியசாலையைத் திறந்துவைத்த பின்னர் அங்கிருந்து மோடி உள்ளிட்ட குழுவினர் நோர்வூட் மைதானம் நோக்கி வந்தனர். அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோர் மைதானத்தில் வைத்து மோடிக்கு தமிழ்ப் பாரம்பரியப்படி வரவேற்பளித்தனர்.

மோடி மைதானத்துக்குள் நுழையும்போதே கைதட்டி ஆரவாரக் கோஷம் எழுப்பி அவருக்கு அங்கு குழுமியிருந்த மக்களும் உற்சாக வரவேற்பளித்தனர். இதைக் கண்ட மோடிக்குப் பெரும் ஆனந்தம் ஏற்பட்டது. மேடையில் ஏறிக் கைகளை அசைத்து மக்களை வரவேற்று நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.

மலையகத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அழைத்துவரப்பட்டிருந்தனர். கட்சி, தொழிற்சங்கப் பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஓரணியில் திரண்டு வந்து மோடியை வரவேற்றமை முக்கியத்துவமிக்க சம்பவமாகப் பார்க்கப்பட்டது. அதே போல், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஒரே மேடையில் அமரும் காட்சியும் பார்ப்பவர்களை மகிழ்வடைய வைத்தது.

இரண்டு முதன்மையான மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒன்றில் மோடி உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்களும், ஏனையதில் மாகாண சபை உறுப்பினர்களும் ஏனைய அரசியல் பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தனது உரையின்போது இடையிடையே தமிழ் மொழியிலும் உரையாற்றினார். இதற்கு கைதட்டி மக்கள் பெரும் ஆதரவைத் தெரிவித்தனர். அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானை மோடி புகழ்ந்து பேசியபோதும், திரைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமானின் முகம்தெரியும்போதும் இ.தொ.காவின் ஆதரவாளர்கள் பெரும் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

வரவேற்புரையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் நிகழ்த்தினார். அதுமட்டுமல்ல நிகழ்வு ஆரம்பம் முதல் முடியும்வரை நிகழ்ச்சித் தொகுப்பையும் வழங்கி அமைச்சர் மனோ கணேசன் அசத்தினார்.

பின்னர், மலையகப் பயணத்தை முடித்துக் கொண்டு இறுதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் பேச்சு நடத்திவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார். (த-4)

## வித்தியா...

செய்யப்பட்டு இன்றுடன் 2 வருடங்கள் நிறைவடைந்தது.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்பு படுகொலை செய்யப்பட்டார். அவரது சடலம் மறுநாள் ஆள் நடமாட்டமற்ற பற்றைக்குள் மீட்கப்பட்டது.

மாணவியின் படுகொலையையடுத்து புங்குடுதீவு மக்கள் கொந்தளித்தனர். அது யாழ்ப்பாணக் குடாநாடு வரை பரவியது. அதனால் அதிரடி நடவடிக்கை எடுத்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சகோதரர்கள் மூவரைக் கைது செய்தனர். தொடர்ந்து வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒருவர் ஊர் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். தொடர் விசாரணைகளின் பின் மேலும் 8 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

கொலைக் குற்றச்சாட்டு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் இடம்பெற்றன. மாணவியின் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட திரவம் மரபணுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. எனினும் அதன் அறிக்கையைப் பெறுவதில் வழக்கை முன்னெடுத்துச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பின்னடித்தனர்.

மரபணுப் பரிசோதனை அறிக்கையால் வழக்கின் ஆரம்ப விசாரணைகள் தாமதமாவது தொடர்பில் மாணவியின் குடும்பத்தின் நலன் சார்ந்து முன்னிலையாகி எந்தவொரு மூத்த சட்டத்தரணியும் கோரவில்லை. எனினும் மரபணுப் பரிசோதனை அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது தொடர்பில் அதனை ஆய்வுக்குட்படுத்திய நிறுவனத்தைப் பதிலளிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று கடந்த வருடம் ஏப்ரல் 20ஆம் திகதி கட்டளையிட்டது.

'மரபணுப் பரிசோதனை அறிக்கை தயார் நிலையிலுள்ளபோதும் பொலிஸார் அதற்குரிய பணத்தைச் செலுத்தி மரபணுப் பரிசோதனை அறிக்கையைப் பெறவில்லை' என்று ஜின் ரெக் நிறுவனம் கடந்த வருடம் மே மாதம் 4ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிவித்தது. அதன் பின்னரே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தனர்.

மரபணு அறிக்கை கடந்த வருடம் ஜூன் மாதம் 15ஆம் திகதி மன்றில் முன்வைக்கப்பட்டது.

இதன்பின்னர் நீதிவான் மன்றால் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்கு பதில் அறிக்கை முன்வைப்பதில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தாமதித்தனர். எனினும் கடந்த வருடம் ஜூன் 29ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையின் போதே, வழக்கின் முக்கிய சாட்சி கிடைத்து விட்டார் என்ற விடயத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்னிலையாகிய அரச சட்டத்தரணி, "வித்தியா படுகொலை வழக்கில் பொலிஸாரின் விசாரணைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை சட்டமா அதிபர் திணைக்களம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது" என்று அறிவித்தார்.

இவ்வாறு அரச தரப்பால் ஒவ்வொரு தவணைகளிலும் நீதிமன்றில் காரணங்கள் கூறப்பட்டு வந்தன. மாணவி படுகொலை செய்யப்பட்டு 2 வருடங்கள் இன்றுடன் நிறைவடைந்து விட்டன.

இவற்றுக்கு மேலாக மாணவி படுகொலை செய்யப்பட்டு 2 வாரங்களில் மே மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மாணவியின் தாயாரையும் சகோதரனையும் சந்தித்தார்.

"மாணவியின் படுகொலை குறித்து வன்மையாகக் கண்டிக்கின்றேன். சிறப்பு நீதிமன்று ஒன்றை அமைத்து, அதனூடாகவே கொலைக் குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்கப்படும்" என்று மாணவியின் குடும்பத்தினரிடம் அரச தலைவர் உறுதியளித்தார்.

அதன்பின்னர் கடந்த வருடம் மார்ச் 8ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாண பெண்கள் அமைப்பைச் சந்தித்தார். மாணவி வித்தியாவின் தாயார் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட 3 தாய்மார்களுடன் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினர், நாடாளுமன்றில் பிரத்தியேகமான இடத்தில் தலைமை அமைச்சரைச் சந்தித்தனர்.

"சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சட்டம் ஒழுங்கு அமைச்சு, நீதிச் சேவை ஆணைக்குழு உள்ளிட்ட திணைக்களங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியைக் கொண்ட குழு 2 வாரங்களுக்குள் அமைக்கப்படும். அந்தக் குழுவினர் வடக்கில் இடம்பெற்ற வன்புணர்வு மற்றும் வன்புணர்வின் பின்னரான படுகொலைகள் பற்றிய வழக்குகளைத் துரிதப்படுத்துவர்" என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

அரச தலைமைகள் இருவரினதும் வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. (வ)

## காங்கேசன்...

தாகவும், அதனை சோதனையிட்டபோதே ஹெரோய்ன் இருந்தமை தெரியவந்தது எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

ஹெரோயின் பொதி மீட்கப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை. குறித்த ஹெரோயின் பொதி காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும், இதன் பெறுமதி 9 கோடி ரூபா எனவும் கடற்படையினர் கூறினர்.

மேலதிக விசாரணைகளைக் காங்கேசன்துறைப் பொலிஸார் மேற்கொள்வர் எனவும் கூறப்பட்டது. (த-101)

## முல்லைத்தீவு...

உயிரிழந்ததுடன் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவில் இருந்த நெடுங்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த பிக்கப் ரக வாகனம் திடீரெனக் கோளாறு காரணமாக வீதியை விட்டு விலகி அருகில் உள்ள பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியைச்சேர்ந்த சத்தியராசா றொபின்சன் (வயது22) சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மேலும் 2 பேர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துதொடர்பானமேலதிகவிசாரணையை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-7-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டெறிதலில் சாவகச்சேரிக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தட்டெறிதலில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.
சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி 27.33 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் வேலணை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர்.சுஜிபா வெள்ளிப் பதக்கத்தையும் நல்லூர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் என்.சிவாணுஜா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422-108)





# பல்கலைக்குத் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் மாவட்ட பளுதூக்கல் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய பளுதூக்கல் தொடரில் பெண்கள் 69 கிலோ எடைப் பிரிவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் உள்ள உள்ளக அரங்கில் கடந்த புதன்கிழமை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜி.ரஜினா 77 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் சுன்னாகம் கோல் ஜிம் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.தனுசியா 74 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.கிருசாந்தி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422-108)

# தடைதாண்டல் ஓட்டத்தில் சண்டிலிப்பாய்க்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில்பெண்கள்பிரிவில்சண்டிலிப்பாய்பிரதேச செயலகத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. சண்டிலிப்பாய் பிரதேச் செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.கிருசாந்தி 1 நிமிடம் 19 செக்கன் 6 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். நல்லூர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த என்.சிவாணுஜா வெள்ளிப் பதக்கத்தையும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த் சி.தீபிகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)



# ஈட்டி எறிதல் போட்டியில் சங்கவி வென்றார் தங்கம்

## புதிய சாதனையும் படைத்தார்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஈட்டி எறிதலில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சங்கவி சாதனையுடன் தங்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர், துரையப்பா மைதானத்தில் நேற்றுமுன்தினம் கடந்த புதன்கிழமை என இரு தினங்கள் நடைபெற்றன. ஈட்டி எறிதலில் 2012 ஆம் ஆண்டு சங்கானை பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.ரஜித்தா 35.43 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நிலைநாட்டிய சாதனையை நடப்பு வருடத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய சங்கவி 34.88 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே.அனித்தா 30.35 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கஜனி 26.47 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.
(ம-108-422)

# முப்பாய்ச்சலில் டெனிசன் புதியசாதனை

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான முப்பாய்தலில் நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்து வம் செய்த எஸ்.டெனிசன் புதிய சாதனையைப் படைத்து தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. கடந்த 2010 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.நிசாந்தன் 13.60 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து நிலைநாட்டிய சாதனையை நடப்பு வருடத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.டெனிசன் 13.76 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனைப் படைத்ததுடன் தங்கப் பதக்கத்தையும் தனதாக்கினார்.
காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.கோகுலன் 13:62 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.நிதுசன் 13.45 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கினார். (ம-108-422)




# உயரம் பாய்தலில் சாவகச்சேரி அபாரம்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உயரம் பாய்தலில் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.ரதீஸ் தங்கப்பதக்கம் பெற்றதோடு மூவர் இரண்டாமிடங்களைப் பெற்றனர். யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் நேற்றுமுன்தினம் கடந்த புதன்கிழமை என இரு தினங்கள் நடைபெற்றன. ஆண்களுக்கான உயரம் பாய்தலில் சாவகச்சோரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.ரதீஸ் 1.80 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றார். பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.ஜெனிஸ்ரன், வி.விலக்சன், சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.நிதுஜன் ஆகிய மூவரும் 1.75 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றனர். (ம-108-422)

# விளையாட்டில் வடக்கின் அடைவு மாற்றியமைக்கப்படுதல் அவசியம்

## ரெலோவின் கொள்கைப்பரப்புச் செயலாளர் வேலாயுதம் கணேஸ்வரன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 13
"விளையாட்டைப் பொறுத்தவரை வடக்கு மாகாணம் கடைசி இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை மிக விரைவாக மாற்றியமைக்கப்பட வேண்டும்" இவ்வாறு தெரிவித்தார் சிவன் பவுண்டேசன் நிறுவுனரும் ரெலோவின் கொள்கைப் பரப்புச் செயலாளருமான வேலாயுதம் கணேஸ்வரன்.



யாழ்ப்பாணம் மாவட்ட பளுதூக்கல் சங்கத்தால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே கடந்த புதன்கிழமை போட்டிகள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. சங்கத்தின் தலைவர் மா.இளம்பிறையன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வேலாயுதம் கணேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.
"ஒரு காலத்தில் கல்வியில் முன்னணியில் திகழ்ந்த வடமாகாணம் இன்று 9 ஆவது மாகாணமாக பின்தள்ளப்பட்டுள்ளது. விளையாட்டிலும் அதேநிலையே தொடர்கிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். எமது மாகாணத்திலுள்ள வீரர் வீராங்கனைகள் தேசிய மற்றும் பன்னாட்டுத் தரமுடைய போட்டிகளில் பங்குபற்றி அவற்றில் சாதிக்க வேண்டும். புலம்பெயர் உறவுகள் பலர் வடக்கின் வீரர் வீராங்கனை களுக்கு உதவத் தயாராகவுள்ளனர். அவர்களுடன் எனது நிறுவன மும் இணைந்து செயற்பட்டு போதிய பங்களிப்பை வழங்கும்"என அவர் மேலும் தெரிவித்தார். (ம-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசார் அலி அபார சதம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் அசார் அலி சதம் விளாச 376 ஓட்டங்களைக் குவித்தது பாகிஸ்தான்.


மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் இரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றுள்ளன. இதனால் தற்போது நடைபெறும் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலை உள்ளது.

இந்த ஆட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது மேற்கிந்தியத் தீவுகள். வெறும் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மசூட். அசார் அலி, அசாம் இருவரும் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அசாம். களமிறங்கினார் யுனிஸ்கான். முதல்நாள் முடிவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது பாகிஸ்தான். அசார் அலி 85 ஓட்டங்களுடனும், யுனிஸ்கான் 10 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுமுன்தினம் களமிறங்கினர். சதம் கடந்தார் அசார். 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் யுனிஸ்கான். அரைச்சதம் கடந்தார் மிஸ்பா. மத்திய வரிசையில் அகமட் அரைச்சதம் கடந்து பலம் சேர்த்தார். 127 ஓட்டங்களுடன் அசாரை வீழ்த்தினார் சேஸ். முடிவில் 376 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் சேஸ் 4 இலக்குகளையும், கோல்ட்ர் 3 இலக்குகளையும், பிஸ்கூ 2 இலக்குகளையும், ஜோசப் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)






# நெடுந்தூரத்தின் தங்க நாயகனாக கிருஸ்ணரூபன்

யாழ்ப்பாணம், மே 13

சிறந்தசத்துணவுகள், தரம்மிக்க காலணிகள் கிடைக்கப்பெற்றால் தேசியத்தில் வடக்குக்கு பதக்கத்தைக் கொண்டுவருவேன் இவ்வாறு தெரிவித்தார் ஆயிரத்து 500 மீற்றர், 5 ஆயிரம் மீற்றர், 10 ஆயிரம் மீற்றர் என நெடுந்தூர ஓட்டத்தின் நாயகனாகத் திகழும் காரைநகர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிருஸ்ணரூபன்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை என இருதினங்கள் நடைபெற்றது. ஆயிரத்து 500 மீற்றர், 5 ஆயிரம் மீற்றர், 10 ஆயிரம் மீற்றர் என அத்தனை நெடுந்தூர ஓட்டங்களிலும் காரைநகர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கிருஸ்ணரூபன் தங்கம் வென்றார். இதையடுத்து உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயிரத்து 500 மிற்றர் ஓட்டத்தில் 4 நிமிடங்கள், 32 செக்கன்கள், 2 விநாடிகளிலும், 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் 17 நிமிடங்கள், 10 செக்கன்கள், 8 விநாடிகளிலும், 10 ஆயிரம் மிற்றர் ஓட்டத்தில் 36 நிமிடங்கள், 35 செக்கன்கள், 9 வினாடிகளிலும் இலக்கை அடைந்தே அவர் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-23)

# காலிறுதியில் ஜோகோவிக்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்ன்) ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதிபெற்றார் சேர்பிய வீரர் ஜோகோவிக்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் லோபஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஜோகோவிக். அவர் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்து இரண்டாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

கடந்த வருடம் மத்திய பகுதியில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்த ஜோகோவிக் பின்னர் அதை முர்ரேயிடம் இழந்தார். தரப்படுத்தலை மீண்டும் மீட்டெடுக்க அவர் முக்கிய தொடரொன்றைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)







# ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், மே 13

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 8 அணிகள் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஹென்றிஸ் அணி மோதியது. நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)



பாகிஸ்தான்-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்துடன் பாகிஸ்தான் அணியின் தலைவரான மிஸ்பா, பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வு பெறுகிறார். இதனால் அவர் நேற்றுமுன்தினம் களமிறங்கிய போது மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் இரு.புறங்களிலும் நின்று சிறந்த வரவேற்பு வழங்கினர். (ம)

# இந்திய மண்ணில் விளையாட பாகிஸ்தான் தயார்

லாகூர், மே 13

இந்தியாவுடனான இருதரப்புத் தொடரை இந்திய மண்ணில் வந்து விளையாடுவதற்குத் தயார் என்று தெரிவித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இருதரப்புத் தொடர் மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் கிரிக்கெட் தொடரை நடத்த இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் கடந்த 2014 ஆம் ஆண்டு 'புரிந்து ணர்வு ஒப்பந்தம்' என்ற பெயரில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன.

ஆனால் எல்லையில் நிலவிய பதற்றநிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்தத் தொடருக்குச் சம்மதிக்கவில்லை. பாகிஸ்தான் பல்வேறு அழுத்தங்கள் கொடுத்த போதிலும் இந்தியாவின் தரப்பில் எவ்வித துலங்கல்களும் காட்டப்படவில்லை. இந்த நிலையில் "ஒப்பந்தத்தை செயற்படுத்த வேண்டும் இல்லாவிடில் இழப்பீடு தரவேண்டும்" என்று பாகிஸ்தான் தரப்பில் அண்மையில் வலியுறுத்தப்பட்டது.

இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, "இரு தரப்புத் தொடர் விவகாரத்தில் மத்திய அரசிடமே முடிவெடுக்கும் அதிகாரம் உண்டு" என்று தெரிவித்தது.

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது நிலைப்பாட்டில் மேலும் ஓர் படி இறங்கி வந்துள்ளது. இதன்படி அந்த நாட்டு அணி இருதரப்புத் தொடர்களை இந்தியாவில் எதிர்கொள்ளத் தயார் என்று தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர் கான் நேற்றுமுன்தினம் விடுத்தார்.



இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்று (மினி உலகக்கிண்ணத் தொடர்) அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்விற்பனைக்கு உண்டு**

நல்லநிலையில் உள்ள NISSAN-N16 (Auto gear) Car விற்பனைக்கு உண்டு.

தொடர்பு. 077 480 9019

**வீடு வாடகைக்குண்டு**

நல்லூருக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய மேல் மாடி மற்றும் கீழ் வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு .

077 696 95 11

## தேவை

எமது நிறுவனத்திற்கு பரோட்டா, மசாலாத் தோசை தயாரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**லிங்கன் கீறீம் ஹவுஸ்**
**213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**தேவை**

இங்கிலாந்தில் (UK) உள்ள ஆலயத்திற்கு குருக்கள்/ அர்ச்சகர் தேவை. (2 வருட ஒப்பந்தம்)

தொடர்புகளிற்கு:
becamman@gmail.com

## டெல்லியின் வெற்றியால் தொங்குநிலையில் புனே



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி அணி வெற்றிபெற்றதை அடுத்து புனேயின் பிளே ஓவ் வாய்ப்பு தொடர்ந்தும் தொங்குநிலையில் உள்ளது.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் புனே அணி பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதிபெறும் என்ற நிலை இருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது டெல்லி. அந்த அணி 8 இலக்குகள் இழப்புக்கு 168 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக நாயர் 64 ஓட்டங்களையும், பன்ட் 36 ஓட்டங்களையும், சாமுவேல்ஸ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உனகட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், சுந்தர், சாம்பா, கிறிஸ்ரியன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய புனே 20 பந்துப்பரி மாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 161 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. திவாரி 60 ஓட்டங்களையும், சிமித் 38 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சகீர்கான், சமி இருவரும் தலா 2 இலக்குகளையும், நடீம், கம்மின்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)

**குத்தகைக்கு காணி தேவை**

- கோழிப்பண்ணை அமைக்க குத்தகைக்கு காணி தேவை
- யாழ் நகரில் இருந்து 7km தூரத்தினுள் .நீர். மின்சார வசதியுடன் தேவை.
- 10 பரப்பிற்கு மேற்பட்ட அளவுள்ள காணிதேவை.

தொடர்பு :077 024 1007

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை செல்லையா



54/17, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை செல்லையா நேற்று (12.05.2017) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா வின் அன்புமனைவியும் செல்வநாதன் காலஞ்சென்ற ருக்மணிதேவி மற்றும் சறோஜினிதேவி (லண்டன்), கமலநாதன் (நோர்வே), ஸ்ரீசண்முகநாதன் (லண்டன்), சத்தியநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2017) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**54/17, சுவாமியார் வீதி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**செ. செல்வநாதன் (மகன்)**
**021 222 0518, 077 633 7358**

**கோடிபதி ஷனிதா**

சீட்டிழுப்பு வாரம்: 135
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 12.05.2017

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 86,175,972/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
S 19 53 61 65

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு வாரம்: 564 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 12.05.2017

வெற்றி இலக்கங்கள்
12 13 43 50 P

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 27,153,635/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 12.05.2017 | 2131 | சிவப்பு |

சிம்மம்
20 22 44 51

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 197, 008/=

2017.05.14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## மரண அறிவித்தல்

### அன்ரன் புவிராஜா பஸ்ரியாம்பிள்ளை



யாழ்ப்பாணம் மாட்டன் ஒழுங்கை **Twingle Star**, இல்லத்தை பிறப்பிடமாகவும் **Canada Winnipeg** ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன்புவிராஜா பஸ்ரியாம்பிள்ளை (12.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை (பாடசாலை அதிபர்) - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா - பரம்ஜோதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயதேவி (கனடா) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தனராஜா, லீலாவதி (கனடா), விமலசேகரா, சுசீலாவதி (கனடா), திலகவதி (பிரான்ஸ்), பிறேமாவதி, கீதாவதி, கஜிதாவதி (பிரான்ஸ்), வனிதாவதி (கனடா), கருணாவதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தனதேவி (கனடா), இந்திராதேவி (கனடா), சந்திராதேவி (கனடா), செல்வதேவி (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் அன்ரன்சிறான் (கனடா), அன்ரோ, சாமினி (கனடா), ஆன்கிரோஷினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெனி (கனடா), கரன் (கனடா), கருஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமாவும் அஸ்வின், சாரா, சியாரா, இஸபெல்லா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 08.03.1940 | 12.05.2017 |

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.05.2017) திங்கட்கிழமை **Canada Winnipeg** வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்**

**0012 042878149 (Canada)**

## LapTop பிரியர்களே!

உங்களுக்காக உலகத்தரம் வாய்ந்த
DELL Touch screen Laptopகள்
அறிமுகவிலையில்!!!
யாழில் முதல்முறையாக
நளினில் மட்டுமே!




**DELL LAPTOP 7TH GEN**

| | |
| --- | --- |
| Model | : Dell Inspiron 15 5566 |
| Processor | : Intel Core i3 2.40GHz (7100U) |
| Ram | : 6 GB DDR4 |
| Hard Disk | : 1 TB |
| Optical Drive | : DVD/RW+DL |
| Options | : Wifi/CR/BT |
| Screen | : 15.6 LED Touch Display |
| Graphics | : Shared Graphics |
| Operating System | : Windows 10 Home |
| Web cam | : Yes |

- Warranty:1YEAR
- Price **69,500.00**
- FREE- BAG , MOUSE , NORTON ANTIVIRUS

உங்கள் LapTopகளுக்கு முந்துங்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

* நிபந்தனைக்கு உட்பட்டது.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

**முகாமைத்துவ உதவியாளர்**
**விசேட இறுதிக் கருத்தரங்கு**

**காலம்**
26.05.2017, 27.05.2017
வெள்ளி, சனி
9.00 - 4.00 P.M
**விரிவுரையாளர்கள்**
P. உமாசங்கர்
P. கமல்தாசன்

அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

**SLAS (OPEN/ LIMITED)**
வகுப்புகள் மாதிரிப் பரீட்சைகளுடன் நடைபெறுகின்றன.

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org